www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்


சுடர் 27
கதிர் 121

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 13 திங்கட்கிழமை (26/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து இன்றும் நாளையும் வடமராட்சி மீனவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.
(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

# போர்க்குற்றங்கள் குறித்து அமெ.செனட்டில் அறிக்கை

## ஸ்ரீபன் ராப் அடுத்த வாரம் சமர்ப்பிப்பார்


ஸ்ரீபன் ராப்

வாஷிங்ரன், மார்ச் 26
இலங்கையில்இறுதி போரில் இடம்பெற்ற தாகக்கூறப்படும்போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய விரிவான அறிக்கைஒன்றுஅடுத்த வாரம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இலங்கை மீதானதனது பிடியை இறுக்கும் அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்கு வருகிறது.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைமீதுகொண்டு வரப்பட்ட அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு அடங்குவதற்கு முன் இந்த அறிக்கை வெளிவரவுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க்குற்ற விவகாரங்களைக் கவனிக்கும் தூதுவர் ஸ்ரீபன் ராப் அடுத்த வாரம் அமெரிக்கநாடாளுமன்றின் செனட் சபையில் சமர்ப்பிக்கிறார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து நேரில் விசாரணைகளை நடத்து 04

## அமெரிக்காவுடன் முறுகலுக்கு தயாராகிறது இலங்கை

### அமெ.உயர் அதிகாரியின் உரை இறுதி நேரத்தில் திடீர் ரத்து

கொழும்பு,மார்ச்26
ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய அமெரிக்காவுக்கு இலங்கை அரசு பதிலடி கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, கொழும்பில் உள்ள லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் அமெரிக்க அரசின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் நிகழ்த்தவிருந்த உரையை எந்தக்காரணமும் கூறாமல் இலங்கை அரசு திடீரெனக் கடைசிநேரத்தில் நிறுத்தியுள்ளது.

தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் ஜே டிலானி வரும் 27ஆம் திகதி லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில், தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் பொருளாதார அபிவிருத்தியின் பங்கு என்ற தலைப்பில் முக்கிய 04

## பரிந்துரைகள் செயல்களாகும்

### முன்னரே தீர்மானித்து விட்டோம் என்கிறார் பிரதமர் டி.எம்.ஜயரட்ன

கொழும்பு,மார்ச் 26
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவினரது அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்தார்.

சிலாபம், மாதம்பே பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


''வெளிநாடுகள் கேட்டுக்கொள்வதற்கு முன்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான 04

## ஜெனிவாவில் நடந்தது என்ன?

### இலங்கை இன்று தெரிவிக்கும்

கொழும்பு,மார்ச் 26
ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தைத் தோற்கடிக்க இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் 04

## தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்புத் தேவை



கொழும்பு.மார்ச் 26
இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் அமெரிக்கா நிறைவேற்றிக் கொண்ட தீர்மானம் குறித்து இலங்கை மக்களி 04

### படைக் குறைப்பு நடவடிக்கை

1,600 தமிழர்களை பொலிஸில் இணைத்துக் கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜப்பானில் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான சிறப்புத்தூதர் யசூசி அகாஷியை அங்கு சந்திக்கையில் அவர் இதனைக் கூறினார். வடக்கு - கிழக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையையும் இலங்கை எடுத்திருப்பதாக ஜப்பான் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### கால எல்லை கிடையாது

போர்க் குற்றங்களை இழைத்த படையினரை இனங்காண்பதற்கு இராணுவ நீதிமன்ற விசாரணைகளை முடிப்பதற்கான காலவரையறை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். விசாரணைகள் சுமுகமாக நடைபெற்று வருவதாகவும் நிறையப் பேரிடம் பேச வேண்டியிருப்பதாலும் ஒவ்வொன்றையும் ஆழமாகப் பார்க்க வேண்டியிருப்பதாலும் விசாரணை எப்போது முடியும் என்று சொல்ல முடியாது என்றார் அவர்.

### கோவையில் நூதனப் போராட்டம்

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்ற நிலையில் கோவையில் நூதனப் போராட்டம் நடைபெற்றது. அனுமன் சேனா அமைப்பைச் சேர்ந்த 50 பேர் அதன் தலைவர் ஸ்ரீதர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தோஷ் ஆகியோர் தலைமையில் கோவை போரூரில் உள்ள படித்துறைக்கு வந்தனர்.அங்கு மாவட்ட துணைச் செயலாளர் தேவ கோவிந்தராஜ் தலைமையில்7பேர்மொட்டை அடித்தனர். ஈழத்தில் இந்துக் கோயில்களை இடித்தவர்கள் ஒழிய வேண்டும்என அவர்கள் கோஷமிட்டனர்.

### கைது செய்ய நடவடிக்கை

இந்தியாவில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்த ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகளை இந்திய மத்திய குற்றப் புலனாய்வு பிரிவு ஆரம்பித்துள்ளது.போலியான கடனட்டைகளை உபயோகித்து சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

### ஐ.தே.க.வினர் குழு மோதல்

மொனராகலை, மெதகம மீகஹவங்குற பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய இரண்டு பிரிவினருக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

## ஐ.நா.விலிருந்து விலகுங்கள்

### அரசுக்கு ஐ.தே.க. ஆலோசனை

கொழும்பு,மார்ச் 26
ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களுக்கு அமையச் செயற்பட முடியாவிட்டால் அதன் உறுப்புரிமையில் இருந்து இலங்கை விலகிக்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி 04

# இலங்கை விவகாரத்தைக் கையாளும் கொள்கையை மாற்றுகிறது இந்தியா

## புதுடில்லியின் அதிரடி முடிவால் தொடர் அதிர்ச்சியில் கொழும்பு

புதுடில்லி, மார்ச் 26
இலங்கை விவகாரங்களைக் கையாள்வது தொடர்பில் இதுவரை காலமும் பின்பற்றிவந்த கொள்கையில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களைச் செய்வதற்கு இந்திய மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றன.

காங்கிரஸின் இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் இலங்கை அரசின் உயர் மட்டத்திற்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது எனவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்த பின்னர் இலங்கை அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்து மிக நீண்டநேரம் பேச்சு நடத்தி இலங்கையின் கவலையை வெளியிட்டிருந்தார். அதேசமயம், தற்போதைய நிலைமைகள் குறித்து இந்திய மத்திய அரசின் உயர்மட்டப்பிரமுகர்களுடன் அவசர சந்திப்பொன்றை ஏற் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.3%

கொழும்பு, மார்ச் 26

கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.3 வீதம் எனக் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் 2010ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 வீதம் காணப்பட்டதெனக் குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2011ஆம் ஆண்டில் தொழிநுட்ப ரீதியில் 10.3 வீதவீதம் வளர்ச்சியும் சேவை ரீதியில் 8.6 வீத வளர்ச்சியும் பதிவாகியுள்ளது. விவசாயத் துறையில் 1.5 வீத வளர்ச்சியே 2011 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது.

இலங்கைக்கு சர்வதேச ரீதியில் பல்வேறு அழுத்தங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் பாதிக்கப்பட்ட நிலையில் பொருள்களின் விலை அபரிதமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி அறிக்கை வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# ஜெனிவா தீர்மானம் டில்லிக்கும் பாதகம்

### அமைச்சர் பஸில் கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 26

இலங்கைக்கெதிரான ஜெனிவாத் தீர்மானம், இந்தியாவுக்குப் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜெனிவாத் தீர்மான முடிவுகள் இந்தியாவின் பிராந்தியத் தலைமைத்துவத்துக்குச் சவாலாக அமைந்துள்ளது. தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் பெரும்பான்மையானவை என இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன.



இந்தியா, அமெரிக்காவுக்கு ஆதரவாக வாக்களித்தது. எனினும், மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வெளியிட்டிருந்தன.

மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்காத பாகிஸ்தானும் இலங்கைக்கு ஆதரவை தெரிவித்திருந்தது.

இதன்படி, பிராந்தியத்தின் தலைமைத்துவப் பதவிக்கான தகுதியை இந்தியா இழந்து வருவதாக அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (த)

## அமெரிக்காவின் தீர்மானம் தவறான முன்னுதாரணம்

### தமரா குணநாயகம் சீற்றம்

ஜெனிவா, மார்ச் 26

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் முன்வைத்த பிரேரணை நிறைவேற்றப்பட்டமை ஒரு தவறான முன்னுதாரணம் என ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தநிலை, ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகளுக்குச் சவாலானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த பிரேரணை மூலம் சில நாடுகள் தங்களுடைய அரசியல் தேவைகளுக்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையைப் பிணை வழங்குநராகப் பயன்படுத்தியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கை தனது இறைமை, சுயாதிபத்தியம், கௌரவம் என்பவற்றைக் காப்பாற்ற போராடும் எனவும் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார். (த)

## இலங்கையின் மிரட்டலுக்கு சர்வதேசம் பயப்படாது

### தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 26

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் தொடர்பாக மக்களின் ஆணையை பெற்றுக்கொள்வதற்குப் புதிய தேர்தலை அல்லது சர்வஜனவாக்கெடுப்பை நடத்துமாறும்விடுக்கப்பட்ட கோரிக்கை முட்டாள்தன மானது. அரசின் இந்த மிரட் டல்களுக்கு சர்வதேச சமூகம் பயப்படாது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

இது மிக முட்டாள்தனமானது. அத்துடன் இது எமது பிரச்சினைகளைத் தீர்க்காது. அதேவேளை காட்டுச்சட்டத்தை சர்வதேச சமூகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

முதலாவதாக இந்த அரசு எவ்வாறு தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வெற்றி பெற்றது என்பதை நாம் அறிவோம். அவர்கள் அனைத்தையும் சட்டவிரோதமாகச் செய்து மக்களின் உண்மையான விருப்பத்தை அகற்றினார். இரண்டாவதாக, இத்தீர்மானம் குறித்த விடயங்களைப் புதிய வாக்கெடுப்பு எவ்வாறு தீர்க்கும்?' எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் தொடர்ச்சியான ஏமாற்றுகளின் காரணமாக முதல் தடவையாக, சர்வதேச சக்திகளிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற நேரிட்டுள்ளது. மக்களைக் கிளர்ந்தெழச் செய்து சர்வதேசச் சதி என்ற திரைக்குப் பின்னால் அரசு மறைந்து கொள்கிறது. இது வாக்களிப்பில் உதவாது. இப்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இனி இது போன்ற முட்டாள்த்தனமான பேச்சுகளை பேசுவதற்குப் பதிலாக இதுவரை கூறப்பட்டு வந்ததை பின்பற்ற வேண்டும்.

சர்வதேச சமூகமானது இந்நாட்டுக்கு எதிரானது அல்ல. எனவும் தற்போதைய அரசுக்கே அது எதிராகவுள்ளது.

அரசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவது, அரசின் அமைச்சரால் கூட இன்றுவரை மேற்கொள்ளப்படும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் என்பன நிறுத்தப்பட வேண்டும். இது குறைந்த பட்சம் எமது நாட்டின் மீதான நம்பகத்தன்மைக்கு உதவும்.

இப்போது தேர்தல் நடந்து புதிய ஆணையை அரசு பெற்றால்கூட சர்வதேச சமூகத்தின் மனதில் அது மாற்றத்தை ஏற்படுத்தாது-என்றார். (த)

# அரசு இன்னும் பல பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது

### அதில் தீர்வுக்குரிய விடயமும் அடக்கம் என்கிறார் டியூ

கற்றுக்கொண்ட பாடங்களைவிட அரசுக்குக் கற்றுக்கொள்ளவேண்டிய பல பாடங்கள் உள்ளன. அவற்றை இனங்கண்டு விரைவில் கற்றுத் தேறுமானால், பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துவிடலாம். இதில் தீர்வு விடயமும் உள்ளடங்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவுள்ளது என வெளியாகியிருந்த செய்திகளை முற்றாக நிராகரித்த அமைச்சர், அரசுக்கு அவ்வாறானதொரு எண்ணம் இருந்தால் அதனைப் பகிரங்கமாக அறிவிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவரம் தொடர்பான பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளதையடுத்து, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் கேட்டபோதே சிரேஷ்ட அமைச்சர் டியூ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு அரசு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவுள்ளது என வெளியாகியுள்ள தகவல்கள் பொய்யானவை. அதில் எதுவித உண்மையும் இல்லை.

முக்கியமானதொரு பிரச்சினை குறித்து அரசு ஏதாவதொரு தீர்மானம் எடுத்திருந்தால் அதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும். நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் தவறாகக் கருத்துகள் வெளியாகியுள்ளன என்பது மட்டுமே தற்போதுள்ள உண்மை.

நாம் எவற்றையெல்லாம் உள்நாட்டில் செய்துமுடிக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் திறம்பட செய்து முடிப்போம். எமக்கு வெளி தலையீடுகளின் அழுத்தங்கள் அவசியமில்லை.

அரசு, கற்றுக்கொண்ட பாடங்களைவிட கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் உள்ளன. அவற்றை கற்றுத்தேறாததன் காரணமாகத்தான் இன்று உள்நாட்டில் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுத்துள்ளன. எனவே, அவ்வாறான விடயங்களை இனங்கண்டு அரசு கற்றுத்தேறவேண்டும்.

அதில் குறிப்பாக நாட்டில் 30 வருடங்களுக்கு மேலாகப் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழியை அரசு சிறந்த முறையில் கற்க வேண்டும் - என்றார்.

## பொன்சேகாவை விடுவித்திருந்தால் ஜெனிவாவின் முடிவு மாறியிருக்கும்

### அனோமா பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

உள்நாட்டில் இடம் பெற்ற போர் தொடர்பில் அனைத்து சம்பவங்களையும் அறிந்த எனது கணவரை விடுதலை செய்திருந்தால் இன்று நாடு இந்தளவு பிரச்சினையை எதிர்நோக்கியிருக்காது எனத் தெரிவித்தார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா.

சரத் பொன்சேகா விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகிய நிலையில் அதுபற்றிக் கேட்ட போதே, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவா மாநாடு நடைபெற்ற காலப்பகுதியில்தான் எனது கணவர் விடுதலை செய்யப்படுவார் என செய்திகள் வெளியாகின. தற்போதும் அவ்வாறே கூறப் படுகின்றது. ஆனால், அது தொடர்பில் எமக்கு எதுவும் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஜெனரலை விடுதலை செய்து ஜெனிவாவுக்கு கொண்டுசென்றிருந்தால் பிரச்சினை இந்தளவுக்கு விஸ்வரூபமெடுத்திருக்காது என அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதனைத் தவறு எனக் கூற முடியாது.

ஏனெனில், போர் தொடர்பில் அனைத்து சம்பவங்களையும் நன்கறிந்தவர் பொன்சேகாதான். அத்துடன் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததும் அவரின் தலைமையின் கீழ்தான். - என்றார். (த)

## டோஹா மாநாட்டுக்கு அழைப்பு

கொழும்பு, மார்ச் 26

12 ஆவது டோஹா மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு டோஹா கட்டாரின் அதிபர் அமீர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள கட்டார் தூதுவர் செய்யத் அப்துல்லாஹ் அல்- மன்சூர் - கட்டார் அமீரின் அழைப்பை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இந்த அழைப்பை ஏற்ற ஜனாதிபதி இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்டகால பரஸ்பர நல்லுறவை நினைவுபடுத்தியதோடு விசேடமாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கட்டார் அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார்.

# தமிழீழம் அமைக்கவே அமெ. - இந்திய கூட்டு

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

இலங்கையில் படைமுகாமொன்றை அமைப்பதற்கான அமெரிக்காவின் சதிமுயற்சியே ஜெனிவாத் தீர்மானம் எனப் பரபரப்பான குற்றச்சாட்டை முன் வைத்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், மஹிந்த ஆட்சியைக் கவிழ்த்து தனி ஈழத்தை உருவாக்கும் கபட நோக்கத்துடனேயே அமெரிக்காவும் இந்தியாவும் கைகோர்த்துச் செயற்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குண தாச அமரசேகர மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவா மாநாட்டில் நீதியை அதிகாரம் மழுங்கடித்துவிட்டது. நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அல்ல இது. நாட்டைக் கூறுபோடுவதற்கான சதிமுயற்சியே. இலங்கையில் படைமுகாமொன்றை நிறுவி ஆசியாவை ஆட்டிப் படைக்கும் திட்டத்திற்கு ஜெனிவாவில் அத்திவாரம் அமைத்துள்ளது அமெரிக்கா. இதுகூடப் புரியாமல் அமெரிக்காவுடன் கொஞ்சிவிளையாடுகிறது டில்லி.

மஹிந்த அரசை விரட்டியடித்துவிட்டு, நாட்டை இரண்டாகக் கூறுபோடுவதற்கே வாஷிங்டனும், டில்லியும் கைகோர்த்துள்ளன. இந்தியாவின் இந்தப் புதிய நட்பு ஆசியாவுக்கும் நல்லதல்ல என்றே நாம் கருதுகின்றோம்.

தீர்மானங்களுக்கு அஞ்சி அரசு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தக்கூடாது. அவ்வாறு அது செய்யுமானால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தமாட்டோம் என அரசு உறுதியளிக்க வேண்டும். இதனைவிடுத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதெல்லாம் மடத்தனமாகும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்பை எதிர்த்து வடமராட்சியில் மீனவர் இன்று தொழில் புறக்கணிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 26 வடகடலில் இந்திய மீனவர் அத்துமீறலைக் கண்டித்து கடல்தொழிலுக்குச் செல்வதைப் புறக்கணித்து வடமராட்சி மீனவர்கள் இன்றும் நாளையும் பெருமெடுப்பில் போராடப் போகின்றனர் என்று அறிவித்துள்ளனர்.*

## நாளை பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் ஏற்பாடு

"இந்திய மீனவர்கள் வடமராட்சிக்கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கண்டித்தும் அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்காதைக்கண்டித்தும் தொழில் புறக்கணிப்புப் போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணி என்பவற்றை பருத்தித்துறையில் நடத்தவுள்ளோம்'' என்று வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாசத்தின் செயலாளர் த.சந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் தொண்டமானாறு முதல் முனைக் கடற்பகுதி வரை உள்ள எந்த மீனவர்களும் இன்று கடலுக்குச் செல்லமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நாளை **செவ்வாய்க்கிழமை பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி** ஒன்றும் **பருத்தித்துறையில்** ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒரு பேரணி சுப்பர்மடத்திலிருந்து காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை நான்காம் குறுக்குத்தெருவை அடைந்து அங்கிருந்து கிளம்பி மீன் சந்தையை வந்தடையும். இதேபோன்று பருத்தித்துறை முனைப் பகுதியில் இருந்து புறப்படும் மற்றைய பேரணியும் பருத்தித்துறை மீன் சந்தையை வந்தடையும். இந்தப் பேரணிகள் இரண்டும் மீன் சந்தையில் ஒன்று சேர்ந்து பின்னர் பருத்தித்துறை பஸ் நிலைய பிரதான வீதியூடாகச் சென்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தை வந்தடையும். பேரணியின் இறுதியில் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாக வடமராட்சி வடக்கு கடல்தொழில் சமாசச் செயலாளர் த. சந்திரதாஸ் மேலும் தெரிவித்தார். (உ-15-8)

## நீதிமன்ற கணக்காளரின் வீட்டில் கொள்ளையர்கள் அட்டகாசம்

### யாழ்.நாவலர் வீதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 26 யாழ்.மேல் நீதிமன்ற ஆளுகைக்குட்பட்ட வலயக் கணக்காளரது வீட்டில் மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளையர்களின் தாக்குதலில் தலையில் படுகாயமடைந்த அவரது மனைவி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்.

கலைச்செல்வன் சுதர்ஜினி (வயது 37) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தார். இவர் யாழ்.தபால் திணைக்கள கணக்காளராவார்.

கடந்த செவ்வாய் அதிகாலை யாழ்.நாவலர் வீதியில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன் கதவை உடைத்து கொள்ளையர்கள் உள்நுழைந்தபோது வீட்டிலிருந்தவர்கள் அறையொன்றினுள் பாதுகாப்புக்காகச் சென்றபோது அறைக் கதவையும் உடைத்துத் திறந்துள்ளனர். அதன் போதே சுதர்ஜினி படுகாயமடைந்தார்.

சம்பவத்தையடுத்து கூக்குரலிடவே அயலவர்கள் விழித்து சம்பவ இடத்துக்குச் சென்றபோது கொள்ளையர்கள் மடிக்கணினியையும், கையடக்கத் தொலைபேசியையும் எடுத்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர்.

கொள்ளையர்கள் தலைக்கவசம், செருப்பு என்பவற்றையும் விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தின் போது வீட்டுக்கு வெளியேயும் பலர் உரையாடிய வண்ணம் நின்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து மோப்ப நாய்களுடன் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

கடந்த வாரத்திலும் நாவலர் வீதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் - இரவு வேளையில் புகுந்த சிலர் பணத்தையும் பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## எரிபொருள் விலை எகிறினாலும் நுகர்வில் எந்த மாற்றமுமில்லை

*யாழ்ப்பாணம், மார்ச் 26 எரிபொருள் விலையேற்றத்தின் பின்னர் வடபகுதியில் நுகரப்படும் எரிபொருள்களின் அளவில் எந்த மாற்றமும் இல்லை எனத் தெரியவருகிறது.*

*கடந்த மாதம் 12 ஆம் திகதி நள்ளிரவு எரிபொருள்களின் விலை சடுதியாக அதிகரித்தது. பெற்றோலின் விலை 12 ரூபாவாலும், டீசல் 31 ரூபாவாலும் மண்ணெண்ணெய் 35 ரூபாவாலும் அதிகரித்தது.*

*இந்த விலையேற்றத்தின் பின்னரும் எரிபொருள் நுகர்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.*

*வடபகுதியில் தினசரி சுமார் 50 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோல் நுகரப்பட்டு வந்தது. எரிபொருள் விலையேற்றத்தின் பின்னரும் சுமார் அதே அளவு பெற்றோல் நுகரப்பட்டு வருகிறது.*

*வாகனப் பயன்பாடு சற்று அதிகரித்துள்ள நிலையில் பெற்றோலின் நுகர்வு அளவில் மிகச் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.*

*இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் 15 லட்சத்து 18 ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 44 லட்சத்து 91 ஆயிரம் லீற்றர் டீசலும், 13 லட்சத்து 29 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும் நுகரப்பட்டுள்ளது.*

*28 நாள்களைக் கொண்ட கடந்த பெப்ரவரி மாதம் 15 லட்சத்து ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 49 லட்சத்து 59 ஆயிரம் லீற்றர் டீசலும் 11 லட்சத்து 48 ஆயிரம் மண்ணெண்ணெயும் நுகரப்பட்டுள்ளது. (ம-3)*



ஆஸ்திரேலிய தமிழ் நலன்புரி நிதியத்தின் அனுசரணையுடன் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கு யாழ். அலுவலகத்தில் வைத்து சைக்கிள்களை வழங்கியது.

## நடைபாதைக் கடைகள் அதிகரிப்பு மானிப்பாய் நகரில் நெருக்கடி நிலை

யாழ்ப்பாணம்,மார்ச் 26 மானிப்பாய் நகரப் பொதுச் சந்தைக்கு முன்பாக நடைபாதைக் கடைகள் நாளாந்தம் அதிகரித்து வருவதால் இங்கு பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடைபாதைக் கடைகளால் மானிப்பாய் நகரில் உள்ள வியாபார நிலையங்களின் செயல்பாடுகள் பெரிதும் பாதிப்படைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடைபாதைக் கடைகள் அதிகரிப்பால் வாகன நெரிசல் ஏற்படுவதாகவும் மானிப்பாய் பகுதி வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தென்னிலங்கை வியாபாரிகள் சந்தையின் இரு பக்க வீதி ஓரங்களிலும் தறப்பாள்களை விரித்து தமது பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தக் கடைகள் அதிகமாக ஞாயிற்றுக்கிழமைகளில் புதிது புதிதாக முளைக்கத் தொடங்குகின்றன. பொது மக்கள் நடைபாதைக் கடைகளில் பொருள்களை வாங்குவதற்கு ஆர்வம் காட்டுவதன் காரணமாக வர்த்தக நிலையங்களில் பொருள்களை வாங்குவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதன் காரணமாக நிரந்தரமாக வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு வரிப் பணம் செலுத்தும் விற்பனை நிலையங்கள் தமது பொருள்களைச் சந்தைப் படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சந்தைக்கு முன் உள்ள வீதி பிரதான வீதி என்பதால் அதிகளவு வாகனங்கள் பயணிக்கின்றன.

இதனால் விபத்துகள் ஏற்படும் நிலைமையும் தோன்றியுன்னது.

எனவே இது தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மானிப்பாய் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

## குப்பைக்குள் செல்லும் தக்காளி

*யாழ்.மாவட்டத்தில் தக்காளிப்பழத்தின் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.இதனால் வியாபாரிகள் தக்காளிப் பழத்தை குப்பைக்குள் கொட்டி விட்டுச் செல்வதை மரக்கறி சந்தைகளில் அவதானிக்க முடிந்துள்ளது. கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் தக்காளிப்பழச் செய்கை முடிவடையும் போது அறுவடைக் காலங்களில் தக்காளிப்பழத்துக்கு ஓர் மவுசு காணப்பட்டது. தக்காளிப்பழத்தைக் கொள்வனவு செய்து ஜாம் தயார் செய்யும் தொழிற்சாலைகள் அதிகமாகக் காணப்பட்டமையே இதற்குக் காரணம்.*

*தற்போது ஜாம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் செயலிழந்து காணப்படுவதால் விவசாயிகள் தக்காளிப் பழத்தை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். நுகர்வோரின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணத்தாலும் சேகரித்து வைக்க முடியாமையாலும் இவை குப்பைக்குள் செல்கின்றன. (ம-14)*

## சாவற்கட்டு துர்க்கை அம்மனின் 8 பவுண் தங்க நகைகள் திருட்டு

நவாலி, மார்ச் 26 ஆனைக்கோட்டை சாவற்காட்டு துர்க்கை அம்மன் ஆலயத்தில் 8 பவுண் நிறையுடைய அம்மனின் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இரவு ஆலயக் கூரை மீது ஏறி ஓடுகளைக் கழற்றி உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 8 பவுண் நிறையுடைய நகைகளைத் திருடிக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரி ஐ.பி.சந்திரபாலா தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

## துரத்திப் பிடித்தனர் வாகனத்தை அதற்குள் இருந்தன ஆயுதங்கள்

நவாலி, மார்ச் 26 மானிப்பாயில் வேகமாகச் சென்ற வான் ஒன்றைத் துரத்திப் பிடித்த பொலிஸார் அதனுள் இருந்து வாள், கத்தி உட்படப் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத்தெரியவந்துள்ளதாவது:-

மானிப்பாயில் இரவு நேரம் வேகமாக வந்து கொண்டிருந்த வாகனமொன்றை நிறுத்துமாறு பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதன்போது நிறுத்தாது சென்ற குறித்த வானை பொலிஸார் துரத்திப் துரத்திப் பிடித்தனர். இந்த நிலையில் அதற்குள் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் அவ்வாறு மறைத்துச் செல்லப்பட்ட ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

இரு தினங்களுக்கு முன்னர் வழமை போல் தமது இரவு நேரக் கடமையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போது மிக வேகமாக வாகனமொன்றுவந்து கொண்டிருந்தது.

அவர்கள்இந்த வாகனத்தை வழி மறித்தனர். ஆனால் வாகனம் பறந்து சென்றுவிட்டது. இந்த நிலையில் அங்கு நின்ற கரிச்சந்திரா, வீரசிங்க, தமித்த, பியசேனா ஆகிய பொலிஸார் அதனை துரத்திச் சென்று சண்டிலிப்பாயில் வைத்து மடக்கிப் பிடித்தனர். இந்த நிலையில் வாகனத்தின் சாரதியும் அவருடன் இருந்தவரும் மதுபோதையில் இருந்ததால் வாகனத்துடன் இவர்களும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (ம-100)

## நிகழ்வுகள்

### அடிக்கல் நடும் நிகழ்வு

அச்சுவேலி சரசாளி சித்திர வேலாயுதர் ஆலய ஆரம்பகால பூசகரும் உரிமையாளரும் ஆகிய வெள்ளையன் குழந்தை ஐயா ஞாபகார்த்த மண்டப அடிக்கல் நடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி ஆலயத்துக்கு அருகில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், வலி.கிழக்குப் பிரதேசசெயலர் எம்.பிரதீபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-11)

### கூட்டம்

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு வலி.மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### மகளிர் தினம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம், மகளிர் அபிவிருத்தி அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியனவற்றின் ஒன்றிணைவில் சர்வதேச மகளிர் தினவிழா முற்பகல் 10 மணிக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் த.ஜெயராசன், யு.என்.டி.பி. நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் சி.ஞானகணேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மீதான ஒடுக்குமுறையின் எதிர்விளைவே ஜெனிவா தீர்மானம்

### ஜனநாயக மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சி தெரிவிப்பு

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மஹிந்த சிந்தனை அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையினதும் யுத்த வெற்றி என்ற மமதையினதும் எதிர்விளைவேயாகும். இந்தத் தீர்மானமும் அதன் மீதான விவாதங்களும் சர்வதேச அரங்கில் இலங்கை அரசிற்குத் தரக்குறைவையும், தலைகுனிவையும் ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை, இலங்கை மீது தனது ஆதிக்கப்பிடியை ஐ.நா. மூலம் வலுப்படுத்திக் கொள்வதற்குக் காத்திருந்த அமெரிக்காவிற்கு ஜெனிவாத் தீர்மானம் தகுந்த சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளது. இவற்றுக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியும் அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுமே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக மார்க்ஸிஸ - லெனினிஸக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் ஜெனிவாத் தீர்மானம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மையும் அதன் காரணமான கொடிய யுத்த முன்னெடுப்புகளுமாகும். அதனாலேயே போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன.

இன்று யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்த பின்னரும் அவற்றின் தொடர்ச்சியாக அரசியல் தீர்வு நிராகரிப்பும், ஜனநாயக மறுப்புகளும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சூழலிலேயே ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை மூலம் இலங்கை விடயத்தை ஐ.நா. தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டுவந்து மனித உரிமைகள் பேரவைக்குக் கையளித்தது. இச்சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திய அமெரிக்கா ஜெனிவாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியதன் மூலம் தனது ஆதிக்கப் பிடிக்குள் இலங்கையை இறுக்கிக்கொள்ள முனைந்து நிற்கின்றது.

முன்னர் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்குப் பின்னால் இருந்துகொண்டு இலங்கை மீதான தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த அமெரிக்கா முயன்று அதில் வெற்றிபெற இயலவில்லை. ஆனால், இப்போது ஐ.நா.மூலம் தனது தலையீட்டை மீளக் கொண்டு வந்துள்ளது. இது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தில் அல்ல. அல்லது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுத்துக் கொடுக்கும் வழியிலும் அல்ல. கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பூகோள ஆதிக்க நோக்கின் அடிப்படையிலானதேயாகும்.

நாடுகளின் மீது தலையீடுகளையும் ஊடுருவல்களையும் செய்வதற்கு அமெரிக்கா பின்பற்றி வந்த உள்நாட்டு முரண்பாடுகளைப் பயன்படுத்துவது என்பதன் அடிப்படையிலேயே ஜெனிவாத் தீர்மானத்தையும் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. அதனைத் தடுத்து நிறுத்தி அமெரிக்காவின் உள்நோக்கத்தை முறியடிப்பதற்கு உள்ள ஒரே வழி தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைத் தாமதமின்றிக் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதி வேண்டியே ஐ.நா. சென்றேன்

### நட்டைக் காட்டிக் கொடுக்கவல்ல என்கிறார் சந்தியா எக்னலியகொட

எனது கணவர் தொடர்பிலான விடயங்களை இலங்கை அரசு வெளியிட வேண்டும். அதற்காகவே நான் ஐ.நா. சென்றேன். மாறாக நாட்டைக் காட்டிக்கொடுக்க அங்கு செல்லவில்லை என்றார் காணாமல் போன ஊடகவியலாளராக பிரகீத் எக்னலியகொடவின் மனைவி.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நடைபெற்ற கூட்டத்தொடரின் பிரத்தியேக நிகழ்வென்றில் கலந்து கொள்ளச் சென்ற சந்தியா எக்னலியகொட நேற்று நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார், நான் ஜெனிவா சென்றிருந்தேன். 19 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற பிரத்தியேக நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றேன். மாலை 4 மணியளவில் அந்த நிகழ்வில் நான் கலந்துகொண்டேன். அதன்போது, இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பாக நான் கருத்து வெளியிட்டேன்.

நான் அவ்விடத்தில் உரை நிகழ்த்தியதன் பின்னர், மிகவும் மோசமான முறையிலேயே இலங்கை அரசு நடந்துகொண்டது. மொஹான் பீரிஸ் இந்த விடயம் தொடர்பாக எதனையும் கூற மறுப்பதனால், இது குறித்து அவரின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்காகவே நான் அங்கு சென்றேன். அவ்வாறில்லாமல், நாட்டை காட்டிக் கொடுப்பதற்காக அங்கு செல்லவில்லை என்றார்.

# அமெரிக்காவுடன் முறுகலுக்கு தயாராகிறது இலங்கை

01↘ உரை ஒன்றை நிகழ்த்தவிருந்தார். ஆனால் திடீரென இறுதி நேரத்தில் அவரது உரை நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் மைக்கல் டிலானி வரும் 27ஆம் திகதி திட்டமிட்டபடி இலங்கைக்கு வருவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவருக்கான விசா அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும், கொழும்பில் இருதரப்பு வர்த்தக உறவுகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார் என்றும் இலங்கையின் வர்த்தகத் தொழில்துறை அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

எனினும் இவரது உரை நிறுத்தப்பட்டதற்கான காரணத்தை லக்ஸ்மன் கதிர்காமர் நிலையம் தெளிவுபடுத்த மறுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் கந்தகாரில் அமைந்துள்ள நேட்டோவின் தென்பிராந்திய கட்டளைப் பணியகத்தில் முன்னர் அரசியல் ஆலோசகராகப் பணியாற்றிய மைக்கல் டிலானி, அதன் பின்னரே தற்போதைய பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரியான இவர், உலகளவிலான அமெரிக்காவின் வர்த்தக கொள்கைகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பவராவார்.

இவரது உரைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அனுமதி வழங்கியிருந்தார்.

ஆனால், வெளிவிவகார அமைச்சைக் கண்காணிக்கும், இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகரான சஜின் வாஸ் குணவர்த்தனவே இவரது உரையைத் திடீரென நிறுத்துமாறு உத்தரவிட்டதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

டிலானி ஒரு அமெரிக்கர் என்றும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்த அமெரிக்கரை இங்கு பேசவிடக் கூடாது என்ற அடிப்படையிலேயே இந்த உரை நிறுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# போர்க்குற்றங்கள் குறித்து அமெ.செனட்டில் அறிக்கை

01↘ வதற்காகக் கடந்த பெப்ரவரி மாதம் ஸ்ரீபன் ராப் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இதன்போது அவர் அரசதரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

வன்னிக்குப் பயணம் செய்த அவர் அங்கு போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுடனும் நேரில் கலந்துரையாடினார். இதன்போது படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் நிலை தொடர்பாக அவர்களின் பெற்றோர் கண்ணீருடன் எடுத்துக் கூறியிருந்தனர். அத்துடன், அரசுக்குத் தெரியாமல் முல்லைத்தீவுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்ட அவர் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் பற்றிய தகவல்களையும் சேகரித்திருந்தார்.

இவற்றைக் கொண்டு அவர் தயாரித்த அறிக்கையே அடுத்த வாரம் அமெரிக்க செனட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை தொடர்பாக, தூதுவர் ஸ்ரீபன் ராப் அமெரிக்க செனட் சபைக்குச் சமர்ப்பிக்கும் மூன்றாவது அறிக்கை இதுவாகும். ஸ்ரீபன் ராப்பின் இந்த அறிக்கையும் இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் அமெரிக்கா மீதான இலங்கையின் சீற்றம் மேலும் அதிகரிக்கும் எனவும் இது இரு நாடுகளுக்கிடையிலும் பெரும் விரிசலைக் கொண்டுவரும் எனவும் ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (த)

# பரிந்துரைகள் செயல்களாகும்

01↘ நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்தப் பரிந்துரைகளை மூன்று விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதியினால் நிபுணர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகளில் எதனை நடைமுறைப்படுத்துவது, இவைகளை நடைமுறைப்படுத்துவதால் இலங்கைக்கு ஏற்படும் நன்மை தீமை மற்றும் இதன் மூலம் சர்வதேசத்துடன் எவ்வகைகளில் தொடர்புகளை பேணுவது என்பனவே அந்த மூன்று விடயங்களாகும்.

இவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னரே ஆணைக்குவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும்-என்றார். (த)

# ஜெனிவாவில் நடந்தது என்ன?

01↘ தொடர்பாக விளக்கமளிப்பதற்கு ஊடகவியளாளர் சந்திப்பு ஒன்றை இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை கொழும்பில் ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்த ஊடகவியாளர் சந்திப்பில், ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதிகள் குழுவின் தலைவர்கள் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளனர். ஜெனிவா மாநாட்டில் இலங்கை மீதான தீர்மானம் குறித்து நடைபெற்ற நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் இங்கு விவரிப்பர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும், அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் இந்தக் குழுக்களுக்குத் தலைமையேற்றிருந்தனர். 71 பேரைக் கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் நாடு திரும்பியது குறிப்பிடத்தக்கது. (த)

# தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு தேவை

01↘ டம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனத் தேசிய சுதந்திர முன்னணி வலியுறுத்தியுள்ளது.

குறித்த தீர்மானம் நிறை வேற்றப்பட வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என முன்னணியின் தலைவர் அமைச்சர், விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுக்கு எதிராகச் செயற்படும் சர்வதேச சக்திகளையும் தேசிய சக்திகளையும் இனங்காண்பது அவசியம் என அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (த)

# இலங்கை விவகாரத்தைக் கையாளும் கொள்கையை மாற்றுகிறது இந்தியா

01↘ பாடு செய்யுமாறும் இந்தச் சந்திப்பின் போது சம்பந்தப்பட்ட அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சரின் இந்தக் கோரிக்கை உடனடியாக இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டது. என்றாலும், அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லையென நம்பகரமாக அறியமுடிந்தது. இலங்கை அரசின் உயர்மட்டத்தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்த இந்தியா அந்தத் தலைவர்கள் வழங்கி வந்த ஆக்கபூர்வமான உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படாத காரணத்தால் அவர்களை உடனடியாகச் சந்திப்பதைத் தவிர்த்து விட்டதாக இந்தியாவின் மூத்த இராஜதந்திரிஒருவர் தெரிவித்தார்.

''இலங்கை அரசின் குறிப்பிட்ட சில தலைவர்கள் இந்தியாவுக்கு வழங்கி வந்த உறுதிமொழிகள் எதுவுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இதனால் அவர்களிடம் பேசுவதில் இனியும் பலன் இல்லை என்று புதுடில்லி கருதுகிறது. ஆனாலும், அரசியல் தீர்வு தொடர்பான ஆக்கபூர்வமான பேச்சுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் நடத்துவதற்கு இந்தியா திட்டமிட்டி [illegible] இந்திய இராஜதந்திரி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் மாற்றம் கொழும்பு அரசியலில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. ஜெனிவா மாநாட்டுக்குப் பின்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பும் இதன் பின்னணியில் [illegible]மடையக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நாவிலிருந்து விலகுங்கள்

01↘ வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகள் அந்த சபையின் செயற்பாடுகளுக்கும் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு அதனை ஏற்று நடப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசுக்குச் சட்டதிட்டங்களை மதிக்கத் தெரியாவிட்டால் ஐ.நா சபையில் இருந்து விலகி விடவேண்டும். அதுதான் சிறந்தது என்றும் அவர் கூறினார்.

பிரச்சினையை மேலும் பெரிதாக்காமல் பேச்சுமூலம் தீர்வு காண்பதே சிறந்தது. அதனை அரசு விரைவில் செய்யாவிட்டால் நிலைமை மேலும் மோசமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் சில தினங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை 20 வீதத்தால் அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆரம்பமே இரு வேறு துருவங்களாக...

எமது நாட்டில் வாழும் இனங்கள் ஐக்கியத்துடன் வாழ்கின்றன. மக்கள் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி ஜனநாயக ரீதியில் செயற்படுகின்றனர்--

நாடு மீண்டும் பயங்கரவாதத்தால் விழுங்கப்படும் காலத்திற்குள் செல்வதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் விடயத்தில், சர்வதேசம் தலையிடுவதற்கு முன்னர், உள்ளகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எமக்குக் கால அவகாசம் அவசியம் --

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் - எமது நாட்டுக்கு - அரசுக்கு - எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அதனையும் சரி, அதனை நடைமுறைப்படுத்துவதனையும் சரி, எம்மீது திணிப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. இதில் நாம் மிக உறுதியாக உள்ளோம்--

இலங்கை மீதான தீர்மானம் ஜெனிவா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பின்னர், அரசின் மேற்கண்ட நிலைப்பாடு நாடாளுமன்றில், பதில் வெளிவிவகார அமைச்சரால் வெளியிடப்பட்டது.

எமது நாட்டுக்கு, எது சரியானது என்பதனை மற்றைய நாடுகளின் தலையீட்டின் மூலமாகப் பெறமுடியாது. எமக்குரிய தீர்வை உருவாக்குவதற்கான ஆளுமையும் திறமையும் எம்மிடத்தில் உண்டு. வெளியாரின் விருப்பத்திற்கு உகந்த தீர்வை, எம்மீது திணிக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம் -- அரசு சார்பில் நாடாளுமன்றத்தில் இவ்வாறு இடித்துரைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான, நல்ல செயற்பாடுகளை சர்வதேசம் இன்னமும் இனங்கண்டதாக இல்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவாக இயற்றப்பட்டது. ஆகையால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அப்பால் சென்று, அரசுக்கு எவரும் அழுத்தங்களைக் கொடுக்க முடியாது. சர்வதேச தலையீடுகளுக்கு முன்னர் உள்ளகச் செயற்பாடுகளுக்கு கால அவகாசம் மிக அவசியம் -- என்றும், பதில் வெளிவிவகார அமைச்சர், ஆக்ரோஷம் கலந்த தொனியில் கருத்து வெளியிட்டார்.

ஜெனிவாத் தீர்மானம் குறித்து, இலங்கை அரசாங்கத்தின் கவலை கலந்த எச்சரிக்கைப் பாணியிலான கருத்து, நிலைப்பாடு - உங்களுக்கு ஏன் இந்தத் திமிர் என்று அமெரிக்காவை - சர்வதேசத்தை - இலங்கை கேட்கும் பாணியிலான நிலைப்பாடு. அது ஒரு புறமிருக்க -

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு, ஐ.நா. சபையின் நிபுணர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தில் உள்ள பங்காளர்களுடன் இணைந்து, அர்த்தமுள்ள செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, அர்ப்பணிப்புடன் பணியாற்றுமாறு, இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது அமெரிக்கா.

அந்த நாட்டின் தேசிய பாதுகாப்புப் பேரவையின் பேச்சாளர் டொமி விடர் இதனை அறிக்கை ஒன்றின் மூலம் வலியுறுத்தியிருக்கிறார்.

அதாவது, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், உலகின் பல பாகங்களில் இருந்தும் பரந்த அளவில் ஆதரவைப் பெற்றது. அது, இலங்கை மக்களின் உரிமைகள் மற்றும் கௌரவத்தை நகர்த்திச் செல்வதற்குப் பெரிதும் பங்களிக்கும் --

அதன் முழுமையான குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவாக, ஐ.நா. சபையின் நிபுணர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தில் உள்ள பங்காளர்களுடன் இணைந்து அர்த்தமுள்ள செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் -- என்று அமெரிக்கா இடித்துரைத்துள்ளது.

ஜெனிவாப் பிரேரணை குறித்த இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும், அமெரிக்காவின் நிலைப்பாட்டையும் உற்றுநோக்கி, ஆழ்ந்து ஒப்பிட்டால்:

இரண்டும் முற்றிலும் முரண்பட்ட, எதிரும் புதிருமான ஒருவகை ஆவேச வீச்சுக் கொண்டவையே.

ஆரம்பத்திலேயே, இரண்டு தரப்புகளின் இலக்கும், நேர் குறியும் நூற்றுக்கு நூறு வீதம் முரண்வினை கொண்டவை என்பது புலப்படுகிறது. ஆகையால், நாளாக, நாளாக ஒத்துழைப்பும் விட்டுக்கொடுப்பும் இரண்டு தரப்புகளிலும் பழுத்துக்காய்ச்சிய இரும்பு போன்று, ஆழமாகச் சுட்டுக் காயங்களை உண்டாக்குமோ என்ற அச்சத்தையே தோற்றுவிக்கிறது.

ஆரம்பமே இரு வேறு துருவங்களாகத் தொலைவில் நிற்கின்றன.

அதன் மத்தியில், இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பின்பும், இலங்கையில் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாக இல்லை.

தேசத்தைப் பாதுகாப்போம் இயக்கம், கொழும்பில் கடைகளுக்குச் சென்று அமெரிக்கப் பொருள்களை விற்கவேண்டாம் என்று கோரித் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறது.

அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்துக்கு இலங்கை அரசு ஆதரவு வழங்கமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அமெரிக்க எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்போரைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிக்க 50க்கு மேற்பட்டோர் அடங்கிய பெரிய குழுவை பலகோடி ரூபா செலவில் ஜெனிவாவுக்கு அனுப்பிய போதிலும், தீர்மானம் தோற்றுப்போனது ராஜீக ரீதியில் இலங்கைக்குப் பெரும் கிலேசத்தைத் தந்திருக்கும்.

இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு விதமான அணுகுமுறைகள் அத்தனையும் தோல்வி அடைந்த நிலையிலேயே சர்வதேசம் இதனைத் தனது கையில் எடுத்துள்ளமை மறக்கப்பாலதன்று.

1987 இல் ராஜீவ்காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஒப்பந்தம் செய்தபோது இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரிய அதேசக்திகளே, இன்று அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும்படி கோருகின்றன.

இன்றைய நிலையில், இத்தகைய வீம்புத்தனமான நடவடிக்கைகளால் இலங்கைக்கு எதுவித பயனும் கைக்கு வந்து சேரப்போவதில்லை. அமெரிக்க எதிர்ப்பையே இது சம்பாதித்துக் கொடுக்கும். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வறிதாக்குவதற்கு (Nullify) எந்தவகையிலும் உதவாது.

# இந்தியாவில் இடைநிலைக் கல்விக்கு உலக வங்கியால் 500 மில்லி.டொலர்

வாஷிங்டன், மார்ச் 26

இந்தியாவில் இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, 500 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டின் இடைநிலைக் கல்வியை சர்வதேச தரத்தில் அளிப்பதற்காக, 2009 இல் மத்திய அரசு ராஷ்ட்ரிய மத்யமிக் சிட்சா அபியான் திட்டத்தை (ஆர்.எம். எஸ்.ஏ.) அறிமுகப்படுத்தியது.

இதன் முக்கிய நோக்கம், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், இடைநிறுத்த விகிதத்தைக் குறைத்தல், மாணவர் சேர்க்கையை அதிகரித்தல் ஆகியவை ஆகும்.

இந்தத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில், உலக வங்கியின், சர்வதேச மேம்பாட்டு கூட்டமைப்பு மத்திய அரசுக்கு 500 மில்லியன் டொலர் வட்டியில்லா நிதியுதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியாவுக்கான உலக வங்கியின் இயக்குநர் ரொபர்ட்டோ ஜக்கா, ஆர்.எம்.எஸ்.ஏ. திட்டம் தற்போது வளர்ந்து வருகிறது. இது மேலும் அதிகளவில் வளர்ச்சி பெறும் என்பதால், உலக வங்கியின் நிதியுதவியைப் பெற்றுள்ளது.- என்றார்.

இந்த நிதியுதவியின் மூலம், ஆர்.எம்.எஸ்.ஏ. திட்டத்தின் கீழ், 60 ஆயிரம் அரசு இடைநிலைப் பள்ளிகளில் விரிவாக்கம், பழுதுபார்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளும், 44 ஆயிரம் நடுநிலைப் பள்ளிகளை இடைநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல், 11 ஆயிரம் புதிய உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்குதல் ஆகிய பணிகள் நடக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

(ம)

### இலங்கை மின்சார சபைக்கு

## பெப்ரவரி மாதத்தில் 4,303 கோடி ரூபா நட்டம்

கடந்த பெப்ரவரி மாதத்தில் மின்சார சபைக்கு 4ஆயிரத்து 303 கோடி ரூபா நட்ட மேற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாதத்தில் இலங்கை மின்சார சபைக்கு வருமானமாக 17 ஆயிரத்து 586 கோடி ரூபா கிட்டியிருந்த போதிலும் 21 ஆயிரத்து 889 கோடி செலவு ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார சபை தெரிவிக்கிறது. அதற்கமைய கடந்த பெப்ரவரி மாதத்தில் இலங்கை மின்சாரசபை 4 ஆயிரத்து 308 கோடி ரூபாய்கள் நட்டமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மின் அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு மின்சார சபைக்கு 21 ரூபா 70 சதம் செலவாகியுள்ளதோடு மின் அலகு ஒன்று 16 ரூபா 44 சதத்துக்கே விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெப்ரவரி மாதத்தில் 10 ஆயிரத்து 426 மின் அலகுகள் விற்பனை செய்யப்பட்டிருந்ததோடு மின் அலகு ஒன்றில் 4 ரூபா 83 சதம் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-22)

## சட்டவிரோதமாகக் குடியேறுவோர் அமெரிக்காவில் அதிகரிப்பு

வாஷிங்டன், மார்ச் 26

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் சுமார் 8.46 மில்லியனில் இருந்து 11.51 மில்லியனாக அதிகரித்துள்ளது என சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2000 முதல் 2011 வரை யில் உலகம் முழுவதிலும் இருந்து முறையான ஆவணங்கள் எதுவுமின்றி சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுபவர்களின் வரிசையில் மெக்சிக்கோவிலிருந்து3.8 லட்சம், எல்சல்சடோரிலிருந்து 6.6 லட்சம், கவுதமாலா நாட்டிலி ருந்து 5.2 லட்சம், ஹொண்டு ராஸில் இருந்து 3.8 லட்சம் மக்கள் குடியேறியுள்ளனர்.

ஆசியக் கண்டத்தை பொறுத்த வரையில் சீன நாட்டு மக்களே அதிகளவில் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கை 2.8 லட்சமும்

**மெக்சிக்கோவிலிருந்து 6.8 லட்சம், எல்சல் சடோரிலிருந்து 6.6 லட்சம், கவுதமாலா நாட்டிலிருந்து 5.2 லட்சம், ஹொண்டுராஸில் இருந்து 3.8 லட்சம் மக்கள் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளனர்.**

அடுத்த படியாக பிலிப்பைன்ஸ் மக்கள் 2.7 லட்சத்துடன் ஆறாவது இடத்திலும், 2.4 லட்சத்துடன் ஏழாவது இடத்தில் இந்தியாவும் உள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு பெற்றோல் விநியோகத்துக்கு இணக்கம்

இந்தியாவிலிருந்து தரைவழியாக உடனடியாக பெற்றோல் அனுப்புமாறு பாகிஸ்தான் விடுத்த அவசர வேண்டுகோளை இந்தியா கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெறும் 7 ஆவது ஆசிய எரிவாயு பங்குடமை உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள புதுடில்லிக்குச் சென்றுள்ள பாகிஸ்தான் பெற்றோலிய மற்றும் இயற்கை வளங்கள் செயலாளர் முஹம்மட் எஜாஸ் சௌத்திரி செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பெற்றோல் இறக்குமதி செய்வது குறித்து இந்திய பெற்றோலிய செயலாளர் ஜி.சி. சதுர்வேதியுடன் நான் கலந்துரையாடினேன் என்றும் அவர் கூறினார். இந்திய பெற்றோலிய இரசாயன பொருள்களை பாகிஸ்தானுக்கு விநியோகிப்பது குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இந்த விநியோகத்திற்கான முறைமைகள் குறித்து முடிவெடுப்பதற்காக இரு நாடுகளின் அதிகாரிகளும் அடுத்த மாதம் சந்தித்துப் பேசுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள பாடிண்டா நகரிலிருந்து பாகிஸ்தானுக்கு இந்தியா பெற்றோலை விநியோகிக்கும் என இந்தியா உணர்த்தியுள்ளது. பாகிஸ்தான் தற்போது பெற்றோல் மாத்திரமே கோருவதாகவும் எரிவாயு இறக்குமதி குறித்தும் ஆர்வமாகவுள்ளதாகவும் இந்திய பெற்றோலிய செயலாளர் ஜி.சி. சதுர்வேதி கூறினார்.

# ‘நெல்சிப்’பால் வீதிகள் புனரமைக்க ஒதுக்கப்பட்ட நிதி கைமாறுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் ‘நெல்சிப்’ திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி இந்த வருடம் மாற்றப்பட்டு உள்ளூராட்சி சபைகளின் பராமரிப்பில் உள்ள கடைத் தொகுதிகள் மற்றும் சந்தைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப் படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நெல்சிப் திட்ட வேலைக்கு உரிய வேலைத் திட்டங்களை தெரிவு செய்வதற்கு 2010ஆம் ஆண்டு பொது அமைப்புக்கள் மத்தியில் விருப்பங்கள் அறியப்பட்டு (வாக்கெடுப்பு) வேலைத்திட்டங்கள் தெரியப்பட்டன .

இந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளும் அரசியல் செல்வாக்கால் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு 34 வீதிகள் புனரமைக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட வேண்டிய வீதிகளுக்கு உள்ளூராட்சி அமைப்புகள் கேள்விப் பத்திரம் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை, நிதியை உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வருவாய் தரக்கூடியதாக வியாபார நிலையங்கள் மற்றும் சந்தையில் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

இதனை அடுத்து அந்த வகையான பணிகளே மேற்கொள்ளப் படவுள்ளன என்று அறியப்படுகிறது.

நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருந்து வந்த வீதிகள் இந்த வருடம் திருத்தி அமைக்கப்படும் என பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

இந்தவேளையில் வீதிப் புனரமைப்பைக் கைவிட்டு இருப்பது பொதுமக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நெல்சிப் திட்டத்தால் வீதிகள் புனரமைக்கப்படும் என காத்திருந்த பொதுமக்களும் பொது அமைப்பினரும் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சிப் பிராந்தியத்தில்

# மின் நிலுவை 42 கோடி ரூபா

## பிரதம பொறியியலாளர் பிரபாகரன் தகவல்

வவுனியா,மார்ச் 26

மின்சார சபைக்கு கிளிநொச்சிப் பிராந்தியத்தைச் சேர்ந்த மின் பாவனையாளர்களால் மின்சாரக் கட்டண நிலுவையாக 42 கோடியே 27 லட்சத்து 38 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

இந்தத் தகவலை மின்சார சபையின் பிரதம மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் கிளிநொச்சி பிராந்தியத்தின் கீழ் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற போர்ச் சூழ்நிலைகளால் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் சீரான மின் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் மன்னார், வவுனியா மாவட்டங்களுக்குச் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டது. இந்தப் பகுதியிலுள்ளவர்களே

**கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான மின் விநியோகம் மேலும் சீரடைவதுடன் சாவகச்சேரி, பருத்தித்துறை போன்ற பிரதேசங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் யாழ். மாவட்டத்துக்கான மின் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்படும்**

பெருமளவான நிலுவையைச் செலுத்த வேண்டியுள்ளனர்.

இந்த மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தில் 1000 ரூபாவுக்கு மேல் நிலுவை உள்ளவர்களின் மின் இணைப்பைத் துண்டிப்பதுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இதுவரை மின்சாரக் கட்டண நிலுவைகளைச் செலுத்தாதவர்கள் உடன் செலுத்தி இடையூறுகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் வடக்கின் வசந்தத்தின் கீழ் கிளிநொச்சி பிராந்திய மின்சார சபைக்குட்பட்ட சகல பிரதேசங்களுக்கும் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டுள்ள பகுதிகளில் மின் விநியோக வேலைகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஒக்டோபர் மாதம் மீளக்குடியமர்ந்தவர்களுக்கே மின் இணைப்பு இலவசமாக வழங்கப்பட்டதுடன் இலவச மின்சாரமும் வழங்கப்படுகின்றது.

ஆனால் அதற்குப் பின்னர் மீளக்குடியமர்ந்து மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு இலவச மின் இணைப்பு மட்டுமே வழங்கப்படும்.

**கிளிநொச்சியில் உப மின் நிலையம்**

இதேவேளை, கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் உபமின் நிலையம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதன் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான மின் விநியோகம் மேலும் சீரடைவதுடன் அதிலிருந்து சாவகச்சேரி, பருத்தித்துறை போன்ற பிரதேசங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் யாழ். மாவட்டத்துக்கான மின் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்படும் எனவும் பொறியியலாளர் மேலும் தெரிவித்தார். (க-400)

## எங்கள் தபால்பெட்டி இதுதான்




மன்னார்,மார்ச் 26

மன்னார் பஸார் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தபால்பெட்டி திறந்த நிலையில் காணப்படுகின்றது.

தனியார் வாடகை வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் இந்தத் தபால்பெட்டி அமைந்துள்ளது. நீண்ட நாள்களாகவே இதன் கதவு திறந்தபடியே காணப்படுகின்றது. எனினும் பொதுமக்கள் கடிதங்களை இதில் போட்டுவிட்டுச் செல்வதையும் காணமுடிகின்றது.

இதுவரை எவரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

மன்னார் தபால் அலுவலகத்தினர் இந்தத் தபால் பெட்டியிலுள்ள குறைபாடுகளைச் சீர்செய்ய வேண்டுமென பலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-12)

## இழந்தவற்றையே கேட்கின்றனர்

### நகரசபை உறுப்பினர் டிலான் கருத்து



மன்னார், மார்ச் 26

மக்கள் போரின்போது இழந்தவற்றை மட்டுமே கேட்கின்றனரே தவிரப் புதிதாக அரசிடம் எதனையும் கேட்கவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரான எஸ்.டிலான்.

மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் அனுசரணையில் மன்னார் மாவட்ட இடம்பெயர் மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமானால் சரியான முறையில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

ஒருமித்துச் செயற்படுவதன் மூலம் எமது தேவைகளை அரசாங்கத்திடம் இருந்தும், தனியாரிடமும் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் மக்கள் தமது தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என்ற ஆதங்கத்துடன் இருக்காது தொடர்ந்தும் ஒருமித்து முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் தமது இலக்கை அடைய

**மக்கள் தமது தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என்ற ஆதங்கத்துடன் இருக்காது தொடர்ந்தும் ஒரு மித்து முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் தமது இலக்கை அடைய முடியும். எமது மக்கள் போரினால் இழந்தவற்றை மட்டும் தான் கேட்கின்றார்களோ தவிர இந்த அரசிடம் புதிதாக எதனையும் கேட்கவில்லை.**

முடியும்.

எமது மக்கள் போரினால் இழந்தவற்றை மட்டும்தான் கேட்கின்றார்களே தவிர இந்த அரசாங்கத்திடம் புதிதாக எதனையும் கேட்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## குருக்களின் உடல் மன்னாரில் தீயுடன் சங்கமம்



மன்னார்,மார்ச் 26

சபா மனோகரக் குருக்களின் பூதவுடல் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னாரில் தீயுடன் சங்கமமானது. இவர் லண்டன் சென்றிருந்த வேளை திடீரெனச் சுகவீன முற்றுக் காலமானார்.

இவரது பூதவுடல் கடந்த வியாழக்கிழமை அதிகாலை மன்னாருக்குக் கொண்டு வரப்பட்டு உப்புக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

முக்கிய பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் இவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். குருக்களின் இறுதி யாத்திரையின் போது சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

மன்னார் ஆயர் இராயப்பு யோசேப், இந்து, முஸ்லிம் மத குருக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், வர்த்தகர்கள் கல்விச் சமூகத்தினர் பொதுமக்களென ஆயிரக் கணக்கானோர் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

காலம் சென்ற சிவஸ்ரீ. சபா.மனோகரக் குருக்கள் மன்னாரில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பெரிதும் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடமாடும் சேவையும்

மன்னார்,மார்ச் 26

மன்னார் பிரஜைகள் குழுவினரால் மக்களுக்கு விழிப்பூட்டும் கருத்தரங்குகளும், நடமாடும் சேவைகளும் இடம்பெற்றுள்ளன.

இதன் பிரகாரம் கடந்த மாதம் 12, 26 ஆம் திகதிகளில் பாலைப் பெருமாள் கட்டு, சன்னார் ஆகிய கிராமங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றுள்ளன.

இரணை இலுப்பைக் குளம், குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்களில் இந்த மாதம் 13 மற்றும் 18 ஆம் திகதிகளில் விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெற்றன.

முதலாவது நடமாடும் சேவை கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆண்டாங்குளத்திலும், இந்த மாதம் 4 மற்றும் 25 ஆம் திகதிகளில் கள்ளியடி மற்றும் இரணை இலுப்பைக் குளத்திலும் இடம்பெற்றுள்ளன.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் நடமாடும் சேவைகளில் தமது முக்கிய ஆவணங்களைத் தொலைத்தவர்கள் மற்றும் இவற்றை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டதோடு இவற்றுக்கான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. (க-12)

## பெண்கள் கல்லூரியில் தமிழ் விழா

கிளிநொச்சி,மார்ச் 26

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியில் தமிழ்விழா இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை 20 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் படுத்தும் அதேவேளை மாணவர்களிடையே தமிழ் மொழியையும், அதன் விருத்தியையும் மேலோங்கச் செய்யும் வகையில் இவ்வாறான நிகழ்வுகள் பாடசாலைகளில் நடைபெற்று வருவதாகக் கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

அந்தவகையில் கிளிநொச்சி பெண்கள் புனித திரேசா கல்லூரியில் தமிழ் விழா நடைபெற்றுள்ளது. இதில் மாணவிகளின் கலை நிகழ்வுகளும் பேச்சு, கவிதை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-6)

## மன்னார் சாவற்காட்டில் பனைசார் பயிற்சி நிலையம்

மன்னார்,மார்ச் 26

மன்னார் சாவற்காட்டுப் பகுதியில் பனைசார் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சாவற்காட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ஆர். சுசீலா தலைமையில் இடம்பெற்றது. இதில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினமும் கலந்துகொண்டார்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகளைப் பெறுவதன்மூலம் இவர்கள் பனைசார் உற்பத்திப் பொருள்களை தயாரித்து விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். (க)

## கோட்ட மட்டப் போட்டிகள்

கிளிநொச்சி,மார்ச் 26

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கண்டாவளைக் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

எழுத்தாக்கப் போட்டிகள் 22 ஆம் திகதியும் ஏனைய போட்டிகள் 23 ஆம் திகதியும் நடைபெற்றன. கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் [illegible] தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வுகளின் நடுவர்களாக அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க-405)

## மல்லாவி மத்திய கல்லூரியின் தேவைகளுக்கு 20 ஏக்கர் காணி

### ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்படும்

அக்கராயன்,மார்ச் 26

மல்லாவி மத்திய கல்லூரிக்கு 20 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. துணுக்காய் வவுனிக்குளத்தின் கீழான காணியே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் 1 ஏபி தரத்திலுள்ள பாடசாலையாக இது விளங்கி வருகின்றது.

நீண்ட தூரங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயில்கின்றனர்.

**நீண்ட தூரங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயில்கின்றனர்.**

அத்துடன் ஆசிரியர்களும் வேறுமாவட்டங்களிலிருந்து வருகின்றனர். ஆனால் இவர்களுக்கான தங்குமிட வசதிகள் எதுவும் இங்கு இல்லை. இந்த நிலையில் தங்குமிட வசதிகளை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை இந்தக் கல்லூரி கொண்டுள்ளது.

இந்தக் கல்லூரி அண்மையில் பொன்விழாவைக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு 8 மணிக்கு கடைசி பஸ்

## நெருக்கடியில் மக்கள்

பண்டத்தரிப்பு,மார்ச் 26

இலங்கை போக்குவரத்துச் சபையால் நகரில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்காக இறுதி பஸ் சேவை இரவு 8 மணிக்கு நடத்தப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெளி மாவட்டங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் இதனால் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அலுவலக நேரத்தின் பின்னர் வெளிமாவட்டங்களிலிருந்து புறப்படும் உத்தியோகத்தர்கள் நகருக்கு வந்து பின்னர் தமது வீடுகளுக்குச் செல்லும் போது பெருமளவு பணத்தைச் செலவு செய்து தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

சில காலங்களுக்கு முன்னர் இ.போ.சவின் இறுதி சேவை இரவு 9 மணிக்கு நடத்தப்பட்டு வந்த போதும் பின்னர் குடாநாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகவே 8 மணிக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது நிலைமைகள் சீரடைந்துள்ளதால் மீண்டும் இரவு 9 மணி சேவையை நடத்த வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-130)

## தண்ணீர் விநியோகிக்க காரைநகருக்கு பவுஸர்




காரைநகர், மார்ச் 26

காரைநகர் பிரதேச சபைக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் குடிதண்ணீர் விநியோகத்துக்கெனப் பவுஸர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை காரைநகர் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்ட பவுஸர் ஆறாயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பவுஸர் மூலம் காரைநகருக்கு வெளியில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரப்பட்டு காரைநகர் மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடும் வெப்பம் நிலவி வரும் தற்போதைய சூழ்நிலையில் காரைநகர் பிரதேசத்தில் நீர் நிலைகள் வற்றிவருகின்றன. இந்த நிலையில் இந்த பவுஸர் வழங்கப்பட்டமை நன்மை பயக்கும் என்றும் கூறப்பட்டது. மேலும் ஒரு பவுஸரை பிரதேச சபைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார். (ம-250)

# பெரும்போக வெங்காயம் செய்கை காலநிலை மாற்றத்தால் பாதிப்பு

அச்சுவேலி,மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் பெரும்போக வெங்காயச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பெருமளவில் செய்கைபண்ணப்பட்ட பயிர்கள் இடைநடுவில் கருகியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசா யிகள் எதிர்பாராத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் யாழ்ப்பாண வெங்காயத்துக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி அதிகரித்த விலையும் கிடைத்தமையால் இந்த வருடம் விவசாயிகள் பெருமளவில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். பெரு விளைச்சல் தரக்கூடிய வகையில் வெங்காயம் விளைந்து வந்த நிலையில் கடும் வெப்பத்தால் அவை கருகிப் போயுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பனிப்பூச்சித் தாக்கத்துக்கு உள்ளாகி தாள்கள் கருகி மடிந்தன. இந்த நிலையில் வெங்காய மூட்டு பிரிந்து வளர்ச்சி அடையும் வேளையில் தாள் கருகி மடிந்தமையால் பெருமளவில் அறுவடை செய்யாமல் கைவிடப்பட்டுள்ளன. தொடர்ந்து பராமரிக்க முடியாமல் கைவிடப்பட்ட நிலையில் வெங்காயத் தோட்டங்களை அவதானிக்க முடிகின்றது.

அச்சுவேலி, குட்டியப்புலம், பத்தமேனி, இடைக்காடு, தம்பாளை, புத்தூர், சிறுப்பிட்டி பகுதியில் கணிசமான அளவு வெங்காயத் தோட்டங்கள் அறுவடை செய்யாமல் கைவிடப்பட்டுள்ளன. அவற்றில் மேய்ச்சலுக்காகக் கால்நடைகளை கட்டி மேயவிட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

எரிபொருள் விலையேற்றம், உற்பத்தி செலவு அதிகரிப்பு என்பன உள்ளிட்ட இக்கட்டான நிலையில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நம்பி செய்கை பண்ணிய பயிர் அறுவடை செய்ய முடியாத நிலையில் கைவிடப்பட்டிருப்பதால் பெரும் நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

வெங்காயச் செய்கையை நம்பி பெற்றுக் கொண்ட விவசாயக் கடனையும் உரிய காலப் பகுதியில் திருப்பிச் செலுத்த முடியாத இக்கட்டான நிலைக்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-11)

## வாள் வீச்சில் விரல்கள் துண்டாடப்பட்டன

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக இளைஞர் மீது இடம்பெற்ற வாள் வீச்சில் அவரின் இரண்டு விரல்கள் துண்டாடப்பட்டன. அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ஐவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவத்தில் பாசையூரைச் சேர்ந்த றெ.றெக்னோல்ட் (வயது-22) என்ற இளைஞனின் இரண்டு விரல்களே துண்டாடப்பட்டன. துண்டாடப்பட்ட விரல்களையும் வீதியிலிருந்து பொலிஸார் மீட்டனர். அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. (ம-4)

## சிறைச்சாலைக்குள் கஞ்சா கொண்டு சென்றவர் மாட்டினார்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

யாழ். சிறைச்சாலைக்குள் கஞ்சா பவுடர் கொண்டு சென்ற இளைஞர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

நேற்று முன்தினம் அவரை யாழ். பொலிஸார் யாழ். நீதிவானிடம் முன்னிலைப்படுத்திய போது அடுத்த மாதம் 6 ஆம் திகதிவரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மதியவேளை சிறைச்சாலைக்குள்ளிருக்கும் கைதி ஒருவருக்கு உணவு கொண்டு சென்ற இவர் அதனுடன் 250 கிராம் கஞ்சாப் பவுடரையும் சேர்த்து கொடுத்த போதே சிக்கிக் கொண்டார்.

நீண்ட நாள்களாக இந்தச் சம்பவம் தொடர்ந்திருக்கின்ற போதும் நேற்று முன்தினமே அவர் பிடிபட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்டநாள்களாகக் கஞ்சாவை சிறைக்குக் கொண்டுசென்றவர் என்று சந்தேகிக்கப்படும் குறித்த நபர் ஏற்கனவே குற்றவாளியென இனங்காணப்பட்டவர்.

இந்தச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ரவீந்திரன் கிருபாகரன் என்பவரே சந்தேக நபராக விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவர் ஏற்கனவே ஒரு குற்றச் செயலில் ஈடுபட்டு சாவகச்சேரி நீதி மன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## இனந்தெரியாத காய்ச்சலால் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

2½ வயதுடைய குழந்தை ஒன்று இனந்தெரியாத காய்ச்சல் ஒன்றால் பீடிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது.

நேற்று முன்தினம் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் குறித்த குழந்தை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்தக் குழந்தை அனுமதிக்கப்பட்டு 2 மணி நேரத்திற்குள் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

## அரச அதிபருக்கான கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 26

வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் மகளிர் தின விழாவும் ஜனாதிபதியின் விருது பெற்ற அரச அதிபருக்கான கௌரவிப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சு. சண்முகரத்தினம், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிரானி மில்ஸ் ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தம்பதியினராக பிரதேச செயலக நுழைவாயிலில் இருந்து மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்துக்கு மாலை அணிவித்து அழைத்துச் செல்லப்பட்டனர். விழா நாயகி மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

வரவேற்புரையை உடுவில் உதவி பிரதேச செயலர் திருமதி நே.செல்வகுமாரி நிகழ்த்தினார். அரச அதிபருக்கு பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பத்திரம் வழங்கி கௌவித்தார்.

பிரதேச செயலக மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த பெண்களுக்கான பரிசில்களும் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ம-7- 86)

## மாணவர்களுக்கு சைக்கிள்கள்

சாவகச்சேரி, மார்ச் 25

கைதடி- நுணாவில் அறவழி நிலையத்தில் தென்மராட்சி வலிகாமம் தெற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. நாளை செவ்வாய்க்கிழமை நிலையத் தலைவர் ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

ஜேர்மன் காசல் நகரைச் சேர்ந்த அனெஸ்லி இரத்தினசிங்கம் தலைமையிலான நண்பர்கள் குழுவின் அனுசரணையுடன் முதலாம் கட்டமாக சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் பல கட்டங்களாக அறவழிப் போராட்டக் குழுவின் ஊடாக வறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் உட்பட பல்வேறு உதவித்திட்டங்களை இந்தக் குழு வழங்க உறுதியளித்துள்ளதாகவும் அறவழி நிலையச் செயலாளர் எம்.கே. ஜீவகதாஸ் தெரிவித்தார். (ம-9)



யாழ்.திருநெல்வேலியில் [illegible] நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் ஸ்தாபகரான எஸ்.பி.சாமி [illegible] நாடாவெட்டித் திறந்து வைக்கிறார். அருகில் விருந்தினர்கள் நிற்கின்றனர். வைத்திய நிபுணர் ஆர்.ரவிராஜ் மங்கள விளக்கேற்றுகிறார். யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் உரையாற்றுகிறார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8,373 பேர் டெங்கினால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் இந்த வருட இரு மாத காலப்பகுதியில் 8 ஆயிரத்து 373 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டனர் என்றும் இவர்களில் 32 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காலப் பகுதியில் இலங்கையில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 3 தினங்களுக்குள் சிசிச்சைக்கு உட்படுத்தப்படுவாரானால் அவருக்கு சிகிச்சை அளித்து அவரைப் பாதுகாப்பது இலகுவானதாக இருக்கும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ)

### ரின் மீன் இறக்குமதி அதிகரிப்பு

கடந்த 2011 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தின் 40 கோடியே 14 லட்சத்து 93 ஆயிரத்து 507 ரூபாய்கள் பெறுமதியான 15 லட்சத்து 25 ஆயிரத்து 928 மெற்றிக்தொன் ரின் மீன் வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2011 ஆம் ஆண்டு ரின் மீன் இறக்குமதிக்காக செலவழிக்கப்பட்டுள்ள தொகை 41 கோடியே 79 லட்சத்து 34 ஆயிரத்து 84 ரூபாய் என அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# தமரா துரோகி

## திவயின தெரிவிப்பு

**சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சில் ஜெனிவா தூதராக பணியாற்றிவரும் தமரா குணநாயகம் தொடர்பாகத் தற்போது சிறிலங்கா புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது.**

கொழும்பு, மார்ச் 26

சுவிஸில் உள்ள சிறிலங்கா தூதுவரும் ஜெனிவாவில் உள்ள ஐ.நா.பிரதிநிதியுமான தமரா குணநாயகம் சிங்களவர்களுக் கெதிரான துரோகி என்றும் அவர் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான சீ.ஐ.ஏவுக்கு பணியாற்றி வருகின்றாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக திவயின சிங்கள பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சில் ஜெனிவா தூதராக பணியாற்றிவரும் தமரா குணநாயகம் தொடர்பாகத் தற்போது சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள திவயின, இந்தத் தமிழ் பெண் புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்ட தினத்தன்று இரவு அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் இணைந்து, இந்தப் பெண் அதிகாரிக்கு ஆடம்பர விடுதி ஒன்றில் விருந்துபசாரம் ஒன்றை நடத்தியுள்ளனர் என்றும் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

# ஜெனிவாத் தீர்மானம் தமிழர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது

கொழும்பு, மார்ச் 26

விடுதலைப் புலிகள் மீளவும் ஒருங்கிணைய முயற்சிக்கக் கூடும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது. ஜெனிவா தீர்மானம் புலம்பெயர் தமிழர்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் மீண்டும் வன்முறைகள் வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் இதனால் படையினரை ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டும். பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700 விடுதலைப் புலிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இலங்கையின் நலனை முதன்மையாகக் கொண்டு அமுல்படுத்தப்பட வேண்டுமே தவிர, சர்வதேச சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்ய பயன்படுத்திக் கொள்ளக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

### படத் தயாரிப்பாளரும் நண்பியும் வீட்டுக்காவலில்

கொழும்பு, மார்ச் 26

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த படத் தயாரிப்பாளர் ஒருவரையும் அவரது பிரான்ஸ் நாட்டு நண்பியையும் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் அறை ஒன்றில் வீட்டுக் காவலில் தடுத்து வைத்துள்ளனர் என ராவய செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ராவய தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து சில இறுவட்டுக்களையும் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவிக்கையில், இவர்கள் தொடர்பில் கிடைத்த தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்களைக் கைது செய்யவில்லை என்றார். (எ)

## பொருளாதார வளர்ச்சி 8.3 வீதம்

கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.3% என குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் 2010ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8% காணப்பட்டதென குடிசன மதிப்பீட்டுத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2011ஆம் ஆண்டில் தொழில்நுட்ப ரீதியில் 10.3% வளர்ச்சியும் சேவை ரீதியில் 8.6% வளர்ச்சியும் பதிவாகியுள்ளது.

விவசாய துறையில் 1.5% வளர்ச்சியே 2011ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. (எ)

### போதையில் மிதந்த பொலிஸ் கைது

போதை தலைக்கேறிய நிலையில் காணப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் கொழும்பு ஜம்பெட்டா பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் காவலரணில் சேவையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலருக்கு இடையூறு விளைவித்தமையை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் தற்போது கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் சேவையாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)


முழு நாட்டிற்கும் லீஸிங்
நேஷன்ஸ் லீஸிங்



உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

**கோழிக் குஞ்சு விநியோகம்**

BAHIRAHA NO -1 புறொயிலர் குஞ்சுகள் (28.03.2012) விநியோகிக்கப்படும் விலை 105/= ரூபா மட்டுமே பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ், நவாலி வீதி,
ஆனைக்கோட்டை
T.P.NO : 077 6090926

**கடை வாடகைக்கு**

ஐயாகடை சந்தி மீசாலையிலுள்ள 20 அடி அகலமும் 25 அடி நீளமுள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0778282143

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகர் மத்தியில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

* முகாமையாளர் (கணினி அறிவு உடையவர்கள்) ஆண்/பெண் இருபாலாரும்
* எரிபொருள் நிரப்புநர் (Pamper) க.பொ.த. சா/த, 40 வயதுக்கு உட்பட்டவர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் இன்று (26.03.2012) முதல் சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்

இல. 128, கஸ்தூரியார் வீதி,
(ஸ்ரான்லி வீதி - கஸ்தூரியார் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்)

யா/ வைத்தீஸ்வராவின்

**கண்ணீர் அஞ்சலி**

அமரர் T. லோகநாதன் அவர்களின் கண்ணீர் அஞ்சலி 25.03. 2012 ஆம் திகதி 11ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டு ... அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ... திருத்தி விளக்கிக்கொள்ளவும்.

விளம்பரதாரர்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு.ச.மகாதேவாவின் அன்புத் தாய்

**திருமதி சண்முகம் சின்னாச்சி**

23.03.2012 அன்று சிவபதமடைந்தார் அன்னாரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
வ/ கனகராயன்குளம் ம.வி

(18071) (6-9-12)

**இரண்டாம் ஆண்டு நினைவு நாள்**



அமரர்
நடேசு
கிருஸ்ணகுமாரன்
(பொலிசன்)

திதி: சதுர்த்தி - 26.03.2012

அப்பா! நித்தம்
காலையிலே கூவுகின்றோம்
குயில்களாக மாலையிலும் தானே!
உணர்வுகளும் தீர்மானங்களும் என்று
மதிப்பார்ந்தவையே - அதில்
அழகும் இளமையும் ஒருசேர உனது
வசம் தானே - என்றும்
வாழ்வுக்கும் வளத்திற்கும் நேர்மையான நீ
மாற்றமும் உன் மரணமும் ஏன்? அப்பா
நீ இல்லா வீடு பாழ் - உன்
நிழலில்லா வாழ்வு பாழ் - எமக்கு
உனதன்பு எனும் வெற்றிடத்தில்
ஏமாற்றமே சொந்தமப்பா - என்றும்

"சோபனம்" நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.0776183093.

மனைவி,பிள்ளைகள்,

(12707) (6-12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 943 பெண்கள் கொலை குடும்ப கௌரவத்துக்காக

## பாகிஸ்தானில் கடந்த வருடம் அதிர்ச்சிச் சம்பவங்கள்

பாகிஸ்தான், மார்ச் 26
பாகிஸ்தானில் குடும்ப கௌரவத்தை பாதுகாப்பதற்காக கடந்த வருடம் குறைந்த பட்சம் 943 பெண்கள், சிறுமிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் குறைந்தபட்சம் 943 பெண்கள் கடந்த வருடம் பாகிஸ்தானில் கணவன், தந்தை, மற்றும் சகோதரன் போன்றோரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 93 சிறுமியர்களும் உள்ளடங்குகின்றனர்.

**தகாத உறவு குற்றச்சாட்டில் 595 பெண்களும் அனுமதியின்றி திருமணம் செய்துகொண்டதற்காக 219 பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர்.**

எனினும் உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டை விடக் கடந்த வருடம் இத்தகைய 100 சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

பாகிஸ்தானில் பெண்கள் இரண்டாம் தர சமூகத்தினராக நடத்தப்படுவதாகவும் அங்கு வீட்டு வன்முறைகளுக்கு எதிராக சட்டங்கள் இல்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தகாத உறவு குற்றச்சாட்டில் 595 பெண்களும் அனுமதியின்றி திருமணம் செய்து கொண்டதற்காக 219 பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்கொலைகள் தொடர்பாக அரிதாகவே வழக்குகள் நடத்தப்படுவதாகவும் இச்சம்பவங்களைக் குடும்ப விவகாரங்கள் என்றுகூறி பொலிஸார் புறக்கணித்துவிடுகின்றனர் எனவும் அவ்வறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது. (ம)

### உலக வங்கித் தலைவர் அமெரிக்கரில்லை

உலக வங்கி தலைவராக அமெரிக்கர் அல்லாத ஒருவர் முதல்முறையாக பொறுப்பேற்க உள்ளது உறுதியாகி உள்ளது.

உலக வங்கியின் இப்போதைய தலைவர் ரொபர்ட் ஜோயலிக் வரும் ஜூன் மாதம் ஓய்வு பெறுகிறார். இதையடுத்து, புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் தொடங்கி உள்ளன.

உலக வங்கியின் தலைவராக இதுவரை அமெரிக்காவைச் சேர்ந்தவரே இருந்துள்ளார். எனவே, முதல் முறையாக அமெரிக்கர் அல்லாத ஒருவரைதலைவராகநியமிக்க வேண்டும் என வளரும் நாடுகள் கோரி வருகின்றன. (ம)

### ஒன்றியத்தின் புதிய தூதுவர்

பெர்ன், மார்ச் 26
ஐரோப்பிய ஒன்றியத்துக்கான சுவிஸ் நாட்டின் புதிய தூதுவராக வேல்ஸ் நாட்டை சேர்ந்த ரிச்சர்ட் ஜோன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை பெர்ன் மாநகரில் பத்திரிகையாளர்களை முதன் முறையாகச் சந்தித்துப் பேசினார்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதராக நியமிக்கப்பட்டதில் மகிழ்ச்சியடைந்த ஜோன்ஸ், சுவிஸை வியத்தகு அழகு படைத்த நாடு என்று பாராட்டினார்.

இங்கு வாழும் மக்கள் வசதியும், நாகரிகமும் கொண்டவர்கள். சில சமயங்களில் நாம் இங்குதான் இருக்கின்றோமா என்று தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக் கொள்வேன்.

சுவிஸ் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இடையிலான தொடர்பு நெருங்கிய நண்பர்களுக்கிடையான உறவைப் போன்றது. இந்த உறவில் நண்பர்கள் தங்களுக்குள் நேர்மையாக நடந்துகொள்வர்.

அமெரிக்கா, சீனா நாடுகளுக்கு அடுத்தபடியாக சுவிஷ் ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார பங்குதாரர்.

சுவிஸ் உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைவதில் ஆக்கபூர்வமான பங்கு வகிக்கின்றது. - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கடற்கொள்ளையரைக் கவனிக்க ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியது

சோமாலிய கடற்கொள்ளையர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையை விஸ்தரிக்க ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கடற் பிராந்தியத்தை போல், நிலபரப்புக்களிலுள்ள சோமாலிய கடற்கொள்ளையர்களின் இலக்குகள் மீதான இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளன.

கடற்கொள்ளையர்களுக்கு எதிரான பணிகளை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்க ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை குறிப்பிடத்தக்க முன்னேற்ற நகர்வு என்கின்ற போதிலும், இந்த அதிகரிப்பில் ஆபத்துள்ளதாகவும் பி.பி.சி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க தீபகற்பத்தில் சுமார் 10 ஐரோப்பிய ஒன்றிய கடற்படைக் கப்பல்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



மாலி நாட்டு இராணுவம் அந்த நாட்டு அரசை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இராணுவ சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். (ம)

## தூக்கு கைதிகளின் உறுப்பு அகற்றும் நடவடிக்கையை நிறுத்த சீனா முடிவு

சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுபவர்களின் உடலில் இருந்து மருத்துவ தேவைகளுக்காக உடல் உறுப்புகளை எடுக்கும் வழக்கத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் முடிவுக்குக் கொண்டுவருவோம் என அந்த நாடு உறுதி பூண்டுள்ளதாக சீன அரசு செய்தி ஊடகம் தெரிவிக்கிறது.

உடலுறுப்பு தானங்களுக்கு கைதிகளைச் சார்ந்திராமல் தேசிய அளவிலான உடலுறுப்பு தான முறைமை ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தப் போவதாக சீனாவின் சுகாதாரத்துறை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவில் உடலுறுப்பு மாற்று சிகிச்சைகளில் பயன்படும் மூன்றில் இரண்டு பங்கு உடலுறுப்புகள் மரண தண்டனைக்குள்ளான கைதிகளின் சடலங்களிலிருந்து எடுக்கப்பட்டது என சீன அரசு ஊடகங்களில் முன்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மோசமான வழக்கம் எனக் கூறி மனித உரிமைக் குழுக்கள் சீனாவை கடுமையாக விமர்சித்து வந்ததும் உண்டு.

சீனா ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதாக நம்பப்படுகிறது.

அங்கு எத்தனை பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது என்ற உத்தியோகபூர்வ எண்ணிக்கைகள் இரகசியமாகவே வைக்கப்படுகின்றன.

மற்றவரின் உடலுறுப்பு தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அந்நாட்டில் அதிகம் என்றாலும் உடலுறுப்பு தானம் வழங்க முன்வருவோரின் எண்ணிக்கை அங்கு மிகவும் குறைவாக உள்ளது.

சீன மக்கள் பெரும்பான்மையானோர் உடலுறுப்பு தானம் வழங்க முன்வருவதில்லை. கலாசார மற்றும் மத நம்பிக்கைகள் காரணமாகத் தங்கள் உடலுக்கு எவ்வித சேதமும் இல்லாமல் தாம் புதைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

இந்தச் சூழ்நிலையின் காரணமாக, சீனாவில் தானத்துக்கான உடலுறுப்புகளைப் பொறுத்த அளவில் ஒரு பெரிய கறுப்பு சந்தை தழைத்தோங்குகிறது எனலாம்.

சீனாவில் பணத்துக்காக உடலுறுப்புகளை விற்பனை செய்வதை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் அதிகாரிகள் தடைவிதித்தார்கள் என்றாலும், இன்றளவும் அந்த நாட்டில் அந்தச் சட்ட விரோத வர்த்தகம் ஒரு பெரிய பிரச்சினையாகத்தான் இருந்துவருகிறது. (ம)

## மசூதியில் மனித வெடிகுண்டு 15 பேர் உடல் சிதறிச் சாவு

இஸ்லாமாபாத், மார்ச் 26
பாகிஸ்தானின் ஒரு மசூதியில் தீவிரவாதி நடத்திய மனித வெடிகுண்டு தாக்குதலில், 15 பேர் உடல் சிதறி பலியாயினர்.

பாகிஸ்தான் வடமேற்கு பகுதியில் எல்லையில் உள்ளது டிரா. ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள இப்பகுதியில் லஷ்கர் இஸ்லாம் என்ற அமைப்பின் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. அங்குள்ள மசூதி ஒன்றில் அவர்களில் பலர் வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது உடலில் வெடிகுண்டுகளை மறைத்துக் கொண்டு தீவிரவாதி ஒருவன் உள்ளே புகுந்தான்.

கூட்டத்துக்குள் புகுந்த தீவிரவாதியை தடுத்து நிறுத்தி, லஷ்கர் இஸ்லாம் தீவிரவாதிகள் ஆவேசமாகப் பேசினர்.

அப்போது மனித குண்டாக வந்திருந்த அந்த தீவிரவாதி திடீரென வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து சிதறினான்.

பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்ததில் மசூதி கட்டடம் இடிந்து நொறுங்கியது. தாக்குதலில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த 15 பேர் உடல் சிதறிப் பலியாயினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் லஷ்கர் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள். இந்தத் தாக்குதலுக்கு தெரிக், தலிபான் பாகிஸ்தான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தகவல் வெளியானது.

பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகள் இடையே நிலவும் மோதலில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. (ம)

### மாலியின் உறுப்புரிமையும் பறிபோனது

தமது அமைப்பில் இருந்து மாலியின் உறுப்புரிமையை நீக்குவதாக ஆபிரிக்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

மாலியில் இராணுவத்தினர் சதி நடவடிக்கை மேற்கொண்டு 48 மணித்தியாலங்கள் கடந்துள்ள நிலையில் ஆபிரிக்க ஒன்றியம் இந்த நகர்வை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை தலைநகரில் இராணுவத்தினர் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளதுடன், கார்களை கடத்துவதாக அந்த நாட்டுத் தகவல்கள்தெரிவிக்கின்றன.

அத்துடன் அரச ஆதரவு படையினர்களின் பாதுகாப்பில் மாலியின் ஜனாதிபதி தலைநகருக்கு அருகில் தங்கி இருக்கிறார்; என்று ஆபிரிக்க ஒன்றிய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம)

## ஆஸ்திரேலியாவில் நிலநடுக்கம்

சிட்னி, மார்ச் 26
ஆஸ்திரேலியாவில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோளில் 6.1 ஆக பதிவான போதிலும் உயிர் சேதம் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

ஆஸ்திரேலியாவில் சுமார் 500 பழங்குடி இனத்தவர்கள் வசிக்கும் எர்னபெல்லா என்ற பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து, அப்பகுதியில் உள்ள்வர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். ரிச்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவானதாக புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எர்னபெல்லாவை மையமாகக் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் பூமிக்கடியில் 1.8 மைல் ஆழத்தில் பதிவாகி உள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆகப் பதிவானது. அதன் பிறகு ஏற்பட்ட பெரிய நிலநடுக்கம் இதுதான். எனினும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை எனப் புவியியல் வல்லுநர் டேவிட் ஜெப்சன் கூறியுள்ளார். நிலநடுக்கம் ஏற்பட்டபோது, வீட்டிலிருந்த பொருள்கள், ஜன்னல்கள் 30 வினாடிகள் வரை அதிர்ந்[illegible] தெருவுக்கு [illegible] அப்பகுதியைச் சேர்ந்த ரியா நிக்கோல்ஸ் தெரிவித்தார். (ம)

## சிக்கலை எதிர்கொள்ளும் சிக்கலான கழகம்

பெர்லின், மார்ச் 26
ஜேர்மனியில் அங்கத்தவர்கள் தமது வாழ்க்கைத் துணையை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட கழகம் ஒன்று (ஸ்விங்கர்ஸ் கிளப்) விபசார குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளது. பஸ்டென் பெல்ட்புருக் எனும் நகரிலுள்ள இக்கழகத்தின் அங்கத்தவர்கள் தமது கணவன் மற்றும் மனைவியரை ஏனைய அங்கத்தவர்களுடன் பரிமாறிக்கொள்ள முடியும்.

ஆனால், அண்மையில் அக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வி.ஐ.பி. இரவு தொடர் நிகழ்ச்சிகளின்போது பாலியல் படங்களில் தோன்றும் நடிகைகளும் கலந்துகொண்டனர். இதனால் மேற்படி கழகத்தின் நிர்வாகிகள் மீது விபசார குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஆபாச பட நடிகைகள் புர்க் இபஸா எனும் கழகத்தின் அங்கத்தவர்கள் அல்லர் என்பதால் அதன் நிர்வாகிகள் மீது விபசார குற்றச்சாட்டு சுமத்தப்பட முடியும் என ஜேர்மனிய அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிய குடியேற்றம் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்

## தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறியது

ஜெனிவா, மார்ச் 26

இஸ்ரேலிய குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நடத்த உத்தரவிடும் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மாநாட்டில் இது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேல் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் பலஸ்தீனர்களின் உரிமைகளை மீறுகிறதா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. இது குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்பது உட்பட இஸ்ரேலுக்கு எதிரான 5 தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்புகளை அமைக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் தங்களது பகுதியை ஆக்கிரமிக்கிறது என்று பாலஸ்தீனம் குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இஸ்லாமிய நாடுகள் சார்பில் பாகிஸ்தான் முன்வைத்தது.

கியூபா, வெனிசுலா, நோர்வே, இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட 36 நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. இத்தாலி, ஸ்பெயின், உட்பட 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அமெரிக்கா மட்டுமே இஸ்ரேலுக்கு ஆதரவாக அதாவது தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தது.

இத்தகைய தீர்மானங்களை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார். (ம)

அதிகாரப் பெண்மணிகள்...



அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள் குரேஷியன் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் வெஸ்னாபுஸிக் (இடது) வாஷிங்டன் நகரில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்டனைச் சந்தித்தார். (ம)

# தீவிரவாதத்தின் பக்கம் திரும்பியும் பாராதீர்

## பிரான்ஸ் கண்டிப்பான அறிவிப்பு

பரிஷ், மார்ச் 26

தீவிரவாத நடவடிக்கைகளைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் இணையத் தளங்களைப் பார்வையிட்டால் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என அறிவித்துள்ளது பிரான்ஸ்.

இது தொடர்பில் பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோசி புதிய சட்டங்களைக்கொண்டு வரத் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச அளவில் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை பிரான்ஸையும் பாதித்துள்ளது. இந்த நிலையில் அவற்றை ஒடுக்கும் நடவடிக்கைகளை பிரான்ஸ் எடுக்கவுள்ளது.

இதில் தீவிரவாத இணையத் தளங்களைப் படிப்பவர்கள் அவற்றை உருவாக்குபவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் என பிரான்ஸ் அதிபர் தெரிவித்துள்ளார். (ம)

# தேயிலை ஒரு கிலோ 53 ஆயிரம் டொலர்

சீனாவில் விளையும் தேயிலை வகைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் லாங்ஜிங் தேயிலை ஒரு கிலோ 53 ஆயிரம் டொலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு கிலோ தங்கத்தின் விலையைவிடச் சற்றே குறைவு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக வியாபாரிகளால் அதிகமாக விரும்பி வாங்கப்படும் தேயிலை வகைகளில் இது முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வகைத் தேயிலை சீனாவின் பாரம்பரியத் திருவிழாவான கிங்மிங் விழா கொண்டாடப்படும் மாதமான ஏப்ரல் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. இது ஸேஜியாங் மாகாணத்தில் உள்ள ஹாங்ஜோவ் பகுதியில்விளைவிக்கப்படுகிறது.

இது குறித்துச் சீன வர்த்தகர் ஒருவர் " கடந்த ஆண்டு இந்த வகை தேயிலை சுமார் 10 ஆயிரம் யுவானிற்கு (சீனநாணயம்) விற்பனையானது. இந்த ஆண்டு இதன் விலை சுமார் 80 ஆயிரம் யுவான்வரை அதிகரிக்ககூடும்"- என்றார். (ம)

# ஈராக் சிறையிலிருந்து 19 தீவிரவாதிகள் ஓட்டம்

பக்தாத், மார்ச் 26

ஈராக்கில் உள்ள கிர்குக் சிறைச்சாலையில் ஜன்னலை உடைத்து அதன் வழியாக 19 தீவிரவாதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

ஈராக்கின் கிர்குக் நகரில் உள்ள சிறைச்சாலையில் மோசமான தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வரவுள்ள நிலையில், சிறைச்சாலையில் உள்ள ஜன்னலை உடைத்து அதன் வழியாக 19 தீவிரவாதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த நாட்டில் சிறைச்சாலைகளை உடைத்து கைதிகள் தப்பிச் செல்வது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# மணிவிழா வாழ்த்து



இன்று 26.03.2012 மணிவிழா காணும் எமது அன்புத் தெய்வங்கள்

**திரு.வே.தியானந்தராசக்குருக்கள்**

**திருமதி தி.சிவகௌரி தம்பதியினர்**

இன்று போல் என்றும் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

திரு.வை.இராஜேஸ்வரகுருக்கள்(மருமகன்),
திருமதி இ.சாந்திமதி(மகள்),
விதுரன், மதுரன்(பேரப்பிள்ளைகள்).

# கனடாவில் வீடுகளின் விலை குறைகிறது

கனடாவில் வீடுகளின் விலை தற்போது குறைந்து கொண்டே வருகிறது என்று கனடாவில் வீட்டு மனைக் கழகம் நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த வீட்டுமனைக் கழகத்தின் தலைமை பொருளியல் அறிஞரான கிரிகோரி கிளம்ப், வீடு வாங்குவோரின் நிதி நிலை குறைவு மற்றும் வட்டி விகித உயர்வும் இந்த விலைக் குறைவுக்கு காரணம் என்றார்.

வருடாவருடம் வீடு விற்பனையில் லாபம் குறைவதுண்டு.

இந்த நிலை இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திலும் நீடித்தது. பெப்ரவரி மாதத்தில் இலாப விகிதம் 5.1ஆக சுருங்கியது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சரசாலை வடக்கு கிராம அலுவலர்

**திரு. க. முல்லைமாறன்**



யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.அ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு மன மூவந்து பாராட்டுவதுடன் அவர் பல பதவி உயர்வுகள் மேன்மேலும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ருத்நிலா மகளிர் சங்கம்
விவசாய சம்மேளனம்,
மாதர் சங்கம், இளைஞர்கழகம்,
சனசமூக நிலையம்.

சரசாலை வடக்கு.

(C2964) (7,9,10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழத்தில் எழுதுவினைஞராக [சிரேஸ்ட பதவிநிலை உத்தியோகத்தர்] [01.10.1979] இல் இருந்து முப்பத்து மூன்று [33] வருடங்கள் சேவையாற்றி இன்று [26.03.2012] திங்கட்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெறும்

**திருமதி தேவகி தங்கவேலு**

தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் நலமாக வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

பாதுகாப்புத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தினர்.

# வீடு வாடகைக்கு

இல. 84, நாவலர் வீதியில் அமைந்திருக்கும் இரண்டு அறை, ஒரு கோல், கிச்சின் அடங்கலான மாடிவீடு வாகனத்தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0752612250 / 0775796057

# மனமார வாழ்த்துகின்றோம்



**திருமதி தேவகி தங்கவேல்**

சிரேஸ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (எழுதுநர் சேவை) - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக சேவையில் தனது 33 வருட கடின உழைப்பால் எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பிடித்து 25.03.2012 திகதியில் ஓய்வுபெற்று செல்லும் எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய திருமதி தேவகி தங்கவேல் அவர்களது எதிர்காலம் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும், அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வர பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்தி நிற்கும்:

1. திரு. யோ.ஜெயக்குமார்
2. திருமதி ச.ஜெகதீசன்
3. திரு.அ.ம.கொண்ஸ்ரன்ரைன்
4. [illegible] மகேந்திரன்
5. திரு.நீ.மயில்வாகனம்
6. திரு.சி.தயாபரன்
7. திரு.ஐ.கோ.சந்திரசேகரம்
8. திரு.க.இரத்தினசபாபதி
9. திரு.ச.ரவிக்குமார்
10. திரு.க.பத்மநாதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C2963) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைச் சிறுத்தைகளின் பிரமுகர் வன்னியரசு கைது

## இலங்கைக்கு ஆயுதம் கடத்திய குற்றச்சாட்டில்

இலங்கைக்கு ஆயுதம் கடத்திய குற்றத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னி யரசு கியூ பிரிவுப் பொலிஸாரால் திடீரென மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழுவினருக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

அப்போது அங்கு பாதுகாப்பில் நின்ற கியூ பிரிவுப் பொலிஸாருக்கு வன்னியரசைக் கைது செய்யுமாறு உயர் அதிகாரி களிடமிருந்து உத்தரவு வந்தது. இதனால் ஆர்ப்பாட்டம் முடிந்ததும் வன்னியரசை கைது செய்ய பொலிஸார் திட்டமிட்டனர்.

ஆனால் வைகோ, சீமான் உள்ளிட் டோரை பொலிஸ் கைது செய்யும் முன்பாகவே வன்னியரசு காரில் புறப் பட்டார். அவரைப் பின் தொடர்ந்து



சென்ற கியூ பிரிவுப் பொலிஸார் விருதுநகர் அருகே மடக்கிக் கைது செய்தனர்.

திருநெல்வேலிக்கு நேற்று முன்தினம் காலை கொண்டு வரப்பட்டார். வன்னி யரசு மீது இலங்கைக்கு ஆயுதம் கடத்தியது உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளதாகவும் அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவோடு இரவாக மூன்றடைப்பு பொலிஸ்நிலையத்துக்கு வன்னியரசு கொண்டு வரப்பட்டார். அங்கே பொலிஸ் அதிகாரி மணிகண்டன், அவரிடம் விசாரணை நடத்தினார். விசாரணைக் குப் பின்னர் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி அளவில் நாக்குநேரி ஜெஎம் நீதிமன்ற நீதிபதி பாண்டியராஜன் முன் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

வன்னிரசை 10 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தர விட்டார். இதையடுத்து வன்னியரசை திருச்சி சிறையில் அடைப்பதற்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

இதேபோல் நெல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழக எழுச்சிப் பேரவை என்ற அமைப்பின் சதீஷ்குமார் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். மாவோயிஸ்ட்டுகளுடன் தொடர்புடைய அவர் மீது 15 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வன்னியரசை விடு தலை செய்து விடுதலை சிறுத்தைகள் கட்சி மீது கட்டவிழ்த்துள்ள அடக்குமுறையை தமிழக அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்திருமாவளவன்கோரிக்கை விடுத்துள்ளார். (வ)

## 78 வயதிலும் குறி தவறாமல் துப்பாக்கி சுடும் வீராங்கனை



சந்திரச் தோமார் என்ற மூதாட்டி தனது 78 ஆவது வயதிலும் குறி தவறாமல் துப்பாக்கி சுடும் வீராங்கனையாகவே உள்ளார்.

இவர் உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஜோரி கிராமத்தைச் சேர்ந்தவர். இதுவரை 25 தேசியப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிவாகை சூடிய இவருக்கு ஆறு குழந்தைகளும் 15 பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

நரைத்த முடியுடன் வயதான தோற் றத்தில் காட்சியளிக்கும் இவர் துப்பாக்கி சுடும் போட்டியில் டில்லி பொலிஸ் அதிகாரியை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வாரந்தோறும் தனது பேர்த்தியின் பயிற்சிக்காகத் துணைக்குச் சென்ற மூதாட்டியின் துப்பாக்கிச் சுடும் ஆசையையும், திறமையையும் கவ னித்த பயிற்சியாளர் பரூக் பாதான் இவருக்கு ஊக்கமளித்தார்.

திறமைக்கு வயது ஒரு தடையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தனது முயற்சியால் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி தொடர்ந்து பரிசுகளையும், பதக்கங்களையும் வென்று வருகின்றார்.

குறிபார்க்கும் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் தண்ணீர் போத்தலில் கற்களை எறிந்து பயிற்சி பெறுகிறார். இவரது மகள் சீமாவும் துப்பாக்கி சுடுவதில் மிகவும் திறமையானவர். ரைஃபிள் பிஸ்டல் உலகக் கிண்ணப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை சீமா பெற்றுள்ளார். (வ)

## சட்டமன்ற உறுப்பினர் நக்சல்களால் கடத்தல்

### ஒரிசாவில் பரபரப்பு

ஒரிசா மாநிலத்தில் ஆளும் பிஜூ ஜனதா தள சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை நக்சல்கள் கடத்திச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் அந்த மாநிலத் தில் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

ஒரிசா மாநிலத்தின் கோராபுட் மாவட்டத்தில் உள்ள லஷ்மிபூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக ஜினாஹி காக்கா உள்ளார்.

இவர் தனது ஆதரவாளர்களுடன் கோரபுட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பி கொண்டிருந்த நேரத்தில் டோயாபுட் பகுதியில் துப்பாக்கிகளுடன் வந்த 50 நக்சல்கள் இவரது வாகனத்தை வழிமறித்து துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

இதன் அடிப்படையில் பொலிஸ் மேலதிகாரி அவினாஷ்குமார் தலைமை யிலான பொலிஸார் ஜினாஹிக்காவை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி 2 இத்தா லியர்கள் நக்சல்களால் கடத்தப்பட்டனர். இவர்களை மீட்கும் பணிக்காக அமைக்கப்பட்ட பொலிஸ் குழுவினர் இன்னும் அவர்களை மீட்கவில்லை.

இந்தநிலையில் பேரவை உறுப்பினர் கடத்தப்பட்ட சம்பவம் ஒரிசாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

### தெலுங்கான கோரி தீக்குளித்த மாணவன்

தனித்தெலுங்கானா கோரி தீக் குளித்த மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

ஆந்திராவை இரண்டாக பிரித்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஆந்திராவில் வாரங்கல்லில் ஹனும கொண்டா சுபேதரி என்ற இடத்தில் உள்ள புதிய அறிவியல்கல்லூரியில்எம்.பி.ஏ. படித்து வந்த போஜ்ஜா நாயக் (வயது 22) என்ற மாணவர் தீக்குளித்தார்.

கல்லூரியின் கலையரங்கத்துக்குச் சென்று உடலில் பெற்றோலை ஊற்றி தீ வைத்துக்கொண்டார். இதனால் உடல் கருகிய அவரை மகாத்மா காந்தி நினைவு ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தனர். சிகிச்சை பலன் இன்றி அவர் உயிர் இழந்தார்.




தூத்துக்குடி வ.உ.சி., துறைமுகத்தில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள வடக்கு சரக்குத்தளம்-ஒன்றில், வெள்ளோட்டத்திற்கு வந்த 'எம்.வி., அட்லஸ்' என்ற சரக்குக் கப்பலில் மலேசியாவுக்கு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.


## மும்பை துறையில் நங்கூரமிட்ட கொரியக் கப்பலில் வெடி விபத்து

### ஒருவர் சாவு; 6 பேர் படுகாயம்

மும்பை, மார்ச்.26

மும்பை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தென்கொரிய நாட்டு எண்ணெய்க் கப்பலின் எண்ணெய் தாங்கி வெடித்ததில், கப்பலின் மாலுமி ஒருவர் உயிரிழந்தார். மேலும், இந்த விபத்தில் கப்பலில் இருந்த ஆறு பேர் காயமடைந்தனர்.

தென்கொரிய நாட்டுக்குச் சொந்தமான, 'ரோயல் டையமண்ட்' என்ற ரசாயன எண்ணெய்க் கப்பல், மும்பை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. இந்தக் கப்பலில், நேற்று முன்தினம் முற்பகல் 11.25 மணியளவில் வெடி விபத்து நிகழ்ந்தது. இதையடுத்து, கப்பலில் தீப்பிடித்தது. தகவல் அறிந்ததும், துறைமுகத்தில் இருந்து கப்பலை இழுத்து வரும் படகு அனுப்பப்பட்டு, கப்பலில் படுகாயங்களுடன்



இருந்த ஆறு பேர் மீட்கப் பட்டு, மும்பை ஜெ.ஜெ., மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். கப்பலில் கொரியா நாட்டைச் சேர்ந்த இரு மாலுமிகளும், பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரும், மும்பையைச் சேர்ந்த நான்கு தொழிலாளிகளும் விபத்தில் சிக்கினர். அவர்களில் கொரிய நாட்டைச் சேர்ந்த மாலுமி உயிரிழந்தார். எஞ்சியுள்ளவர்கள் காயங்களுடன் சிகிச்சை பெற்றனர். அவர்களில் கொரிய நாட்டைச் சேர்ந்த முன்யோன் சியோக் என்பவர், பின்னர் மசீனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். கப்பலின் கிடங்கு அறையில், கடந்த 17 ஆம் திகதி தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து, கப்பல் துறைமுகத்தின் முதல் தளத்துக்கு மாற்றப்பட்டது. அதே அறையில் தான் தற்போதும் வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது. இது குறித்து மும்பை துறைமுகப் பொறுப் புககழகத் தலைவர் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார். (வ)

## 300 வருட பழமையான தங்கப்புதையல்

கர்நாடக மாநிலத்தில் 300 வருட பழமையான தங்கப் புதையல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் பெல்லாரியில் உள்ள சந்தூர் நகரம் அருகில் ஒரு வீட்டின் வடிகால் பணிக்காக தோண் டப்பட்டபோது சிவபெரு மான், பார்வதி மற்றும் நிலவு போன்ற 300 வருட பழமையான 200 இற்கும் மேற்பட்ட தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மேலும் அந்த நாணயத்தில் தேவனாகிரியின் சுருக்கமான விவரங்களும் இடம் பெற்றிருந்தன.

கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் 213 நாணயங்கள் வீட்டின் உரிமையாளருக்கு கிடைத்த தாகவும், இந்தத் தகவல் பொலிஸா ருக்குத் தெரிந்ததும் அவற்றைக் கைப்பற்றினர் (வ)

## பழம் கொடுத்த இளைஞனை கொலை செய்த யானை




பழம் கொடுத்த இளைஞனை யானை தனது தந்தத்தால் குத்தியதில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் உள்ள அட்டப்பாடி அகளி பகுதியில் உள்ள மர வியாபாரிகள், லொறியில் மரக்கட்டை களை ஏற்றுவதற்காக யானை யைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்காக யானையை அந்தப் பகுதியில் கட்டி வைத்திருந்தனர். அந்த வழியாகச் சென்ற ரங்கன் (வயது 31) என்பவர் தனது கையிலிருந்த பழத்தை யானைக் குக் கொடுத்துள்ளார்.


அந்தநேரத்தில் யானைக்கு திடீரென்று மதம் பிடித்து, ஆக்ரோஷமாகப் பிளிறி, தனது தந்தத்தால் ரங்கனின் கழுத்தில் குத்தி அவரைத் தூக்கி வீசியது.

ரத்த வெள்ளத்தில் மிதந்த ரங்கனை அகளியில் உள்ள அரசு வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், சிகிச்சை பயனின்றி அவர் மரணமடைந்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகி

# திருமதியாய்...?



இதழ்களின் ஈரவெளிகளில் - என்
வார்த்தைகளை தொலைத்துவிட்டேன்
ஊமையாய் உள்ளத்தில்
நான் பாடும் பாடல்
எங்கோ தொலைவில் கேட்கின்றது
காத்திருந்த நாள்களெல்லாம்
கரைகின்றன! என் விழி வழி ஓடும் நதியில்
நீண்ட என் காரிருள் வானில்
ஓர் ஒளிக்கீற்று
இளமை முதுமையடைந்துவிட்டது
இன்னமும் செல்வியாய் நான்
முழுமதியை ஆறு நாள்களுக்கு
ஒரு தடவை வானில் மட்டும்
என் மதிமுகம் காணும் திரு
இங்கில்லை- இனி
நானும் இங்கு ஓர் திருமதியில்லை.

# புரிந்து நடக்கக் கற்றுக்கொள்




மீசாலை, சுதா.

பெண்களே தொலைபேசி நவீன தொல்லை பேசி. இந்தத் தொலை பேசியால் வந்த காயங்கள் எத்தனையோ எத்தனையோ. தொலைபேசியால் எத்தனையோ பெண்களின் வாழ்க்கை இன்று விடை தெரியாத வினாக்களுடன். இது எத்தனை பெண்களின் வாழ்வை கொள்ளையிட்டுச் சென்று விட்டது தெரியுமா?

ஓர் ஆடவனைப் பார்த்ததும் நம்பாதே பழகாதே. காரணம் நல்லவன் போல் வெளியே சாயம் போடுவான். ஆனால் அவனுக்குள்ளே இருப்பது வெறும் வேசம் இன்றைய இளைஞர்கள் தன்னைப் பெற்றவள் ஓர் பெண், தன்னுடன் கூடப் பிறந்தவள் ஓர் பெண் என்பதை எல்லாம் புரியாமல் மற்றப் பெண்களின் வாழ்வில் விளையாடிக் காலத்தைக் கழிக்கிறார்கள். இதைப் பெண்ணே நீ புரிந்து கொள் . எங்கிருந்தோ வந்தவனை நம்பி நீ நட்புக் கொள்ளாதே! காரணம் அந்த நட்பே நரகமாகும் காலம் தொலைவில் இல்லை என்பதை புரிந்துகொள். நீ நண்பனாகப் பழகியவன். நாளை இன்னொரு பெண்ணைத் தேடிச் சென்று விடுவான். ஆகையால் எந்த ஆடவனையும் நம்பாதே. அவன் போடும் மாயவலையில் சிக்கித் தவிக்காதே. இவ்வாறு சிக்கித் தவிக்கும் பெண்களில் எத்தனை எத்தனையோ வெளியிலே சொல்கிறார்கள் இன்னும் எத்தனை பெண்கள் சொல்லாமலே மனத்திரையிலே சிக்கவைத்துக் கொண்டு அதில் சிக்கி அன்றாடம் செத்துமடியும் பெண்கள் எத்தனைபேர். எனவே புரிந்து கொள்ளுங்கள் உன்னையும் ஏமாற்றிவிட்டு இன்னொரு பெண்ணின் வாழ்வையும் சூறையாடச் சென்று விடுவான். அது உனக்குத் தெரியாமல் இருக்கும். எனவே புரிந்து நடக்கக் கற்றுக்கொள் பெண்ணே.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்ணியமும் மாயையும்



ஆண்களின் தோழியாக வாழும் பெண்கள், ஆண்களின் பராமரிப்பில் இருக்கும் பெண்கள் இவர்களெல்லாம் பெண்ணியவாதிகள் என்ற தவறான எண்ணமும் தமிழ்ச்சூழலில் விளங்கி வருகிறது. இவற்றில் இருந்து உண்மையான பெண்ணியத்தை, பெண்ணியவாதிகளை இனம் கண்டறிய வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டிருக்கிறது. அப்படித் தேடிப்பார்த்தால் உண்மையான பெண்ணியம் என்பதும், உண்மையான பெண்ணியவாதி என்பதும் கிடைக்காமல் கூடப் போகலாம்.

சக பெண்களை முன்னேற்றும் பெண் பெண்ணியவாதி ஆவாள். தனக்கு எதிராக நடந்த இழப்புக்களை, அவ மரியாதைகளைத் தன் சகோதரி அனுபவிக்காமல் காப்பவளே உண்மையான் பெண்ணியவாதி.

குடும்பத்தில் பிறந்த பெண் குடும்பத்தவளாக வாழ்கிற போது பல அனுசரிப்புகளுக்கு உள்ளாக வேண்டியவளாக இருக்கிறாள். அப்படி வாழ்வது சரியென வாழும் பெண்களின் வாழ்வில் பெண்ணியம் நுழைந்து அவர்களைக் கெடுத்து விடப் போவதில்லை. ஆனால் குடும்பத்தில் சம உரிமையை நிலைநாட்டப் பெண்ணியம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது. மின்னல் பூக்கள் என்ற நாவலில் இறந்த பெற்றோருக்கு ஆண் இறப்புக் கடன் செய்வது போல பெண்ணும் செய்யலாம் என்பதை திலகவதி முன் வைக்கிறார். அவரே சொப்பன பூமி நாவலில் அச்சகத் தொழிலில் உள்ள ஆண், பெண் தொழில் மதிப்பு வேறுபாட்டைக் களைய முன்வருகிறார். குடும்பச் சூழலை முன்வைத்து பெண்களை முன்னேற்றும் தற்காலப் போக்கு ஒருபுறம் தற்போது தமிழ்ப் பெண்ணியத்திற்குத் தேவையாகின்றது.

மணம் வேண்டாத, ஆண்துணை வேண்டாத, தன்னையே நம்பி, தன் உழைப்பைத் தனக்கே உரிமையாக்கிடத் துடிக்கும் தனித்த பெண்நிலைக்கும் இந்தக் காலத்தில் விதை இட வேண்டி இருக்கிறது. இவ்வாறு தனித்துப் போனால் உலகம் இயங்காது. உற்பத்தி பெருகாது என்ற மரபுக் குரல்கள் வாடகைக் கருப்பைத் தாய்களாலும், வாடகை ஆண் விந்தணுக்களாலும் மறைந்து போய் விட்டன. தேவைப் பட்டால் தந்தை, தாய் யார் யாரெனத் தெரியாமல் புதிய உற்பத்திக் கோட்பாடுகளை மருத்துவம் உரு வாக்கி வருவது இந்தக் கேள்விக்கு முற்றுப் புள்ளியை வைத்து விடும்.

இதுவும் அல்லாமல், அதுவும் அல்லாமல் இரண்டுங்கெட்டான் ஆகிவிட்ட பெண்ணியத்தை பெண்ணிய மாயை என்றே குறிக்க இயலும். ஆடைகளில் விடுதலையைத் தேடுதல் உண்மையான பெண்ணியமாகாது. காமத்தில் விடுதலை தேடி ஆண் குழுவோடு தன்னை இணைத்துக் கொள்ளும் குழு விளையாடல்கள் உண்மையான பெண்ணியமாகாது. இதில் வீழ்ந்து கிடக்கும் தற்போதைய தமிழ்ப் பெண்ணிய உலகைக் கண்டிப்பான கரங்கள் கொண்டு தூக்கியே நிறுத்த வேண்டும்.

# பெண்ணைக் காப்பது இயற்கையே...

சுபோதினி
நெல்லியடி.

எல்லாச் சமுதாயங்களையும் ஆண்கள்தான் உருவாக்கி இருக்கிறார்கள். எல்லாக் கல்வி முறைகளையும் ஆண்கள்தான் வகுத்திருக்கிறார்கள் இப்படி எல்லாமே ஆண்களால் உண்டாக்கப்பட்டுள்ள சமுதாயத்தில் இதுவரைக்கும் அவள் பிழைத்திருப்பது மாபெரும் அற்புதம்தான்.

பெண் எப்படி தப்பிப் பிழைத்திருக்கிறாள்? அதுவே ஓர் அற்புதம்தான். புரிந்துகொண்டவரை அவளது அன்பினாலேயே இந்த அற்புதம் சாத்தியமாகியது.

ஆண் அவளை மோசமாக நடத்தி இருக்கிறான். இருந்தாலும் அவள் அவனை அன்பு செய்திருக்கிறாள். அடிமைப்படுத்தப்பட்டு கட்டுண்ட நிலையிலும் அவள் ஒரு தாயாகி, சகோதரியாகி, காதலியாகி, மகளாகித் தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கிறாள். இதுவே ஓர் அற்புதம்.

ஆணுக்கு எதிராக இந்த அளவுக்குத் தாக்குதல் நடத்தும் அவள் தப்பிப் பிழைத்திருப்பது சாத்தியமானதே. இயற்கைக்கு ஆணைவிடப் பெண் அதிகமாகத் தேவைப்படுவதால் மட்டும்தான். இயற்கையே பெண்ணைப் பாதுகாத்து வந்துள்ளது.

ஏனென்றால் பெண்ணே தாயாக இருக்கிறாள். அவளிடத்தே உயிரனைத்தும் பிரவகிக்கின்றன. அவளது அன்பின் மூலம்தான் வாழ்வு இன்னும் பாடமுடிகிறது. பிரபஞ்சத்தில் ஒளிந்திருக்கும் படைப்பாற்றல் பெண்ணிடம் தான் ஒளி விடுகிறது. பூமி எப்படி உயிர்ப் பிக்கிறதோ அப்படி அவளும் உயிர்ப் பிக்கிறாள்.

[illegible] சரியான பிரதிநிதியாகத் தாய் தேர்ந்தெடுக்கப்பட்டாள். சாஸ்திரப்படி பூமியை வலம் வரவேண்டிய ஒருவன் தாயை வலம் வந்தால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. தாய் மைதான் பெண்ணின் உச்சநிலை. தாய்மை என்ற தனித்தன்மையே அவளது தனிச்சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்ச் சிந்தனை

③

அதனால் எப்படியேனும் வலுக்கட்டாயமாக உங்களுக்குள் நேர்மறைச் சிந்தனைகளைப் புகுத்தி விடுங்கள். அதிகாலையில் உங்கள் எதிரில் வருபவர்களைப் பார்த்துப் புன்னகையுங்கள். காலை வணக்கம் சொல்லுங்கள். ஆரம்பத்தில் இது கொஞ்சம் செயற்கையாகத் தெரிந்தாலும், பிறகு அதுவே உங்கள் இயல்பாக மாறிவிடுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.

பிறர் ஏதேனும் சாதனை செய்தால் அதை மனம்விட்டுப் பாராட்டுங்கள். இதுநாள்வரை பிறரைப் பாராட்டிப் பழக்கம் இல்லை என்றாலும் பரவாயில்லை. இனிமேலாவது பாராட்டுங்கள்.

மற்றவர்களுக்கு நீங்கள் ஒரு தைரியமான வார்த்தையைச் சொல்லும்போது, நீங்களும் தைரியம் அடைவீர்கள். மற்றவர்களுக்கு ஒரு பாராட்டைச் சொல்லும்போது நீங்களும் பாராட்டுப் பெறுவீர்கள். இதுவும் ஒருவகை ஈர்ப்பு விதிதான்.

நீங்கள் மற்றவர்களிடம் குற்றம் கண்டுபிடித்தீர்கள் என்றால், அவர்கள் உங்களைக் குற்றம் காண்பவராகவே கருதுவர். எனவே அவர்களும் உங்களை மட்டம் தட்டவோ, குறைகாணவோ தொடங்குவார்கள். அவர்களின் குற்றச்சாட்டுக்களோ, குறைகாணலோ உங்களைப் பல வீனப்படுத்திவிடலாம். எனவே எப்போதும் எல்லாவற்றிலும் எல்லா மனிதரிடத்திலும், நல்லதையே உற்று நோக்குங்கள்.

நீங்கள் பிறரைப் பாராட்ட எண்ணும்போது, பாராட்டும்போது - உங்கள் எண்ணங்கள் பிரபஞ்சப் பேராற்றலை இழுத்துக் கொண்டு உங்களைச் சுற்றி ஒரு நல்ல அதிர்வலைகளை உருவாக்கும். அந்தச் சூழ்நிலையில் பிறரும் உங்களின் நல்ல குணங்களை உற்று நோக்க ஆரம்பிக்கிறார்கள். உங்களைப் பாராட்டத் தொடங்குகிறார்கள். இதைவிட வேறு நல்ல உற்சாகமான மருந்து வேறெங்கும் கிடைக்காது.

நேர்மறைச் சிந்தனை என்பது உங்களைப் பற்றிய எண்ணம் என்பதோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள். காரணம், "என்னைப் பொறுத்தவரை நான் நேர்மறையாகத்தான் சிந்திக்கிறேன். ஆனால், சமுதாயத்தில்தான் எத்தனை அநியாயங்கள் நடந்து வருகின்றன. அவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் எப்படி நம்பிக்கையோடு வாழ முடியும்?" என்று பலர் கேட்கலாம்.

அதுவும் ஒருவகையில் உண்மைதான். நாள்தோறும் நாளிதழைப் புரட்டினால் அதில் லஞ்சம், விபத்து, வறுமை, தற்கொலை என்று தொடர்ந்து எதிர்மறையான செய்திகளாக இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

தொலைக்காட்சியிலும் நாளெல்லாம் இதுபோன்ற செய்திகள்தான்! வீதியில் நடந்தால் எத்தனையோ ஏழைகள், நோயாளிகள் அனாதையாக, ஆதரவற்றவராக, எழுந்து நடக்க இயலாதவராகப் பார்வையில் தெரிகிறார்கள் என்பதும் உண்மைதான்.

பொதுவாக எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள் நாளிதழிலோ, தொலைக்காட்சியிலோ எதிர்மறையான செய்திகளையே தேர்ந்தெடுத்துப் படிக்கிறார்கள். பார்க்கிறார்கள். அவர்கள் உள்ளுக்குள் தன்னம்பிக்கை அற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நீங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள விரும்புகிறவர்கள் என்றால் நாளிதழ்களில் வருகின்ற எதிர்மறைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தராதீர்கள். அவற்றை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, நல்ல ஆரோக்கியமான செய்திகளைப் படியுங்கள். தொலைக்காட்சியிலும் நல்ல செய்திகளையோ, நல்ல ஆரோக்கியமான நிகழ்ச்சிகளையோ பாருங்கள். அழுது வடிகின்ற தொடர்களை அறவே தவிர்த்து விடுங்கள். நீங்கள் படிக்கின்ற புத்தகங்களும் தன்னம்பிக்கை தருகின்ற நகைச்சுவையான, ஆரோக்கியமான புத்தகங்களாக இருக்கட்டும். வாழ்வில் வெற்றி பெற்றவர்களின் சுயசரிதைகளைப் படியுங்கள். அவர்களின் தன்னம்பிக்கை தரும் அனுபவ மொழிகளைப் படியுங்கள்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கவனமாயிருங்கள். சிலர் எப்போதும் தன் சோகங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர்களைத் தவிர்த்து விடுங்கள். மற்றவர்களின் சோகங்களைத் தாங்கும் சுமை தாங்கியாக மாறி விடாதீர்கள். எப்போதும் நேர்மறையாகச் சிந்திக்கும், உற்சாகமாகத் திகழும், துடிப்பாகச் செயலாற்றும் நண்பர்களைத் தேடிச் சென்று சந்தியுங்கள். அவர்களோடு நட்புப் பாராட்டுங்கள். எப்போதும் கலகலப்பாகப் பேசுபவர்களாக, நகைச்சுவை உணர்வோடு பேசுபவர்களாகத் திகழும் நண்பர்களோடு பழகுங்கள். நீங்களும் சீக்கிரமே நகைச்சுவை உணர்வு உள்ளவராக மாறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.

வீதியில் நடந்து செல்லும் போது ஏழைகளை, ஊனமுற்றவர்களைக் காண்பீர்கள். அவர்களைக் கண்டு பரிதாபப்படவோ, என்ன இந்த உலகம் எல்லாமே துன்பமாக இருக்கிறதோ என்று நினைத்தீர்களானால், உங்கள் மனம் இன்னமும் தளர்ந்து போகும். அதற்கு மாறாக, அம்மாதிரி இரக்கப்படும் நிலையில் இருப்பவர்களுக்கு உங்களால் ஏதேனும் உதவி செய்ய முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். அதற்கான முயற்சியில் இறங்குங்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# மக்களின் வாழ்வை உயர்த்துவது அரச அலுவலரின் பொறுப்பாகும்

## அரச அதிபர் இமெல்டா தெரிவிப்பு

**52 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இவர்களில் 29 ஆயிரத்து 500 பேர் விதவைகளாக வாழ்கின்றனர். 6 ஆயிரத்து 500 பேர் விசேட தேவைக்குரியவர்களாக இருக்கின்றனர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 26

'அரசஅலுவலர்கள் வறுமையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டிய பொறுப்புக்குரியவர்கள்' என யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபை, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'சுரக்கும' திட்டத்தினை யாழ். செயலகத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 52 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இவர்களில் 29 ஆயிரத்து 500 பேர் விதவைகளாக வாழ்கின்றனர். 6 ஆயிரத்து 500 பேர் விசேட தேவைக்குரியவர்களாக இருக்கின்றனர்.

அரச சேவையில் இல்லாதவர்களும் இவர்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஓய்வூதியத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற செய்தி மக்களைச் சென்றடைய வேண்டும். இதுவரையும் இசுறு திட்டத்தின் கீழ் 468 பேர் மட்டுமே ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரச சேவை என்பது பொதுச் சேவை. அதைப் புரிந்து கொண்டு மக்களுக்கு நாம் என்ன செய்கின்றோம் என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டு இதய சுத்தியுடன் பணியாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

எந்தவொரு ஓய்வூதியத் திட்டத்திலும் பங்குகொள்ளாத, 18-59 வயதுக்கிடைப்பட்ட அனைவருமே இந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயன் பெற முடியும். மாதாந்த தவணை முறையிலோ குறுகிய காலத் தவணை முறையிலோ நாம் செலுத்தப்படும் சிறு தொகையோடு சேர்ந்து, அரசு செலுத்தும் தொகையுமாக 60 வயதுக்குப்பின் 8 ஆயிரம் ரூபா வரையிலான தொகையை ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று பராமரிக்க எவருமே இல்லை என்று ஏங்கி இருக்கும் பலருக்கு இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும்.- என்றார். (எ-16)

## பரிசு

அச்சுவேலி, மார்ச் 26

தபால் சேவைகள் அமைச்சு 2012 ஆம் ஆண்டை "சகலருக்கும் நிலைபெறுதகு வலுச்சக்திகான " ஆண்டாகும் எனும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர் மட்டத்தில் முத்திரைக்கான முதல்நாள் உரை வெளியீட்டு தேவைக்காக நடத்திய அகில



இலங்கைரீதியிலான சித்திரப் போட்டியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவனின் சித்திரம் முதல் தரமான 20 சித்திரங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

(எ-11)



சிறிமுருகன் அறநெறிப் பாடசாலை நீர்வேலி கந்த சுவாமி கோவில் அருகில் உள்ள சிறி சுப்பிரமணிய சனசமூக நிலையக் கட்டடத்தில் கடந்த ஞாயிறன்று நா.சிவசுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.ஆலயத்தில் இருந்து படங்கள் எடுத்து வரப்படுவதையும் படத்தில் காணலாம். (38)

# உள்ளூர் கலைஞர்கள் வெளிக்கொணரப்பட வேண்டும்

## சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் செயலாளர்

சாவகச்சேரி, மார்ச் 26

பிறக்கும்போது எவரும் கலைஞர்களாகப் பிறப்பதில்லை. கலைவளம் மிக்க நிலையில் உள்ள ஒருவர் கலைஞராக மதிக்கப்படுகிறார். கலைஞர்களை உருவாக்கும் திறன் ரசனை மனம் கொண்டவர்களாலேயே முடியும். நாட்டில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் கணினி, தொலைக்காட்சி ஆகியவற்றின் வருகை உள்ளூர் கலைஞர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனால் பல கலைஞர்கள் இலை மறை காயாக வாழ்ந்து வருகின்றனர் என சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்ற உலக கலைஞர்கள் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே புத்திசிகாமணி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

முன்னைய காலங்களில் ஆலய திருவிழாக்களில் கலைகளைப் பேணும் இசை, நாட்டியம், கூத்து போன்ற நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தக் கலைஞர்களுக்கென [illegible] கூட்டம் கிராமம் கிராமமாக இருந்தது. ஆலய திருவிழாக்களில் புகழ் பூத்த இசை, நாட்டாமை நாடகக் கலைஞர்களை வரவழைப்பதை திருவிழா உபயகாரர்கள் பெருமையாக நினைப்பர். அன்றைய நிகழ்வுக்குக் கூடும் சனக் கூட்டம் அந்தத் திருவிழா உபயகாரர்களைத் திக்குமுக்காடச் செய்துவிடும்.

புகழ் பூத்த கலைஞர்கள் வரும் நாளில் உள்ளூர் கலைஞர்களால் உருவாக்கப்படும் நாடகங்கள், கூத்துக்கள் போன்றவையும் மேடையேற்றப்பட்டு உள்ளூர் கலைஞர்களின் திறமைகளும் வெளிக் கொண்டுவரப்படும்.

உள்ளூர் கலைஞர்களை எவரும் இன்றைய காலத்தில் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இதனால் எமது நாட்டின் கலைஞர்கள் தமது திறமைகளை வெளிக்கொண்டுவர முடியாமல் உள்ளனர்.

இந்தநிலையில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர், உலக கலைஞர்கள் தினத்தில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நடத்துவது பெருமைப்படவும் பாராட்டப்படவும் வேண்டிய செயலாகும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களை, அந்தந்த பிரதேச செயலகங்கள் வருடா வருடம் கௌரவிக்கின்றபோதும் உலக கலைஞர்கள் தினத்தில் அவர்களைக் கௌரவிப்பதில்லை. எதிர்வரும் காலங்களில் அனைத்துப் பிரதேசங்களிலும் கலைஞர் தினத்தைக் கொண்டாடி ஒரே நாளில் பல கலைஞர்கள் கௌரவிக்கப்படுவது யாழ்.மண்ணுக்குப் பெருமை தருவதாகும்.

இன்றைய காலத்தில் அழிந்து போகும் நிலையில் காணப்படும் கலைகளை, மீண்டும் வெளிக்கொணர ஒவ்வொரு கிராமத்திலும் கலைமன்றங்கள் உருவாக்கப்பட்டு உள்ளூரில் இலை மறை காயாக உள்ள கலைஞர்களைக் கொண்டு கலை இலக்கிய பண்பாடுகளை மக்கள் மனதில் நிலைத்து நிற்கக் கூடியதாகக் கலைகளை வளர்க்க முன்வர வேண்டும்.

தென்மராட்சி பிரதேச மக்களுக்கென பெரிய கலை மன்றக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் பௌர்ணமி தின நிகழ்வுகளாக பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் எமது கலைகலாசார பாரம்பரியங்களை மக்களுக்கு ஊட்ட வேண்டும்.- என்றார். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இந்தியாவின் எச்சரிக்கை

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேறியதில் இருந்து மஹிந்த அரசு தொடர்ச்சியாகத் தனது சீற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றது. வெளியாள்களின் தாளத்துக்கு ஆடப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் இலங்கையின் இறைமையைப் பாதிப்பதாக அமைச்சர்களும் தொடர்ச்சியாகக் கூறிவருகிறார்கள்.

இதற்கும் மேலாக இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமையே இலங்கை தோல்வி அடைவதற்கான காரணம் என்றும் ஆட்சியாளர்கள் எண்ணுகின்றனர், கருத்துச் சொல்லி வருகின்றனர். இதற்காக இந்தியா எதிர்காலத்தில், குறிப்பாகக் காஷ்மீர் விடயத்தில் அனுபவிக்கப் போகிறது என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமாகக் கூறிவருகின்றனர்.

தீர்மான வரைவு ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்பட்ட உடனேயே அமெரிக்காவுக்கு எதிரான போக்கு நாட்டு மக்களிடம் ஊட்டி வளர்க்கப்பட்டது போன்று இப்போது இந்திய எதிர்ப்புணர்வுக்கும் தூபம் போடப்படுகின்றது.

அமெரிக்கா போன்று அல்லாது இந்தியா மிக நெருக்கமான நாடு என்பதாலும் இலங்கையின் பொருளாதாரத்தில் அது கணிசமான பங்கையும் செல்வாக்கையும் கொண்டிருப்பதாலும் அமெரிக்கா அளவுக்கு இந்தியாவைத் தூக்கி எறிந்து கதைக்க அரச தரப்பினரால் இப்போது முடியாமல் இருக்கிறது. ஆனாலும் தீர்மானத்துக்கு எதிரான மக்களின் உணர்வுகளைக் கிளறுவதன் மூலம் அதற்கு முயற்சிக்கிறார்கள்.

உள்நாட்டில் இப்படியென்றால், இராஜதந்திர ரீதியில் இந்தியாவின் எதிரிகளாகக் கருதப்படும் சீனா மற்றும் பாகிஸ்தானுடன் தனது நெருக்கத்தை அதிகப்படுத்துவதையே இலங்கை மேற்கொள்ளும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இதை இந்தியாவும் புரிந்து வைத்திருக்கிறது.

அதனாலேயே ஐ.நா. தீர்மான விடயத்தில் தனது நாடு என்ன செய்தது என்பதை இந்தியப் பிரதமர் இலங்கைக்குப் பகிரங்கமாக நினைவுபடுத்தி இருக்கிறார். இலங்கை மீதான தீர்மானத்தை எதிர்க்கக்கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 19ஆம் திகதி அனுப்பி வைத்த கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் அனுப்பிய பதில் 24ஆம் திகதி ஊடகங்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இலங்கையின் இறைமையை ஐ.நா. தீர்மானம் பாதிக்காத வகையில் அது நடுநிலையுடன் இருப்பதை இந்தியா உறுதிப்படுத்தி இருப்பதாக அந்தக் கடிதத்தில் இந்தியப் பிரதமர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் தமக்குஉறுதி அளித்தபடி, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இலங்கை அரசு தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருக்கிறார்.

வழக்கமாக இலங்கை – இந்திய அரசுகளுக்கு இடையிலோ, இரு நாடுகளின் தலைவர்கள் இடையிலோ பரிமாறப்படும் கடிதங்கள் பகிரங்கப்படுத்தப்படுவது வெகு அபூர்வம். ஆனால், இந்தியப் பிரதமரின் இந்தக் கடிதம் இந்திய அரசின் இணையத் தளத்தில் உத்தியோகபூர்வமாகப் பகிரங்கப்படுத்தப்பட்டது.

அதன் பொருள், இந்தியா இலங்கைக்கு தெளிவான சில செய்திகளை வழங்க விரும்புகிறது என்பதுதான். ஜெனிவா தீர்மானம் தவிர்க்க முடியாதது. அதனை ஆதரித்தமைக்காக இந்திய எதிர் நிலைப்பாட்டை இலங்கை அரசு எடுக்கக்கூடாது என்பதே அந்தச் செய்தி; எச்சரிக்கை. அது புறக்கணிக்கப்படும்போது இந்தியா இப்போது பாதுகாக்க முற்பட்ட இலங்கையின் இறைமையைத் தானே மீறத் தயங்காது என்பது கடந்தகால வரலாறு.

# இலங்கை வெற்றி பெறுவது கடினம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை மீது ஏற்படுத்தும் தாக்கமானது ஒரு குறியீடாக இருக்கும் என இலங்கையைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழனன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்ப்படுத்துமாறு கோரும் முன்மொழிவுக்கான வாக்களிப்பு மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், தலைநகர் கொழும்பு முழுவதும் பௌத்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் முன்மொழிவானது அந்த நாட்டு அரசைத் தூண்டுகின்றது. அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிக்கப்படுவதானது அந்த நாட்டின் மீளிணக்கப்பாட்டை மிகப் பயனுள்ள வகையில் நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும் என மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்கத் தூதர் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்தது போன்று, இலங்கைத் தலைவர்கள் முன்மொழிவை நிராகரித்துள்ளனர். இந்த முன்மொழிவானது நாட்டுக்கு தீங்கிழைப்பதாகவும், தேவையற்ற ஒன்றெனவும், காலத்திற்கு உகந்ததல்ல எனவும், ஜெனிவாவிலுள்ள இலங்கை பிரதிநிதிகளின் தலைவரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். "எமக்கு மேலும் கால அவகாசத்தையும், இடைவெளியையும் வழங்கியிருக்கக் கூடாதா?'' என அவர் வினவியுள்ளார்.

ஆனால், இலங்கையில் மூன்று பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரானது நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகளும் 10 மாதங்களும் ஆகிய நிலையில் தற்போது இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கான உரிமைகளை அந்த நாட்டு அரசு வழங்குவதற்கான காலம் நெருங்கிவிட்டது என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்தனர்.

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் தொடரப்பட்ட குருதி தோய்ந்த போரானது வடபகுதியில் 2009இல் நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட போது பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்போது இலங்கைக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான முன்மொழிவுக்கு, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உள்ள 47 உறுப்பு நாடுகளில் 24 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும் வாக்களித்ததுடன், எட்டு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்துள்ளன.

"அதிகரித்த அழுத்தங்கள் மற்றும் பலவிதமான நெருக்கடிகள் வழங்கப்பட்ட போதிலும் 15 நாடுகள் எமக்கு ஆதரவாக வாக்களித்தமை பாரிய இலங்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்'' என இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"இதுவரை காலமும் இலங்கை அரசால் கவனத்திற் கொள்ளப்பட்ட விடயங்களுக்கு அமைவாகவே, எமது கொள்கைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுவதுடன், நாட்டு மக்களின் நலன்களும் கவனத்திற் கொள்ளப்படும். பிற அழுத்தங்களால் இவ்வாறான நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படாது'' எனவும் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கையின் அயல் நாடும், இலங்கையின் நட்பு நாடாகவும் விளங்கும் இந்தியாவானது அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளது. 2009இல் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நகர்வுகளை மேற்கொண்ட போது இந்தியா இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்தது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மார்ச் 19 இல் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

"இலங்கையில் உள்ள அனைத்து இனங்களும் மதங்களும் மதிக்கப்படத்தக்கவகையில் அரசியற் தீர்வொன்றை உருவாக்கி நாட்டில் மீளிணக்கப்பாட்டை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்'' என ஐ.நா. மனித உரிமைகள் சபையால் 2009இல் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத் தொடரின் போது தெரிவிக்கப்பட்டதாக இந்தியாவின் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"போரின் இறுதி மாதங்களில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட போர் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு'' இலங்கையை இந்தியா வலியுறுத்தி நின்றது.

தமிழ் மக்கள் உட்பட இலங்கையில்வாழும் அனைத்து சமூகத்தவர்களுக்கும் இடையில் உண்மையான, நேர்மையான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான சில முன் நடவடிக்கைகளையே நாம் சபையில் முன்வைத்திருந்தோம்- என இந்தியாவின் உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கையின் அயல்நாடாக இந்தியா இருப்பதால் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்விரு நாடுகளுக்கும் இடையில் இறுக்கமான நட்பு பேணப்பட்டு வருகின்றது. அதாவது இவ்விரு நாடுகளுக்கும் இடையில் ஆத்மார்த்தமான, கலாசார ரீதியான உறவு பேணப்பட்டு வருகிறது'' எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அதாவது இலங்கை அனைத்துலக மனித உரிமை நடைமுறைகளுக்கு அமைவாக செயற்படவில்லை என்பதை பெரும்பாலான நாடுகள் வெளிப்படுத்தி நிற்பதே இதன் அடையாளமாகும்'' என மனித உரிமை விவகாரத்திலுள்ள முரண்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆய்வு அமைப்பான சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பின் தலைவரான றுக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசானது கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமைவாகச் செயற்பட்டு, சபையின் முன்மொழிவின் மூன்றாவது பரிந்துரையில் குறிப்பிடப்பட்ட விடயத்தை நிறைவேற்றுவதில் சபையுடன் இணைந்து செயற்படுமா அல்லது இல்லையா'' என்பதிலேயே இலங்கையின் அடுத்த கட்ட நகர்வு தங்கியுள்ளதாகப் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2002 தொடக்கம் மே 2009 வரையான காலப்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற போரின் போது இடம்பெற்ற உண்மைகளைக் கண்டறிவதற்காக மஹிந்த ராஜபக்ஷவால் 2010இல் உருவாக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது பரிந்துரைகள் அடங்கிய தனது இறுதி அறிக்கையை கடந்த நவம்பரில் கையளித்திருந்தது.

ஜெனிவாவில் வாக்களிப்பு இடம்பெறுவதற்கு 24 மணிநேரம் முன்பாக புத்தளத்தில் மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்ட பொது மக்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் "எந்தவொரு வெளிநாட்டுத் தலையீட்டையும் நான் அனுமதிக்கமாட்டேன்'' எனத் தெரிவித்திருந்தார்.

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நிறைவடைந்த பின்னர், இது இரண்டாவது சோதனைக் களமாக உள்ளது'' என மார்ச் 13 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட பொதுக் கருத்தரங்கு ஒன்றில் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் மேற்குலக நாடுகள் தமது தலையீடுகளைக் காண்பிக்க கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து வீரவன்ஸ ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளார். இவர் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பு கடந்த 2010 நடுப்பகுதியில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார். ஜனாதிபதியின் தலையீட்டால் இந்தப் போராட்டம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஐ.நா. முன்மொழிவை தமிழ் அரசியற் தலைவர்கள் ஆதரிப்பதற்கு வேறுபட்ட காரணம் உண்டு. தமிழ் மக்களின் பிரதேசங்களில் அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு வழங்கவில்லை என்பதாலும், இதற்கான தீர்வை அனைத்துலக சமூகம் மட்டுமே பெற்றுக் கொடுக்க முடியும் என்பதாலும் இவ்வாறான முன்மொழிவு அவசியமான ஒன்று என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

"தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான தீர்வை எட்டுவதில் இலங்கை அரசு எதனையும் உருப்படியாக செய்யவில்லை. அது தனது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுகின்றது. இதனால் இந்த விடயத்தில் அனைத்துலக சமூகத்தின் ஆதரவைக் கோருவதைத் தவிர வேறு தெரிவு எதனையும் கொண்டிருக்கவில்லை'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

"கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளைக் கூட இன்னமும்அரசு நிறைவேற்றவில்லை. ஆகவே அனைத்துலகின் பங்களிப்பின்றி இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என நாம் ஆழமாக நம்புகிறோம்'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

- நன்றி புதினப்பலகை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அடுத்த நகர்வு என்ன? மக்களுக்கு அறிவிக்க வேண்டும்

**25.03.2012 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி**

தொகுப்பு: கோகுலன்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை - பெரும்பாடு பட்டு அமெரிக்காவின் தீர்மானத்தை நிறைவேற்றி முடித்திருக்கிறது. பல்லில்லாத பொக்கை வாய் போல இந்தத் தீர்மானம் இருக்கிறது. மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையையும் இதற்கு ஒப்பிடலாம். இருந்தாலும் இதில் உள்ள ஆபத்துக்களைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

முதல் தடவையாக இந்த நாட்டை ஐ.நா தனது நுணுக்குக்காட்டிக்குள் மடக்கி வைத்து சர்வதேச சமூகத்தின் பரிசீலனைக்குள்ளாக்கியிருக்கிறது.

தீர்மானத்தின் இறுதி வடிவம் ஜெனிவாவில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன் இந்தியாவும் அமெரிக்காவும் பல நாள்கள் அதன் உள்ளடக்கம் தொடர்பாக ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்துள்ளன. தீர்மானத்தில் காணப்பட்ட ஒரே ஒரு கடினமான அம்சத்தை நீக்கிவிடுவதற்கு இந்தியா முயற்சி எடுத்தது. தீர்மானத்தின் பிரிவுகளை நடைமுறைபடுத்துவதற்கு ஆலோசனை வழங்கவும் தொழில்நுட்ப உதவி வழங்கவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்குவதுடன் அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தும் பகுதியை தீர்மானத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பது இந்தியாவின் கோரிக்கையாக இருந்துள்ளது. இந்தப் பிரிவு உள்ளடக்கப்படுவது இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் அனைத்தையும் ஆராய்வதற்கு உதவியாக இருக்கும் என்று அமெரிக்க பிரதிநிதி எய்லீன் சேம்பர் லேன் டொனஹோ வாதிட்டு வந்தார். இந்தியாவின் சார்பில் ஜெனிவாவுக்கான புதிய நிரந்தர தூதுவராக நியமிக்கப் பட்டுள்ள திலிப் சின்ஹா கடுமையாக தன் வாதங்களை முன்வைத்து குறித்த பிரிவை அகற்றாவிடில் இந்தியா எதிர்த்து வாக்களிக்க வேண்டி ஏற்படலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துள்ளார். தனது வாதங்களை நிலை நாட்ட யு.என். எச்.ஆர். இன் சில தீர்மானங்களைச் சுட்டிக்காட்டியதுடன் மனித உரிமை மீறல்களைச் சரி செய்வதற்கு உறுப்பு நாடுகள் பங்கு பணி ஆற்ற வேண்டுமேயன்றி தீர்மானங்களை உறுப்பு நாடுகளின் தொண்டைகளுக்குள் திணிக்க முயலக் கூடாது என்பதாக அவர் எடுத்துக் காட்டி வாதிட்டுள்ளார். கடும் எத்தனங்களின் பின்னர் டொனஹோ அம்மையார் சிங்சின் வாதங்களை ஏற்றுக்கொள்ள நேர்ந்துள்ளது. இவ்வாறு தான் தீர்மானத்தில் காணப்பட்ட இலங்கையை கட்டுப்படுத்தும் இறுக்கமான பகுதி தீர்மானத்திலிருந்து நீக்கப்பட்டது.

இப்போதைய நிலையில் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை மீது நடவடிக்கை ஏதும் எடுப்பதானால் அவ்வாறு செய்வதற்கு முன்னர் அரசுடன் ஆலோசனை செய்து அதன் ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**அமெரிக்காவின் அறிவுறுத்தல்**

மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க ஆதரவிலான இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறி சில மணி நேரத்துக்குப் பின்னர், அமெரிக்காவின் பிரதிபலிப்பு மிக உயர் மட்டத்திலிருந்து வெளியிடப்பட்டது. அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரன் அறிக்கையொன்றை விடுத்திருந்தார். அமெரிக்கா சர்வதேச சமூகத்துடன் இணைந்து இலங்கைக்கு மிக வலுவான சமிக்ஞையொன்றை வழங்கியிருக்கிறது. உண்மையான மீள் இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக் கூறல் மூலமாகவே இலங்கையில் நிலையான அமைதியைக் காண முடியும். அந்த வகையில் சர்வதேசம் உதவி புரிய காத்திருக்கின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நிறைவேற்றவும் பொறுப்புக் கூறலுக்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவும் அடுத்த படிமுறைகள் தெளிவாகவே இருக்கின்றன என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் 'எதிர்கால செயற்பாடுகள்' தொடர்பான விவாதங்களை நடத்துவதற்கான வாஷிங்ரன் வருகையை எதிர்பார்த்திருப்பதாகவும் கிளின்ரன் தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் இந்த விஜயம் நடைபெறுவதற்கான திகதிகள் தொடர்பாக கொழும்புக்கும் வாஷிங்ரனுக்குமிடையில் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. அவர் வாஷிங்ரனுக்கு போவார் என்றால் ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை செயற்படுத்த இலங்கை அரசு துணிந்துவிட்டது என்று பொருளாகும். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரகமவில் இடம் பெற்ற ஒரு நிகழ்வில் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் உள் விவகாரங்களில் வேறு எந்த நாடும் தலையீடு செய்வதை நாம் சகித்துக் கொள்ள மாட்டோம் என்று அறிவித்திருந்தார்.

> “மக்களை இணைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்துவதன் நோக்கம் என்னவென மக்கள் அறிவதற்கு விளக்கம் அவசியம்”.

அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்தும் ஒரு பிரதிபலிப்பு வெளியாகியிருந்தது. அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் பேச்சாளர் ரொம்மி வீட்டர் பின்வருமாறு கூறியிருந்தார்.

''தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பது போல் மீள் இணக்கத்தை ஏற்படுத்தவும் பொறுப்புக் கூறலுக்குமான விரிவான வேலைத் திட்டமொன்றை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்துகின்றது. இந்த முக்கியமான குறிக்கோள்களை அர்த்தமுள்ள வகையில் நிறைவேற்றி சாதிப்பதற்கு ஐ.நா. நிபுணர்களோடும் சர்வதேச சமூக பங்காளிகளோடும் இணைந்து பணிபுரியுமாறும் கேட்டு கொள்கின்றது.''

மனித உரிமைகள் சபையில் இலங்கையில் மீள் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் பொறுப்புக் கூறலை நிலைநாட்டவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை அறிக்கை பாராட்டியுள்ளது.

வியாழக்கிழமை ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை தாக்கல் செய்து அமெரிக்காவின் சார்பில் அந்த நாட்டின் தூதுவர் எய்லின் சேம்பர் லேன் டொனஹோ அம்மையார் பேசுகையில் பின்வரும் கருத்தை வெளியிட்டார்.

இலங்கை அரசாங்கமானது தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளையே அந்தநாடு செயல்படுத்தாத நிலையிலும் ஆணைக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இந்த நடுநிலையான - சமாந்தரமான தீர்மானத்தை மனித உரிமைச் சபை நிறைவேற்றுவது பொருத்தமெனக் கருதுகின்றோம். இலங்கை அரசை அதன் சொந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும்படியும் அர்த்தமுள்ள பொறுப்புக் கூறலுக்கு ஒருமுகமான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் தீர்மானம் வற்புறுத்துகிறது. இதன் மூலமே நிலையான மீள் இணக்கத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

**பின் வரிசையில் ஜி.எல்.பீரிஸ்**

கொழும்பில் சில ஊடகங்கள் தெரிவித்ததற்கு மாறாக ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்கவே ஜெனிவாவில் இலங்கைக் குழுவின் தலைவராக செயற்பட்டார். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்ற போது இலங்கையின் சார்பில் அவரே பதிலளித்துப் பேசியதிலிருந்து இது உறுதியாயிற்று. வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பின் வரிசையில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன் ஆகியவர்களுடன் அமர்ந்திருக்கக் காணப்பட்டார். முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அமைச்சர் சமரசிங்காவுக்கு அருகில் முன் வரிசையில் காணப்பட்டார். வியாழக்கிழமை சபைக் கூட்டம் தொடர்பான தொலைக் காட்சியில் பீரிஸ் மிகவும் சங்கடத்துடன் இருப்பது தெரிந்தது.

மனித உரிமைகள் சபையின் 19ஆவது மாநாடு முடிவடைந்து விட்டது. கொழும்பில் அதற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களும் முடிவடைந்துள்ளன. அடுத்து என்ன என்பதை முடிவு செய்வதற்கு இலங்கைக்கு ஒரு வருட அவகாசம் இருக்கிறது. ஆள்களுக்கு பட்டம் சூட்டி அழைப்பதற்கும் அவமானப்படுத்துவதற்கும் மற்றும் உபாயங்களை வகுப்பதற்கும் முன்னர் அவைகளுக்கு அப்பாலும் கவனம் செலுத்துவது அவசியம். தேசியப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டிருப்பதால் ஓர் உபாயத்தை வகுப்பதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசு எதிர்க்கட்சிகளோடும் ஆலோசனைகள் நடத்துவது அவசியம். இந்த அரசாங்கம் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் மக்களை இணைத்து செயற்படுவதற்கு அப்பால் என்ன செய்யப்போகிறது என்பது முக்கியமான கேள்வியாகும். அரசாங்கம் பகிரங்கமாக இது பற்றி பேச வேண்டும். நாடு எதை நோக்கி நகர்கின்றது என்பது மக்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். ✱

# நிறங்களும் உணர்வுகளும்

கே.என்.ராமச்சந்திரன்

இணையத்தளத்தை மேய்ந்த போது ஓர் அமெரிக்க ஆய்வாளர் எழுதியிருந்த கட்டுரை கண்ணில்பட்டது. மனிதர்கள் தூக்கத்தில் காணும் கனவுகளில் வர்ணங்கள் தெரியாது எனவும் எல்லாம் கறுப்பு -வெள்ளைப் பிம்பங்கள்தான் எனவும் அவர் கூறுகிறார்.

நாம் கண்களால் பொருள்களைப் பார்க்கிறபோது அவற்றின் பிம்பம் விழித்திரையில் விழும். அதிலுள்ள கூம்பு செல்களும் தண்டு செல்களும் பிம்பத்தைப் பகுப்பாய்வு செய்து வெவ்வேறு நிறங்களுக்கு வெவ்வேறு மின் சைகைகளை மூளைக்கு அனுப்பும். மூளை அவற்றைத் தொகுத்துக் வர்ணக் காட்சியாக மாற்றிக் காட்டுகிறது.

கனவு காண்பதில் விழித்திரையின் பங்கு பணி ஏதுமில்லை. எனவே கனவுகள் கறுப்பு - வெள்ளையாகத் தான் தெரியும். ஆனாலும் நம் மனதில் உள்ள முன்பதிவுகள் காரணமாக கறுப்பு - வெள்ளை ஒளிப்படங்களை அல்லது திரைப்படங்களைப் பார்க்கிறபோது குங்குமம் சிவப்பு, கூந்தல் கறுப்பு என்று கற்பித்துக்கொண்டு விடுவதைப்போலவே கனவுகளிலும் நிறங்களைக் கற்பித்துக் கொண்டு விடுகிறோம் என்று அந்த ஆய்வர் கூறுகிறார்.

நிறம் இல்லாத கனவு எல்லாம் ஒரு கனவா? நல்ல வேளையாக நனவுலகம் வர்ணமயமாக உள்ளது. கட்டடங்களுக்குப் பூசும் வர்ணங்களை முடிவு செய்ய அதற்கென்றுள்ள ஆலோசகர்கள், வாஸ்து, மருத்துவம், மனோதத்துவம் என்று பல உத்திகளைக் கையாள்கிறார்கள்.

நீலமும் பச்சையும் உடலையும் மனதையும் நலமாக்கும். அதனால்தான் மருத்துவமனைகளில் நீல நிறச் சீருடைகளையும் மறைப்புகளையும் விரிப்புகளையும் பயன்படுத்துகிறார்கள்.

சிவப்பு ஆற்றலையும் வேகத்தையும் அதிகாரத்தையும் அடையாளப்படுத்துவது. வெள்ளையர் ஆட்சியில் சிவப்புத் தொப்பி (பொலிஸ்)யைக் கண்டாலே மக்களுக்கு உதறல் எடுக்கும்.

பொலிஸ் நிலையங்களும் அரசு அலுவலகங்களும் பெரும்பாலும் சிவப்பு நிறத்திலிருக்கும். எல்லா நிறங்களும் அடங்கியதான வெண்மை மனதை அமைதிப்படுத்தும். மருத்துவர்களும் தாதிகளும் வெள்ளைச் சீருடை அணிவதன் நோக்கம் நோயாளியின் அச்சத்தைத் தணிப்பது ஆகும்.

நிறமில்லாத நிலையான கறுப்பு வெறுப்பு, எதிர்ப்பு, துயரம் ஆகியவற்றின் சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது. துறவிகள் அணியும் காவி தீயின் குறியீடாக அமைந்து சிதையை நினைவூட்டி எல்லா உயிர்களும் இறுதியில் மடிந்து போகும் எனும் உண்மையைச் சுட்டிக்காட்டும்.

கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்வதைவிட நீல வானத்தில் அல்லது பசும் புல்வெளியில் ஒரு புள்ளியைக் கண்ணிமைக்காமல் பார்ப்பதன் மூலம் மனதை விரைவாக ஒரு முகப்படுத்திக் குவித்து மோன நிலையை அடைய முடியும் எனச் சில யோகிகள் கூறுகிறார்கள்.

அந்த உத்தி கண்ணுக்கு வலுவூட்டிப் பார்வையை மேம்படுத்தும் என மருத்துவர்கள் கருதுகிறார்கள். நீல வானையும் நீலக்கடலையும் கூர்நோக்குச் செய்வதன் மூலம் அவற்றின் விசாலத்தை மனதில் நிரப்பச் சிந்தனைகளற்ற வெற்றிடமாக்க முடியும்.

குளிர்பருவங்களில் அடர்நிற ஆடைகளை அணிவது உடலில் கதகதப்பை உண்டாக்கும் எனவும் வெப்பப் பருவங்களில் வெளிர் நிற ஆடைகளை அணிவது உடலைக் குளிர வைக்கும் எனவும் உடையலங்கார நிபுணர்கள் கூறுகின்றனர்.

நிற சிகிச்சை பற்றிய கருத்துகள் புராதன இந்திய, சீன, எகிப்திய மருத்துவர்களால் சுவடி நூல்களில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. அவை தற்காலத்தில் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சில நிறங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் நலம் பயக்கும். வேறு சில ஊறு விளைவிக்கும். வீடுகளையும் அறைகளையும் சரியான நிறங்களில் அமைத்து நலம் பெறலாம் என நிற சிகிச்சை நிபுணர்கள் கூறுகிறார்கள்.

வழிபாட்டுத் தலங்கள், மருத்து வமனை, பள்ளிகள் ஆகியவற்றின் நுழைவாயில்களிலும் முகப்புகளிலும் ஊதா நிறத்தைப் பூசினால் வருகிறவர்களின் உடலும் மனதும் சஞ்சலம் நீங்கித் தொழுகை அல்லது சிகிச்சை அல்லது கற்றலுக்கு ஆயத்தமாகும்.

படுக்கையறை, படிப்பறை, பணியறை, ஓய்வறை ஆகியவற்றில் கரு நீல நிறத்தைப் பூசினால் உள்ளுணர்வுகளும் ஆன்மிக அறிவுகளும் கூர்மையாகும்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னைத்தானே நம்பாது சந்தேகம்

ஓட்டப் பந்தயத்தில் பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டம் வெறித்தனமாகக் கைதட்டிக் கொண்டிருந்தது.

''இவர்கள் ஏன் இப்படி பைத்தியம் பிடித்தவர்கள் போன்று ஓடுகிறார்கள்'' என்று கேட்டார் ஒரு பாமரர்.

''அங்கே யார் முதலில் ஓடி வருகிறார்களோ அவங்களுக்கு ஒரு லட்சம் பரிசு தருவார்கள்'' என்றார் பக்கத்தில் இருந்தவர்.

''முதலில் வரும் ஒருவனுக்குத் தானே ஒரு லட்சம் பரிசு வழங்குவார்கள். அப்புறம் ஏன் மற்றவர்கள் தேவையில்லாமல் ஓடுகிறார்கள்'' என்றார் பாமரர். பக்கத்தில் இருந்தவர் மயங்கி விழுந்தார்.

பின்னால் ஓடி வருகிறவர்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில் ஓடுகிறார்கள். எதுவும் நடக்கலாம். எப்போதாவது முந்தி விட வாய்ப்பு உண்டு. எப்படியாவது ஜெயித்து விட முடியும்... இந்த ஆழ்ந்த நம்பிக்கை அவர்களை ஓட வைக்கிறது. பல சமயங்களில் அது பலித்தும் இருக்கிறது.

ஒரு நூலிழையில் வெற்றி மாறி இருக்கிறது. முதல் பரிசுக்காரர் தடுக்கி விழ இரண்டாமவர் பரிசு பெற்றதும் நடந்து இருக்கிறது. முதல் பரிசு பெற்றவர் ஊக்க மருந்து தின்றதாக நிரூபிக்கப்பட்டு பரிசு திரும்ப வாங்கப்பட்டு அடுத்தவர் தோளில் மாலையானதும் புதிய சம்பவம் அல்ல. அதனால் ஏதேனும் நடந்து விடும் என்கிற உறுதியான நம்பிக்கைதான் பலரையும் வாழ்க்கையிலும் ஓட வைக்கிறது. எனவே வாழ்வின் மீது நம்பிக்கை வையுங்கள்.. பயப்படாதீர்கள். சந்தேகப்படாதீர்கள்.

நம்பிக்கை உள்ளிருந்து ஊற்றெடுக்கும் உயிர்ச் சக்தி. அதை வெளியிலிருந்து ஒருவர் உங்களுக்குத் தர முடியும் என்று எதிர்பார்க்காதீர்கள். ஒரு முட்டையை உள்ளிருந்து ஒரு சக்தி உடைத்தால்தான் அது ஜனனம். அதையே வெளியிலிருந்து ஒருவர் உடைத்தால் அது மரணம். முன் நிகழ்வு புது வாழ்வின் ஏற்பாடு. பின் நிகழ்வு யாரோ ஒருவரது சாப்பாடு. எனவே உங்கள் சிறைகளை நீங்களே உடைத்தெறியுங்கள். பிறரை எதிர்பாராதீர்கள்.

நம்பிக்கைதான் வாழ்வின் உந்து சக்தி. ஒரு துளி நம்பிக்கையில் அதாவது சின்னச் சின்ன மழைத் துளியில் பிழைத்த சிறு செடிகள் பின்னாளில் பெரிய ஆலமரமாகக் கிளைவிரித்த சம்பவங்கள் உலகில் பல நடந்திருக்கின்றன. மருந்தால், மருத்துவரால், பிரார்த்தனையால், நாம் உயிர் பிழைத்து விடமுடியும் என்கிற சின்ன நம்பிக்கையில் தான் பல நோயாளிகள் அரசு மருத்துவமனையின் நெடிய தாழ்வாரங்களில் படுத்துக் கிடக்கிறார்கள். பிழைத்தும் விடுகிறார்கள்.

இதற்கு நேர்மாறாக, சந்தேகம், அவநம்பிக்கை பலரை உயிருள்ள பிணங்களாக உலவ விட்டிருக்கிறது. சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் ஒரு சின்ன வித்தியாசம் சொல்லலாம். ஒரு நல்லது நடக்குமோ, நடக்காதோ என்பது சந்தேகம். கெட்டதுதான் கண்டிப்பாக நடக்கும் என்று தீர்மானிப்பது அவ நம்பிக்கை. சந்தேகப்படுகிறவர்கள் தானும் துன்பப்பட்டு, பிறரையும் துன்பத்தில் ஆழ்த்தி விடுவார்கள்.

பெண்கள் சுய உதவிக் குழுக்களின் மாநாட்டில் ஒரு முறை பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. அங்கு வந்திருந்த ஒரு பெண்மணியைப் பேசச் சொன்ன போது, அவர் கூறிய விஷயம் எல்லோரையும் உறைய வைத்தது. இந்தப் பெண்ணின் கற்பைச் சோதிக்க அவள் கணவன், தன்னுடைய ஆண் நண்பர்களை விட்டுப் பழகச் சொல்வானாம். அத்து மீறி நடக்கும்படி அவனே அனுப்புவானாம். சகிக்க முடியாமல் அவனைப் பிரிந்து இப்போது வேறு ஓர் ஆணுடன் தான் வாழ்வதாகக் கூறினார். பிறகு அது சரியா, தவறா என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்க கூட்டம் ஒரு மனதாக சரி என்று ஆவேசமாக அலறியது.

பொலிஸார், ராணுவம், நீதிமன்றம் இவை யாரையும் சுலபத்தில் நம்பாது. அது ஒரு வகையில் சரியும் கூட.. காரணம் அவை அரச இயந்திரம்.. இயந்திரத்துக்கு இதயம் இருக்க முடியாது. பிறரை நம்பவதற்கு ஓர் இதயம் வேண்டுமோ. ஆனால் மனிதர்கள் இப்படி இருக்கலாமா?

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஒரு ஜேர்மனிய ராணுவ மேஜர் பறந்த விமானத்தை ஆங்கில ராணுவ மேஜர் சுட்டு வீழ்த்தினார். காயமடைந்த ஜேர்மனிய மேஜரைத் தமக்குச் சமமான பதவியில் இருந்தவர் என்ற மரியாதையில் மருத்துவமனையில் சேர்த்து கௌரவமான, முறையான வைத்தியமும் செய்தார் ஆங்கிலேயர். ஆனால் வலது கால் அழுகிப் போனதால் வெட்ட வேண்டியதாயிற்று. வேதனையில் இருந்த ஜேர்மனியரைச் சமாதானப்படுத்த ''உங்களுக்கு நான் எதுவும் உதவ முடியுமா? என்று அன்பாகக் கேட்டார் ஆங்கிலேயர்.

''என் வெட்டப்பட்ட காலை இந்த அந்நிய மண்ணில் புதைக்காதீர்கள். என் மனைவிக்கு அனுப்பி விடுங்கள். அவள் என் தந்தை மண்ணாகிய ஜேர்மனிய மண்ணில் புதைக்கட்டும்'' என்றார். அப்படியே நடந்தது. ஆனால் சிகிச்சை பலனின்றி இடது கால், இடது கை இப்படி ஒவ்வொன்றாக வெட்ட நேர்ந்தது.. அவர் விருப்பப்படி ஜேர்மனிக்கும் அனுப்பப்பட்டது. இறுதியாக எஞ்சிய வலது கையை வெட்டும் போதும் இதே கோரிக்கை வைத்தார் ஜேர்மனியர்.

ஆங்கிலேய மேஜர் கொஞ்சம் தயங்கியபடி ''எனக்கொரு சந்தேகம்.. நீங்கள் பகுதி பகுதியாக ஜேர்மனிக்கு தப்பிப் போகப் பார்க்கிறீர்களா?'' என்றார். எவ்வளவு மடத்தனமான சந்தேகம்.



சுகி.சிவம்

# யாழ். பெண்களின் கல்வி உயர்வுக்கு அடித்தளமாகத்திகழும் யாழ். இ.ம.க.

லக்ஸ்மன்




யாழ். மாவட்டத்திலேயே முதல் தர பாடசாலைகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலைகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் முக்கிய இடம் உண்டு. யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தில் கல்லூரி என்ற அந்தஸ்துடன் உள்ள இந்தக் கல்லூரி பெண்களின் கல்வி உயர்வுக்கு ஓர் ஆரம்பமாகவும், அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த உன்னத தொண்டாற்றி வரும் ஒரு மையமாகவும் விளங்கும் இது யாழ்ப்பாண இந்து மகளிருக்கு கலை பண்பாடு பாரம்பரியங்களை வழங்கும் பெரும் பங்காளியாகவும் திகழ்கின்றது.

1888 இல் சைவ பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டபின் யாழ். இந்துக் கல்லூரியை நிர்வகிக்க 1902 ஆம் ஆண்டு ஒரு நிர்வாக சபையை நியமித்து, இந்தச் சபை 13 இந்துக் கல்லூரிகளையும், பாடசாலைகளையும் நிறுவி நிர்வகித்து வந்தது. 1938 ஆம் ஆண்டு வரை பெண்களும் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே 1943 ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட சமயம் இந்துக் கல்லூரியின் அதிபராக பணியாற்றிய ஏ.குமாரசுவாமியே இதன் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தக் கல்லூரியின் ஸ்தாபகர் எனக் கூறப்படும் திருமதி விசாலாட்சி சிவ குருநாதன் தனது காணியில் 24 பரப்புக் காணியை இந்தக் கல்லூரி ஆரம்பிப்பதற்கென வழங்கியுள்ளார். அவருடன் அவரது கணவரது உறவினர் திருமதி வள்ளியம்மை சிவ குருநாதனும் வழங்கிய 16 பரப்புக் காணியில் சபையினரின் ஒத்துழைப்புடன் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து பிரிந்து, ஒரு கிளையாக இந்துக் கல்லூரியினதும் அதனுடன் இணைந்த ஏனைய பாடசாலைகளினது, அதிகார சபையின் நிர்வாகத்தில் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு அருகே குடியிருந்த சிவகுருநாதர் பொன்னுச்சாமி என்பவரின் பொன்னாலயம் என்னும் வீட்டில் முதல் முதல் இயங்கத் தொடங்கிய இந்தக் கல்லூரி 1943 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10ஆம் திகதி அதிகாரசபை அமைத்த மகளிருக்கான ஒரே யொரு கல்லூரி ஆகியது.

சாதாரண தரப் பரீட்சையிலும் சரி, உயர்தரப் பரீட்சையிலும் சரி 95 வீதம் முதல் நூறு வீத சித்திகள் கிடைக்கின்றன. ஆங்கிலத்திலும் சிறப்புத் தேர்ச்சிகள் கிண்டக்கின்றன. பல்வேறு பிரிவுகளிலும் கணிசமான மாணவிகள் பல்லைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கள் பெறுகின்றனர்.

பொன்னாலயம் வீட்டில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும், செல்வி காயத்திரி பொன்னுத்துரை தற்காலிக அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, சிறிய அளவில் ஒரு விடுதியை அமைத்ததாகவும் தரம் நான்கு முதல் தரம் எட்டு வரை வகுப்புக்கள் இயங்கிய இங்கே நூற்றிப்பத்து மாணவிகளும் எட்டு ஆசிரியர்களும் இருந்தனர்.

இந்தக் காலங்களிலே தமிழ் வளர்ச்சியிலும் விளையாட்டுத்துறையிலும் தனக்கென தனியிடம் ஒன்றைப் பெற்று முன் நிலையில் இருந்துள்ளது. இயல் இசை நாடகத் துறைகளில் ஆற்றல் மிக்க மாணவிகளின் கலை நிகழ்வுகள் யாழ். நகர மண்டப அரங்கில் இடம்பெற்று வந்துள்ளது.

கல்லூரி மாணவிகளின் தொகை அதிகரித்த வண்ணம் இருந்ததால் 1944 ஆம் ஆண்டு யாழ். இந்துவின் விளையாட்டு மைதானத்துக்கு கல்லூரி இடம் மாறியது. சிரேஷ்ட தராதர வகுப்பு வரை ஆரம்பிக்கப்பட்டது. அதிபராக முத்து அர்ச்சையா பொறுப்பேற்றுக் கொண்டார். திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் வழங்கிய காணியில் 1945 ஆம் ஆண்டு கல்லூரி திறப்பு விழா நடைபெற்றதுடன், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியால் விஞ்ஞான கூடத்துக்கான அடிக்கல்லும் நடப்பட்டது.

செல்வி முத்து அர்ச்சையாவைத் தொடர்ந்து திருமதி கிளாரா மெட்வாணி, திருமதி சரோசினி, செல்வி விமலா ஆறுமுகம், செல்வி பத்மாவதி இராமநாதன், திருமதி திவ்ய சிரோன்மணி, நாகராஜா, திருமதி சரஸ்வதி ஜெயராஜா ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர்.

இவர்களது காலங்களில் இந்து மகளிர் கல்லூரி சிறந்த நிர்வாகத்துக்கு உட்பட்டு மாணவிகளின் கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டுத்துறைகளிலும் உன்னத நிலையை நோக்கி நகர்ந்துள்ளது. இன்று கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டவர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன். பிரதி அதிபராக நீண்ட கால சேவையில் இருந்து அனுபவம் பெற்ற இவர், 2006 ஆம் ஆண்டு ஜனவரியில் அதிபராக பதவியேற்றுக் கொண்டார். இவர் 2209 பிள்ளைகளை அப்போது பொறுப்பேற்று அவர்களின் கல்வி விளையாட்டுத்துறை, இணைப் பாடவிதானங்கள் உச்ச நிலையில் அமை வதன் மூலம், ஒரு சிறந்த கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கி யாழ்ப்பாண மக்களின் சொத்தை நல்ல முறையில் பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் சேவையில் தன்னை முழுமையாக ஒப்படைத்துள்ளார். அதிபரின் குறிக்கோளை ஈடேற்றும் வகையில் 84 ஆசிரியர்களின் சேவையும் அமைந்து இருப்பதாகப் பிள்ளைகள் கூறுகிறார்கள்.

சாதாரண தரப் பரீட்சையிலும், சரி உயர் தரப் பரீட்சையிலும் சரி 95 வீதம் முதல் நூறு வீத சித்திகள் கிடைக்கின்றன. ஆங்கிலத்திலும் சிறப்புத் தேர்ச்சிகள் கிடைக்கின்றன. பல்வேறு பிரிவுகளிலும் கணிசமான மாணவிகள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கள் பெறுகின்றனர். 2010 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தர வகுப்பில் 63 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றிருந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலின் என்ஜின் கழன்று விலகியது

கொழும்பு,மார்ச் 26

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ரயிலின் என்ஜின் திடீரென கழன்று விலகியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

ரயில் புறப்பட்டு ஹனுபிட்டி ரயில் நிலையத்தை அடைவதுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளானதோடு ரயில் சுமார் 15 நிமிட தாமதத்தின்பின் மீண்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

என்ஜின் கழன்று விலகியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது. (ச)



பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பெண்களின் புகைப்படக் கண்காட்சி கொழும்பு லயனல்வென்ட் கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இந்தக் கண்காட்சியை மக்கள் பார்வையிடுகின்றனர்.

# மேர்வின் சில்வாவின் மிரட்டல் அரசின் கொள்கை இல்லை

### பதில் ஊடகத்துறை அமைச்சர் சமாளிப்பு



கொழும்பு,மார்ச் 26

இலங்கையின் புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் பத்திரிகையாளர்களின் கை, கால்களை முறிப்பேன் என்று சர்ச்சைக்குரிய அமைச்சர் மேர்வின் சில்வா விடுத்த மிரட்டலானது, அரசின் கொள்கையை பிரதிபலிக்க வில்லை என்று பதில் ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதில் ஊடக அமைச்சர் என்ற முறையில் இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை .

சில பத்திரிகையாளர்களின் புகைப்படங்கள்தொலைக் காட்சி மூலம் காட்டப்பட்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை குறித்து தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நடவடிக்கை உடனே நிறுத்தப்பட்டுள்ளது - என்றார். அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருக்கும் கருத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

**இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை .**

# அரசின் செயல்களால் மக்களுக்கே பாதிப்பு

### மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 26

அரசின் நடவடிக்கைகள் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அரசு உரிய முறையில் பதிலளிக்கத் தவறினால் அதனால் மக்களே பாதிக்கப்படுவர் என்று அவர் தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானம் இந்த அரசுக்கான எச்சரிக்கை சமிக்ஞையாக பலர் கருதுகின்றனர்.

எனினும் அரசு பழைய பாதையிலேயே பயணம் செய்தால் மக்களே அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளுக்கு அரசே பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று அவர் தெரிவித்தார். உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு விரும்பினால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அரசு உரிய முறையில் பதிலளிக்கத் தவறினால் அதனால் மக்களே பாதிக்கப்படுவர்**

# ஜனாதிபதியின் பிறந்த தினத்தில் சர்வதேச விமான நிலையம் திறப்பு

### அம்பாந்தோட்டை மத்தலவில்

கொழும்பு,மார்ச் 26

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மத்தல என்னும் இடத்தில் அமைக்கப்பட்டு வரும் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஜனாதிபதியின் பிறந்த தினமான எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய மத்தல பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் விமான நிலையத்தில் இலவச சலுகைகள் வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விமான நிலையம் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விமான நிலையத்தின் சேவைகள் யாவும் வெளிநாட்டு விமானங்களைக் கவரும் நோக்கில் முதல் ஆண்டில் இலவசமாகவே வழங்கப்படவுள்ளன. தரையிறக்கல் கட்டணம் உள்ளிட்ட சகல வசதிகளையும் இலவசமாக வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். (ச)

# நீரிழிவு நோய் தாக்கம் அதிகரிப்பு

### காரணத்தை அறிய பெல்ஜியம் உதவும்

கொழும்பு,மார்ச் 26

இலங்கையின் பல பிரதேசங்களிலும் நீரிழிவு நோய் அதிகரித்துச் செல்வதற்கான காரணத்தை கண்டறிய சுகாதார அமைச்சு பெல்ஜியம் நாட்டின் உதவியைப் பெற்றுக் கொள்ளவுள்ளது.

வட மத்திய, ஊவா மற்றும் வட மேல் மாகாணங்களில் அதிகம் நீரிழிவு நோயாளர்களைக் காண முடிவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரில் இரசாயனப் பதார்த்தம் அதிகரித்தல், ப்ளோரைட் வீதம் அதிகரித்தல், மது பாவனை, கிருமிநாசினி மற்றும் இரசாயன உர வகைகள் பாவனை என்பன நோய் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நீரிழிவு நோய் அதிகரிப்புக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் பெல்ஜியம் நாட்டின் இரு ஆய்வுகூடங்களில் இந்த நோய் குறித்து பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அதன்மூலம் நோய்கான மூல காரணி கண்டறியப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# ரயிலில் மோதி இளைஞன் சாவு

கொழும்பு,மார்ச் 26

காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த றுஹுணு குமாரி ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ரத்கம - வெல்லபட ரயில் பாதையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் ரயில் வருவதை அறியாது ரயில் பாதையில் நடந்துசென்று கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ரத்கம, தோலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இந்த நபரின் சடலம் கராபிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உலக வங்கி கடன் வழங்கும்

கொழும்பு,மார்ச் 26

கொழும்பு மாநகர அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு கடனாக 213 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க உலக வங்கி அனுமதி அளித்துள்ளது.

கொழும்பு மாநகரத்தை நவீன உலகத்தரம் வாய்ந்த தலைநகராக மாற்றும் நோக்குடன் இலங்கை அரசு குறிக் கோளுடனான பொருளாதார மற்றும் பௌதிக மறுமலர்ச்சித் திட்டங்களை ஆரம்பித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

நகரம் முழுவதையும் மேம்படுத்தி தனியார் முதலீட்டுக்கான கவர்ச்சியை ஏற்படுத்துவதே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாக உள்ளது.

இலங்கை அரசின் ஆதரவு தொடர்பில் இந்தக் கோரிக்கைக்கான உலக வங்கியின் பொறுப்பு அடுத்த வதிவிட பங்காளித்துவ உபாயத்தில் பிரதிபலிக்கும்.

அத்துடன் அது நகர அபிவிருத்திக்கான புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவமாகும் என்று உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் டயேரிட்டா கயா தெரிவித்தார். (ச)

# குழு மோதல்; ஒருவர் சாவு

கொழும்பு,மார்ச் 26

கல்நெவ எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தால் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த மோதல் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் இடம்பெற்றது.


இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் போத்தல் மற்றும் கற்களால் தாக்கப்பட்ட ஒருவர் கல்நெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்த மோதலில் மஹிந்த சமரநாயக்க (வயது- 36) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07.05.1950

உதிர்வு
25.03.2004

திதி:-சதுர்த்தி

## திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி
(மண்டைதீவு)

கனவுகள் பல தாண்டி – உன்
கருவிலே எமை தாங்கி
வலிகளை நீ தாங்க
வளர்ந்தோமே நாம் அம்மா!
வார்த்தையில் பாசம் ஊட்டி – எம்
வாழ்வினில் கிழக்கு காட்டி
மேற்கினில் மறைந்ததேனம்மா?
நிலவை இழந்த இரவாய்
சிவப்பை இழந்த நுதலாய்
உமை இழந்த நம் வாழ்வும்
மெழுகாய் உருகுதம்மா....!



-நினைவுகளுடன்...
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
'தேம்பாளகம்',
ஆடியம்பிட்டி ஒழுங்கை, சாவகச்சேரி. (15992)(2-7-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹியங்கனை தபால் அலுவலகத்தின் ஒருபகுதிக் காணியை ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் அடாத்தாகக் கைப்பற்றியமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பதுளை பிரதான தபால் அலுவலகத்துக்கு முன்னாள் தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

எருவில்,மார்ச் 26

கிழக்கு மாகாண சபையில் நாடு நகர திருத்தச் சட்டத்தை நிராகரித்தது போல், அடுத்த மாதக் கூட்டத் தொடரில் ஜனாதிபதியின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசு நடை முறைப் படுத்துவதுக்குரிய தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் பல்வேறு படிநிலை சார் பிரச்சினைகளைத் தாண்டி வந்துள்ள தமிழ் மக்கள், தமது இன்னல்களுக்கு ஆறுத லான சமிக்ஞை ஒன்று கிடைத்துள்ளதாகவே கருதுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையைப் பார்க்கின்றனர். போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் தமது உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பில் இதுவரையிலும் சர்வதேச சமூகம் பாராமுகமாக இருப்பதாக எண்ணம் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது ஒரு மிகப்பெரும் ஆறுதலைக் கொடுத்திருக்கி றது.

அமெரிக்காவால் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணை இந்தியாவின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இந்தத் தீர்மானம் இலங்கை அரசை ஒரு வருட நிபந்தனை அடிப்படையில் கோரியுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், இடம்பெற்றதாக கூறப்படும் சர்வதேச சட்ட மீறல்களை ஆராயவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் முழுமையான செயற்திட்டமொன்றை இலங்கை இயன்றவரை விரைவாக சமர்ப்பிக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# போதைப் பொருளுடன் 3 பெண்கள் கைது

இரத்மலானை,மார்ச் 26

இரத்மலானை - இந்திரஜோதி மாவத்தையில் வைத்து போதைப் பொருளுடன் மூன்று பெண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தபெண்களிடம் இருந்து முறையே 19, 04 , 08 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கல்கிஸ்ஸை குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# பொலிஸ் பிரிவு புதிய கட்டடத்தில்

சம்மாந்துறை சமூக பொலிஸ் பிரிவு புதிய கட்டடத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொலிஸ் பிரிவில் பொலிஸ் திணைக்களத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தி சிறந்த சேவையை வழங்குவதற்காக சமூகப் பொலிஸ் சேவைப் பிரிவு உருவாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# யானை தாக்கி ஒருவர் சாவு

ஹம்பாந்தோட்டை , மார்ச் 26

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.40 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் தனக்குச் சொந்தமான வாழைத்தோட்டத்தைப் பார்வையிடச் சென்றவேளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எம்பிலிபிட்டியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். (ச)


## மணிவிழா நாயகனின் சேவையை வாழ்த்துகின்றோம்

இன்று திங்கட்கிழமை (26.03.2012) கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது பாடசாலை பிரதி அதிபர் திரு. பொன்னுத்துரை சரவணபவானந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டுகின்றோம்.



பொன்னுத்துரை சரவணபவானந்தன்
( பிரதி அதிபர் SLTS1)

| பாடசாலையின் பெயர் | ஆரம்பம் | வரை |
|---|---|---|
| (1) பு/கொத்தான்தீவு அரசினர் முஸ்லீம் பாடசாலை | 03.06.1977 | 31.12.1979 |
| (2) யா/பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை. | 01.01.1980 | 31.12.1982 |
| (3) கம்/மல்வானை அல்முபாரக் தேசிய பாடசாலை | 01.01.1983 | 14.05.1987 |
| (4) யா/அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி | 15.05.1987 | 14.06.1991 |
| (5) யா/அச்சுவேலி மத்திய கல்லூரி | 15.06.1991 | 31.12.1995 |
| (6) கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | 01.01.1996 | 19.01.1997 |
| (7) கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயம் | 20.01.1997 | 24.06.1997 |
| (8) யா/அச்சுவேலி மத்திய கல்லூரி | 25.06.1997 | 31.01.2004 |
| (9) யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை | 31.01.2004 | 16.04.2009 |
| (10) பதில் அதிபர் யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை | 17.04.2009 | 15.06.2010 |
| (11) பிரதி அதிபர் யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை | 16.06.2010 | 26.03.2012 |

ஓய்வு பெறும் இந்நாளில் மேலும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, நீர்வேலி



## உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதா உங்களுடைய காது நன்றாக கேட்கின்றது என்று?

எப்படி அதை நிரூபிப்பது?
எங்களிடம் வாருங்கள்

விக்கிரமாராட்சி கம்பனி (விஸ்) உடன் இணைந்து நடத்தும் காது கேட்டல் அதனுடன் சம்பந்தமான காது கேட்டல் குறைபாடுகளும் அதற்கான தீர்வுகளும் காது கேட்கும் கருவி கொக்லயார் இம்லன்ட் இவை சம்பந்தமான கலந்துரையாடலுடன் கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சி





இவற்றை காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள், செவி புலனியல் வல்லுனர் பேச்சு மொழித்திறன் வல்லுனர்களும் இணைந்து நடத்துவார்கள்.

திகதி : 31.03.2012
நேரம் : முற்பகல் 11மணி
இடம் : விக்கிரமாராட்சி
இல. 229, 231, மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 021 221 9288

J M WICKRAMARACHCHI & CO. /WICKRAMARACHCHI INSTITUTE OF SPEECH & HEARING (WISH)
No.436, High Level Road, Delkanda, Nugegoda.
Cochlear™


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை கிடைத்தவுடன் பரிந்துரைகள் நடைமுறை

## பிரதமர் கூறுகிறார்



சிலாபம்,மார்ச் 26

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர்களை கொண்ட குழுவினரது அறிக்கை கிடைத்த பின்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

சிலாபம், மாதம்பே பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசம் கேட்டுக்கொள்வதற்கு முன்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்தப் பரிந்துரைகளில் மூன்று விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதியால் நிபுணர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது, இவைகளை நடைமுறைப்படுத்துவதால் இலங்கைக்கு ஏற்படும் நன்மை, தீமை மற்றும் இதன் மூலம் சர்வதேசத்துடன் எவ்வகைகளில் தொடர்புகளைப் பேணுவது என்பனவே இந்த மூன்று விடயங்களாகும்.

இவைகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னரே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ச)

## வெடி பொருள்கள் மீட்பு



மட்டக்களப்பு, வாகரை, கட்டுமுறிவு பிரதேச காட்டுப்பகுதியில் மீட்கப்பபட்ட ஒரு தொகுதி வெடி பொருள்களையே படத்தில் காண்கிறீர்கள். (ச)

## மாணவர்களுக்குப் பிணை

கேகாலை,மார்ச் 26

கேகாலையில் உள்ள பிரபல பாடசாலையைச் சேர்ந்த இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட 4 மாணவர்களும் பழைய மாணவர் ஒருவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வருடாந்த கிரிக்கெட் பெருஞ்சமர் தொடர்பாக ஏற்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

## கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்தவர் சாவு

திருகோணமலை, மார்ச் 26

குவைத் - அஹமதி நகரில் பல் கூட்டுமாடிக் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கால் தவறிக் கீழே விழுந்து இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா - 4, குட்டிகராச்சியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அலிபுஹான் பஸீர் (வயது - 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (ச)

## மோசடிப் பணத்தை கையளித்தார் வைத்தியசாலை அத்தியட்சகர்

அக்கரைப்பற்று,மார்ச் 26

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஒருவர் மோசடியாகப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் ஒரு தொகைப் பணத்தை மீளவும் வைத்தியசாலைக்குச் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்திய அத்தியட்சகர் உண்மைக்குப் புறம்பான வகையில் சுமார் 10 லட்சம் ரூபாவை வைத்தியசாலையினூடாக கடந்த காலங்களில் பெற்றிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பணமோசடி தொடர்பாக ஜனாதிபதிப் புலனாய்வுப் பிரிவினர் அண்மைக்காலமாக விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இந்த நிலையிலேயே, தான் மோசடியாகப் பெற்றுக்கொண்ட பணத்தைஅவர் மீளவும் வைத்தியசாலைக்குச் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வாகன விபத்தில் ஒருவர் சாவு

அம்பாறை,மார்ச் 26

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கனரக வாகனமும் காரும் மோதிய விபத்திலேயே காரில் பயணித்தவர் மரணமானார். இந்தச் சம்பவத்தில் அட்டாளைச்சேனை, 4ஆம் வீதியைச் சேர்ந்த அசீட் (வயது-52) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். வாகனச் சாரதி அட்டாளைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)


# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் திரு. P. பத்மாகரன் சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர்



### ஆங்கில கல்வி மூலம் உலகுக்கு பாலம் அமைத்த உத்தமன்

ஆசிரியர் சேவையில் 30 வருடங்கள் மத்தியின் மைந்தர்களுக்கு 20 வருடங்கள் அளப்பெரிய சேவையாற்றிய திரு. பத்மாகரன் ஆசிரியர் காலத்தால் அழியாத ஆங்கில கல்வியை கற்பித்தல் மூலம் இன்றைய கணினி உலகில் மாணவர் சமுதாயம் தாங்கள் பெற்ற அறிவை உரிய முறையில் செயற்திறன் உடையதாக மாற்றுவதுடன் இன்றைய சவால் நிறைந்த சமூக பொருளாதார காரணிகளை மாணவர்கள் வென்று எடுக்க ஏற்ற ஓர் இணைப்பாளராக ஆங்கிலக் கல்வி மூலம் மாணவர்களுக்கு சிறந்த சேவையாற்றியுள்ளார். இவர் சேவையை பாராட்டுவதுடன் இவரும் இவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

வி. தயாபாலன் (தலைவர்,)
ஆசிரியர் வட்டம்

### வாழ்த்துக் கவிதை

கல்வி என்னும் அறிவை ஊட்ட
கனிவுடன் வந்த கருணை மகான்
பாலம் போல தன்னை மாற்றி
மாணவர் வாழ்வில் ஒளியை ஏற்றி
ஆங்கிலம் என்றால் ஓடி ஒளிந்த
தரிசாய் கிடந்த மாணவர் மனதை
பண்படுத்தி பெருமை சேர்த்து
உலகம் புகழ ஒருவனாக்கி
பெற்றோர் மனதில் நிம்மதி சேர்த்து
கைமாறு ஏதும் எதிர்பாரா
கல்வி சொன்ன ஆசானே
உங்கள் ஒய்வுகாலம் அமைதியோடு
நிம்மதி சேர மாணவர் சார்பில் வாழ்த்துகிறோம்.

மாணவர் முதல்வர் சபை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



**Perinpanathan Pathmakaran**
(Eng.Trained, S.L.T.S.I)
Date of Birth :- 25-03-1952

**Service Particulars**

| | |
|---|---|
| 1. Mn/Marichchikaddy G.M.M.S | 02.05.1983 - 28.02.1987 |
| 2. Mn/Mullikulam R.C.T.M.S. | 01.03.1987 - 02.11.1988 |
| 3. Mn/Marichchikaddy G.M.M.S | 03.11.1988 - 16.01.1990 |
| 4. Bolawalana Gov.Teachers' College (Negombo) | 17.01.1990 - 31.12.1991 |
| 5. Mn/Sithivinayakar Hindu College | 01.01.1992 - 26.01.1993 |
| 6. J/Jaffna Central College | 27.01.1993 - 25.03.2012 |



### அதிபரின் ஆசிச் செய்தி

நான் இக் கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்ற ஆரம்ப நாள்களில் மிகவும் நேர்த்தியான தோற்றத்துடன் நேரம் தவறாது கல்லூரிக்குச் சமுகமளிக்கின்ற, அமைதியான சுபாவம் உடைய, பண்பாகப் பழகுகின்ற திரு. பேரின்பநாதன் பத்மாகரன் எனது கவனத்தை வெகுவாக ஈர்த்தார். அவர் ஓர் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர் என்பதையும், சிறந்த ஆங்கிலப் புலமையுடையவர் என்பதையும் அறிந்து கொண்டேன். மாணவர்களிடமும், சக ஆசிரியர்களிடமும் மிகவும் அன்பாக பழகுகின்ற திரு. பத்மாகரன் ஓர் உன்னதமான நாடகக் கலைஞன் என்பதும் குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் ஒளிவிழா, விஞ்ஞான தினம், ஆங்கில தினம் போன்ற நிகழ்ச்சிகளில் இவர் ஆங்கில, தமிழ் நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். ஆங்கில பாட இணைப்பாளராக நீண்ட காலம் செயற்பட்ட இவர், கல்லூரி மாணவர்கள் ஆங்கிலத்தை ஒரு விருப்பமான பாடமாக கற்பதற்கு முயற்சிகள் எடுத்தார். இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இவரது புலமையும், கலைத்திறனும் தொடர்ந்து சமூகத்துக்கு பயன்படும் என நம்புகிறேன்.

திரு. S.K. எழில்வேந்தன் (அதிபர்)
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.



**Message from S. Thiakarajah**
**Asst. Director of Education (English),**
**Zonal Education Office, Jaffna.**

At your request, I am sending this Message to be published to honour your veteran English teacher Mr. P. Pathmakaran who is retiring nearly after 30 years of fruitful service in the field of education.

To honour our great teachers is to honour a noble profession and also give encouragement to those who serve the cause of education in Sri Lanka. 'Jaffna Central' benefitted in no small measure by his dedicated service which spans almost two decades.

I find many similarities between my valued professional colleague Pathmakaran and me. Both became uncertificated teachers of English with A/L qualifications. After Specialization in Guru Vidyalayas, both of us got through the first in Arts Examination offering English as a main subject which made us eligible to complete the remaining two year degree programme as internal students in the university. In short both of us came the hard way!

I thank him for the great service he has rendered to your school and also honour him for the dedication he gives his profession and wish him long life, good health and happiness. Thankyou.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி
ஆசிரியர் வட்டம்-2012

(15982) (7.9.10)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் வலய ஆசிரியர்களுக்கு யாழிலிருந்து பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச் 26
யாழ்.மாவட்டத்திலிருந்து துணுக்காய் கல்வி வலயத்துக்கு கடமையாற்றச் செல்லும்ஆசிரியர்களுக்கானவிசேட போக்குவரத்துச் சேவை இன்று திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்தச் சேவையில் 2 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. வாரந்தோறும் திங்கட் கிழமைகளில் அதிகாலை 5.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையம் மற்றும் பருத்தித்துறை பஸ் நிலையம் ஆகியவற்றில் இருந்து பாண்டியன்குளம், மல்லாவி, துணுக்காய் ஆகிய பிரதேசங்களுக்கும் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு,கூழாமுறிப்பு ஆகிய பிரதேசங்களுக்கும் மேற்படி பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து புறப்படும் பஸ்ஸில் மாங்குளம் சந்திவரை பயணித்து அங்கிருந்து குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு பயணத்தை மேற்கொள்ள முடியும். அத்துடன் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து யாழ். நகருக்கும், பருத்தித்துறைக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

எனவே துணுக்காய் கல்வி வலயத்தில் தற்போது கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது போக்குவரத்தை குறித்த பஸ்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார்.

(வ-14)

# போரில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு சைக்கிள்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 26
முல்லைத்தீவு மாவட் டத்தில் போரால் பெற்றோரை இழந்த, பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட, குடும்பத்தின்35சிறுவர்களுக்கு சைக்கிள்கள்வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய ஆஸ்திரேலிய தமிழ் நிதியத்தின் உதவியுடன் மேற்படி சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன் தினம் யாழ். மாவட்ட சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. இதன் போது முல்லைத்தீவிலிருந்து பஸ் மூலம் அழைத்து வரப்பட்ட சிறார்கள் யாழ். நகரின் முக்கிய இடங்களைப் பார்வையிட்ட பின், சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மற்றும் திட்டச் செயலாளர் து. தேவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 3குடும்பப் பெண்களுக்குதையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(வ-16-13)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 26
மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்த பெருந் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகமும் இடம் பெறவுள்ளது.

(வ-13)

# "சிலுவைகளா இல்லை சிறகுகளா?"

பாடுகள் இல்லாமல் பட்டம் இல்லை என்பார்கள். கடின உழைப்பு இல்லாமல் நாம் வாழ்க்கையில் உயரமுடியாது பரீட்சையில் சித்தியடையவேண்டுமென்றால் கண்விழித்துப் படிக்கத்தானே வேண்டும். தியாகம் இல்லாமல் நாம் வாழ்வில் எதையும் சாதிக்கமுடியாது. சிலுவை ஒரு கிறிஸ்தவனுக்கு சமாதானத்தின் சின்னம் அல்ல. அது வாழ்வுக்கான பாடங்களை கற்றுத்தந்த போதிமரம். புத்தபெருமான் போதி மரத்தடியில் அமர்ந்து ஞானம் பெற்றார். நாமும் எத்தனைமுறை சிலுவை மரத்தடியில் அமர்ந்திருக்கின்றோம்? நமக்கு ஞானம் பிறந்துவிட்டதா? சவால்களோடு சிலுவைப்பாதையைத் தொடர்ந்தால் பாதை மாறிப் பயணமாகும் மனிதனுக்கு பாதைகாட்டும். சிலுவைதான் நமக்கு போதிமரம். அதன் அடியில் அமர்ந்து அதன் வாழ்க்கைத் தத்துவத்தை கற்றுக்கொள்ள முயற்சிப்பதே தவக்காலத்தின் நோக்கமாகும். சிலுவையில் காட்சிதரும் இயேசுவின் பாடுகளை நினைவு கூர்ந்து அழுது புலம்பும் காலமல்ல. சிலுவையடியில் அமர்ந்து வாழ்வின் சவால்களை சிலுவைகளைச் சுமக்க உறுதியும் அருளும் பெறும் காலமாகும். இயேசுவின் கல்வாரி அன்பை ஆழமாகச் சிந்தித்து மனம் மாறுவதே சாலப்பொருத்தமாகும்.

பக்தி முயற்சிகளாலும், உணர்வு பூர்வமான வேண்டுதல்களால் மட்டும் மனமாற்றம் வந்துவிடாது. சிலுவைக்கு பின்னால் இயேசுக் கிறிஸ்து வெளிப்படுத்தும் தியாக வேள்வியில் கரைந்துபோன கரைகாணா அன்பை, உள்ளத்தின் ஆழத்தில் இருத்தி சிந்தித்து வாழும்போதே எமது வாழ்க்கை பாதை மாறுகின்றது. சிலுவையின் மகிமையில் நாம் பெருமை கொள்ளவேண்டும். ஏனெனில் அதுவே கடவுளின் அதி உச்ச அன்பை மனித குலத்தின் மீது வெளிப்படுத்திய மாபெரும் நிகழ்வாகும். எனவேதான் இயேசுவின் இறப்பை நாம் கொண்டாடுகின்றோம்? யாராவது சாவை கொண்டாடுவார்களா? எமக்கு சாவுதான் வாழ்வு; மரணம் தான் மகிமையின் இருப்பு. எனவேதான் சிலுவை என்பது மகிமையின் சின்னமாகும்.

தவக்காலச் சிந்தனை

எமது தினசரி சிலுவைகளை, சுமைகளை இயேசுவோடு சேர்ந்து சுமந்துவிட்டால் சிலுவைகள் சிறகுகளாகும் சுமைகள் சுகங்களாகும். இன்று மனிதர்கள் கடவுளை விரும்புவதைவிட, சிற்றின்பத்தையே நாடுகின்றனர். ஆனால் அதேவேளையில் கடவுள் பற்று உள்ளவர்கள் போல் காட்டிக் கொள்கின்றனர். இங்குதான் பொய்மையும்போலித்தனமான பக்தியும் தோலுரிக்கப்படுகின்றது. அயலாரின் சிலுவைகளை சுமக்கநாம் உதவுகின்றபோது, சிலுவை மரம் எமக்கு போதிமரமாகின்றது. தவக்காலம் அருளின் காலம், இரக்கத்தின் காலம் என்பதை உணரும்போதே சிலுவை எமக்கு அர்த்தத்தை கொடுக்கின்றது.

இதயக் கதவுகளை இறுக்கப் பூட்டிக்கொண்டு சிலுவைப்பாதையே தபமுயற்சிகளோ செய்வதால் சிலுவையின் அருளை நாம் பெறமுடியாது. பக்திமுயற்சிகள்வழிபாடுகள் ஆராதனைகள் வெறும் சடங்குகளாக மாறும்போது நாம் உண்மையான மனமாற்றத்தை பெறமுடியாது.

அருட் கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி
விரிவுரையாளர்

# இதயத்தை நெருடும் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
21 ★ 02 ★ 1952



விண்ணில்
22 ★ 02 ★ 2012

அமரர் பொன்னையா மாசிலாமணி
(ஓய்வுபெற்ற கனிஷ்ட நிறைவேற்று அதிகாரி இலங்கை வங்கி)

நேற்றுவரை
குடும்ப விருட்சத்தின் ஆணிவேராய்
போற்றுவதற்குரிய கணவனாய்
அன்பு மழை பொழியும் அப்பாவாய்
வங்கியிலே புகழ்பூத்த பெருமகனாய்
அவனியிலே மாசில்லா மணிவிளக்காய் வாழ்ந்தீரே

இன்று
வாழ்க்கையெல்லாம் கானல் நீராய்
ஆற்ற முடியாத சோகத்துடன்
நீங்கள் அமைத்த மாடிமனையிலே
விழிநீர் சொரியக் காத்திருக்கின்றோம்
ஆத்ம சாந்திக்காய் இறைவனிடம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, இன்ரநெற் மூலமாக ஆறுதல் அளித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (26 .03 .2012)திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நல்லூர் துர்க்கா மண்டபத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

19 ஏ, 4 ஆம் ஒழுங்கை
அரசடி றோட்,
நல்லூர்.

(16072) (45 - 6-9)

குடும்பத்தினர்

# வலி.கிழக்கில் கட்டட இடிபாடுகள் அகற்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 26
வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டட இடிபாடுகளை வலி.கிழக்கு பிரதேச சபை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது அதிகளவில் கட்டடத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால் அதன் இடிபாடுகள் பெருமளவில் பொது இடங்கள், வீதிகள் போன்ற இடங்களில் கொட்டப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துப் பிரதேச சபையால் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே பொது மக்கள் தத்தமது பிரதேச சபை உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு இடிபாடுகளை அகற்றுவதற்கு பிரதேச சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-14)

# கண்ணீர் அஞ்சலி

மன்னார் மாவட்டத்தின் **மனோகரகுருக்கள்** சகாப்தம் முடிவடைந்தது. உப்புகிணற்றடிபிள்ளையார் என்றால் மனோகரக்குருக்கள். மனோகரக்குருக்கள் என்றால் உப்புக்கிணற்றடிப்பிள்ளையார் என்று ஒரு காலத்தில் பேரும்புகழுடன் இருந்தார் தற்பொழுது வைரவர் கோயிலும் மக்கள்சேவையும் ஆற்றிக்கொண்டு அரசாங்கக்கூட்டம் என்றால் என்ன பொதுநிறுவனம் என்றால் என்ன மதகுருமார் இடத்தில் முன்நின்று ஆசியுரை வழங்குவார். எங்கே அந்தணருக்கு துன்பம் ஏற்பட்டாலும் கதைக்கவேண்டிய இடத்தில் கதைப்பார் தற்பொழுது நடந்த யுத்தத்தின் போது செட்டிகுளம் முகாமுக்கு வந்து ஆனந்தகுமாரசாமி முகாமில் உள்ள அந்தணருக்கும் மற்றும் மக்களுக்கும் மதிய உணவு உட்பட என்ன என்ன உதவி தேவையோ எல்லாம் செய்து கொடுப்பார். கடைசியாக சர்வமத ஒன்றியக்கூட்டத்தில் வற்றாப்பளை குருக்கள் அண்ணா எங்கே என்று என்னைத் தேடிக் கதைக்க வந்தார் அவருடன் பழகிய நாள்கள் கொஞ்சம்தான். சிரித்தமுகம் பாசத்தோடு அண்ணா என்றால் திரும்பவும் ஒருக்கால் சொல்ல வேணும் என்ற மாதிரி இருக்கும் அவர் மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகளுக்கும் ஆறுதல் சொல்லி விடை பெறுகிறோம்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில்
பிரதமகுருக்கள். குடும்பத்தினர்.

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
05 ★ 03 ★ 1952

மறைவு
26 ★ 03 ★ 2005

அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்

இவ் வையகத்தில் வாழ்வுதனை
இடை நடுவில் விட்டுவிட்டு - நித்தமும்
எம் நெஞ்சில் நிலையான சுமைகளைத் தந்துவிட்டு
நீர் மட்டும் விண்ணுலகில் நிரந்தரமாகிவிட்டீர் - உமது
பிரிவை இற்றைவரை நம்பாமல் எம் உள்ளத்தில் நிலை
நிறுத்தி உம் நினைவுகளோடு என்றென்றும்

3/22, கற்குளம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்
சந்திரலிங்கம் வர்த்தகநிலையம்,
இல. 24, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிநிலை வெற்றிடங்கள்
# சிவன் அருள் இல்லம், திருக்கேதீச்சரம்





மன்னார், அருள்மிகு திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உண்டு

- ★ மேற்பார்வையாளர் ( ஆண்/ பெண் இருபாலாரும்)
- ★ சமையலாளர்கள் (பெண்கள் மட்டும்)
- ★ கணினி பயிற்றுவிப்பாளர்கள் ( ஆண்/ பெண் இருபாலாரும்)

சாரதி அனுமதிப்பத்திரமுள்ள ஆண் மேற்பார்வையாளர்கள் விரும்பத்தக்கது.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து, இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய இத்தகைய மனிதநேயப் பணிகளிலே ஆர்வமுள்ள, சைவசமய விழுமியங்களில் ஈடுபாடுள்ள - நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமுமுள்ள, 25 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இளைப்பாறிய அரச அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.

**தெரிவுகள் நேர்முகப் பரீட்சை மூலம் இடம்பெறும்**

கல்வித் தகைமைகள், அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம், பரிந்துரைக்கக் கூடிய நன்மதிப்புள்ள இரு தகுதி வாய்ந்த பெரியார்களின் பெயர்களையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 31. 03. 2012**

முகவரி:
இல்லப் பணிப்பாளர்
சிவன் அருள் இல்லம்,
திருக்கேதீச்சரம், மன்னார்.
தொ. பே: 023 323 0032, 077 917 8244

(கு/158) (45-6)

# 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து



ஆனந்தராசா நேசமலர் தம்பதியரின் அன்புப் பேர்த்தி

26 03 2012

## செல்வி டயானா

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (26.03.2012) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார் இவரை இறையருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, மாமாக்கள், அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா.

2ஆம் பகுதி, அனிஞ்சயன்குளம், மல்லாவி.

(14075)(6-3-12)

# சவுதி அரேபியாவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

சவுதி அரேபியாவில் பணிபுரிய பின்வரும் தொழில்களுக்கு தொழிலாளர்கள் உடனடியாக தேவை

ஞாயிறு தினங்களிலும் திறந்திருக்கும்



| தொழில் வகை | தொகை | சம்பளம் (SR) |
|---|---|---|
| பணிப்பெண்கள் | 50 | 650 |

1 சவுதி றியால் = ரூ. 31/-

**சேவை மற்றும் நிபந்தனைகள்**

இலவச உணவு, மருத்துவம், தங்குமிட வசதி மற்றும் போக வர விமானடிக்கட் வழங்கப்படும். இரு வருட ஒப்பந்த முடிவில் சம்பளத்துடன் கூடிய 30 நாள் விடுமுறை. வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம், வாரத்திற்கு 6 நாட்கள்.

டைப் செய்யப்பட்ட 2 செட் விண்ணப்ப படிவங்கள், சான்றிதழ்களின் அசல் மற்றும் அதன் 2 பிரதிகள், 2 வர்ண புகைப்படங்கள் மற்றும் பாஸ்போர்ட் உடன் கிழமை நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் உடன் வரவும்

**AL-ARAB & SERENDIB RECRUITMENT SERVICES**
46 A1, ஹில் வீதி, தெஹிவளை.
Licence No: 2596
தொ.பேசி : 011-4343717/8/9, 011-2726996, பக்ஸ்: 011-272 6996

AL/2596/Advt:/EX-01/12

# விற்பனையாகின்றது

வேதநாயகம் தபேந்திரன் எழுதிய நூல்கள்

- ★ யாழ்ப்பாண வாழ்வியல் பெருமைகள் கூறும் கட்டுரைகள் " பூத்திடும் பனந்தோப்பு" (300/=)
- ★ அனைத்துப் போட்டிப் பரீட்சைகளுக்கான " புதிய பொது அறிவு - 2012" (350/=)
- ★ தரம் 4 முதல் 7 வரையான மாணவர்களுக்கான "சிறுவர் பொது அறிவு - 2012 (200/=)

கிடைக்கும் இடங்கள்
யாழ். சிறிலங்கா, பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகள், Book Lab - பரமேஸ்வராச் சந்தி, நெல்லியடி: சிதம்பரப்பிள்ளை, சுன்னாகம்: துர்க்கா.

(கு/159) (45 - 6-9)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## நாகலிங்கம் முருகையா
(பீற்றர் முருகையா)

திதி: 26.03.2012

மண் மகிழ
15 ★ 05 ★ 1940

மனம் நெகிழ
07 ★ 04 ★ 2011

ஆண்டொன்று சென்றதுவே ஓயவில்லை எம் துயரம்
நீறாகிப் போனதுவே எம் நெஞ்சம் அப்பாவே!
சீராக எம்மைச் சிறப்போடு வாழவைத்த
தந்தையே உம்மை தரணியில் காண்பதெப்போது

பருத்திக்கலட்டி
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(16024) (45- 7-9)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
19 ★ 09 ★ 1938



உதிர்வு
24 ★ 03 ★ 2011

## திருமதி நாகம்மா பத்மநாதன்
(நெசவு ஆசிரியை)

திதி:சதுர்த்தி
(26.03.2012)

மணித்தீவின் ஒளி வைரம் நாகம்மா பெயரில்
மரகதமாகத் திகழ்ந்த பாசத்தின் இருப்பிடமே
அணிதிரளும் சுற்றத்தை விட்டகன்று
ஆண்டு ஒன்று ஆனதம்மா
பணி செய்த நாள் முதல் பழகிய உறவுகள்
பல்லாண்டு சென்றாலும் உமை மறக்காது துடிக்க,
கனிவான மொழி, ஆற்றுவார் யார், ஆறுதல் யார் என
கருத்தடங்கிக் கலங்கி இறையை வேண்டுகின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.**

1ஆம், வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் பிரிவால் துயரில் வாடும்
குடும்ப உறவுகள்.

(15932) (7-9-12)

# புது வருடத்தை முன்னிட்டு விசேட கட்டணச்சலுகை 19.03.2012 - 19.04.2012

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 715/= France 765/=
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

குறிப்பு :- 25Kg - 100Kg வரையான பொதிகளுக்கு 450/= மட்டுமே

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

**Arrul Global Express**
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ். T.P 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி மேரிபேணாடா சுவாம்பிள்ளை

*திருச் சிலுவை கன்னியர் சபை*



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி மேரிபேணாடா சுவாம்பிள்ளை நேற்று (25. 03.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூ.சுவாம்பிள்ளை - லூசியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.03. 2012) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு மரியன்னை பேராலையத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*மாகாணத் தலைவி,*
*திருச் சிலுவை கன்னியர் மடம்,*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
அருட்சகோதரி
விக்ரறின் ஜேம்ஸ்
(16033)(6-12)

---



## செல்வி சுமதி பாலசுப்பிரமணியம் (சுவீற்றி)

ஆலங்குழாய், சண்டிலிப்பாயை பிறப்பிட மாகவும், ஆஸ்திரேலி யாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுமதி பாலசுப்பிரமணியம் (25.03.2012) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - மகேந்திரதேவி (இளைப்பாறிய ஆசிரியர் - ஆஸ்திரேலியா) தம்பதியரின் பாசமிகு மகளும் குகேந்திரன் - சிவஞானமலர் (ஆஸ்திரேலியா) தம்பதியரின் மருமகளும் சகுந்தலாதேவி - இராசரட்ணம், சரஸ்வதி - நாகரட்ணம் ஆகியோரின் பெறாமகளும் மாதினி, பிரணவன் (யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி யாலயம்), நா. மாதவன் (யா/சென் ஜோசப் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆத்மிகாவின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். அன்னாரின் துக்க நிகழ்வுகள் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (26.03.2012) திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய் (15101)(6-7-8)

தகவல்:
நா. மாதவன்
(சகோதரன்)

---

## கார்த்திகேசு செல்லத்துரை



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்துரை வெள்ளிக்கிழமை (23.03. 2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், அருளானந்தம் (கனடா), யோகராணி, ஜெயராணி, சிவானந்தராசா (கனடா), பவானந்தராஜா (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைராணி (கனடா), முத்துக்குமாரசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/உடுவில் முருகமூர்த்தி, வித்தியாசாலை), செல்வானந்தராஜா, பவானி (கனடா), தேவ இந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், வைடூரிகா (கனடா), அருண்வெங்கட் (கனடா), ஜீவாஜனன், சுதன் (தொழினுட்ப உத்தியோகத்தர்), திருமதி செந்தூரன் வேதிகா (கனடா), யுகந்தரா, கஜவதனா, கருணாலயன் (யாழ்/இணுவில் மத்திய கல்லூரி), பர்வதன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), செந்துஜன் (கனடா), கன்னிகா (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணிக்கு பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னை விலா'
வட்டுவினி, இணுவில் மேற்கு,
சுன்னாகம்.
0016135214488 (மகன்)
0016473901534 (மகன்)

தகவல்:
செ.அருளானந்தம்
(மகன்)

---

# நிறங்களும் உணர்வுகளும்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீல நிற அறைகள் இறுக்கத்தைத் தளர்த்தி, மனதை அமைதிப்படுத்தி உபாதைகளைக் குறைக்கும். மனம் விட்டு வெளிப்படையாகக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள ஊக்கமளிக்கும்.

அடர் பச்சை நிறச் சுவர்களில் இடையிடையே வெளிர் பச்சைப் பரப்புகளை அமைப்பது சமநிலை, இணக்கம், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்தும். மஞ்சள் பூச்சு மனதில் சுறுசுறுப்பையும் உஷார் தன்மையையும் வளர்க்கும். ஆரஞ்சு நிறம் படைப்பாற்றல், உல்லாசம், உறவுச் சமநோக்கு ஆகியவற்றை மேம்படுத்தும்.

சிவப்பு நிறம் உணர்ச்சிகளையும் பசியையும் தூண்டும். அது உணவகங்களுக்கு ஏற்றது. ஆனால், சிவப்பு நிறச் சுவர்கள் அறையின் பரிமாணங்களைக் குறைத்துக் காட்டும். அறைகளின் உட்கூரை வெள்ளையாக இருப்பது நல்லது. ஒரு குறிப்பட்ட நிறம் குறிப்பட்ட நல்விளைவுகளை உண்டாக்குவதாயிருந்தாலும் அதையே எல்லா இடங்களிலும் அளவுக்கு மீறிப் பயன்படுத்தினால் எதிர்மறை விளைவுகள் ஏற்படும்.

அண்டை வீட்டுக்காரர்கள் உங்களுடன் சுமுகமாகப் பழகாமலிருந்தால் அதற்கு உங்கள் வீட்டின் வெளிச்சுவர்களில் உள்ள நிறங்களின் தாக்கம் காரணமாயிருக்கலாம். பச்சை, நீலம், ஊதா ஆகியவற்றை வெளிர் நிறத்தில் சுவர்களில் பூசி அடர்நிறத்தில் விளிம்புப் பட்டைகளை அமைப்பதன் மூலம் அண்டை வீட்டுக்காரர்களின் அன்பைப் பெறலாம்.

உயர் குலம், நல்லொழுக்கம், அறிவாற்றல், உடல் நலம், தூய்மை ஆகியவற்றைக் குறிக்கும் பெயரடையாக நீலம் பயன்படுத்தப்படுகிறது. நிறுவன வரவு செலவு அறிக்கைகளில் கறுப்பு, லாபத்தில் இயங்குவதையும் சிவப்பு, நஷ்டத்தில் இயங்குவதையும் குறிக்கின்றன. ஆங்கிலத்தில் வெள்ளைப் பொய் நல்ல நோக்கத்தில் சொல்லப்படுவது. கறுப்புப் பொய் தீய நோக்கமுள்ளது. தமிழில் பச்சைப் பொய், பச்சை பச்சையாகப் பேசுவது ஆகியவை வெறுப்புக்குரியவை. ஆனால், பச்சைத் தமிழன் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவர்.

மஞ்சள் முகமே வருக என வரவேற்கலாம். மஞ்சள் பத்திரிகை புறக்கணிக்கப்பட வேண்டியது. மஞ்சள் கடுதாசி தவிர்க்கப்பட வேண்டியது. சிவப்பு விளக்கு, சிவப்பு விளக்குப் பகுதி ஆகியவை எச்சரிக்கை செய்கிறவை. இளஞ் சிவப்பு ஆரோக்கியம், புகழ், பெருமை ஆகியவற்றின் உச்சத்தைக் குறிப்பது. பச்சைக்கொடியும் பச்சை விளக்கும் தொடர்ந்து முன்னேறு என அறிவிப்பவை.

இப்படி எல்லா நிறங்களுக்கும் மனிதர்களின் உணர்வுகளுக்கும் தொடர்புகள் இருக்கின்றன; அல்லது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றைப் [illegible] னடைய முடியும்.

---

# பத்தாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்

அமரர்
**Dr. கதிர்காமு கந்தசாமி D.A.M.(Cey.)**



மண் மகிழ
30★10★1942

கண் நெகிழ
26★03★2002

ஒரு தசாப்தமென்ன - எத்தனை
தசாப்தங்கள் ஆனாலும்
நெஞ்சை விட்டகலாத நீங்காத நினைவலைகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"சிவகாசி"
15/13, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (16079) (45-6-7)

குடும்பத்தினர்

---

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
19 ★ 11 ★ 1946



இறப்பு
02 ★ 04 ★ 2006

## செல்வராசா சரஸ்வதி

திதி: சதுர்த்தி

ஆண்டுகள் ஆறு பறந்தோடினாலும் - உங்கள்
நினைவு எங்கள் உள்ளத்தில் மறையாதம்மா
நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள் நிஜங்களாய் - எங்கள்
மனதினை வாட்டுதம்மா.........
இந் நன் நாளில் உங்களின் ஆத்மா
சாந்தியடைய தினமும் இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

108/9, கச்சேரி
நல்லூர் வீதி, (16076) (45 -7 -9)

குடும்பத்தினர்
க. செல்வராசா

---

**புத்துணர்ச்சியுடன், புதுமையான, இல்லற வாழ்வுக்கு வனாரி கல்பா**




நீங்கள் இளமைத் துடிப்புடன் செயற்பட ஒரே தீர்வு

பாவனை முறை:
தினமும் இரு முறை இரண்டு தேக்கரண்டிப் பிரமாணம் பாலுடன் பருகவும்.

சகல முன்னணி பார்மசிகளிலும் கிடைக்கும்.

1. மதுஜன் பார்மசி (நெல்லியடி)
2. ஸ்ரீமுருகன் பார்மசி (நெல்லியடி)
3. ஸ்ரீமுருகன் பார்மசி (பருத்தித்துறை)
4. ஜெகன் பார்மசி (யாழ்ப்பாணம்).
5. சிற்றி மெடிக்கல் (யாழ்ப்பாணம்)
6. ரட்ணம் பார்மசி (யாழ்ப்பாணம்)
7. அம்பிகா பார்மசி (சாவகச்சேரி)
8. சாந்தா பார்மசி (கொடிகாமம்)

SKY PHARMA

இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.
(03/01//PP / 10239)
SKYPHARMA THE HERBAL PRODUCT COMPANY
# 35. 1/1, Hinniappuhamy ,Mawatha, Colombo - 13
TEL. + 94 011 2334193
CEL. 077 7300432, 077 749 9918.
(12681)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவருக்கு நிகராக ஈழத் தமிழருக்கும் சலுகை



## மத்திய அமைச்சர் வாசன் கூறுகிறார்

வேலூர், மார்ச்.26

இலங்கையில் சிங்களவர்களுக்கு நிகராக தமிழர்களுக்கும் சலுகைகள் கிடைக்கும் என்று மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் உறுதி அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வேலூரில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு கண்ணியத் துடனும், நிதானத்துடனும் செயற்பட்டு ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. முள்வேலியில் அடைபட்டுக் கொண்டிருப்பவர்களை விடுவிக்கும் நேரம் வந்து விட்டது. சிங்களவர்கள் என்னென்ன சலுகைகள் அனுபவித்து வருகின்றார்களோ அத்தனை சலுகைகளையும் அங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் விரைவில் கிடைக்கும்.

மத்திய அரசு வெளியுறவுத்துறை அமைச்சகமும், அமைச்சர் கிருஷ்ணாவும் இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து கவனித்து வருகின் றனர். இலங்கை தமிழர்கள் பிரச்சி னையை மத்திய அரசு சிறந்த முறையில் அணுகி வருகின்றது - என்றார் அவர். (வ)




ஜே.எஸ்.ராஜ் எழுதிய உயிர்ச்சமர் எனும் கவிதை தொகுதி நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஊடகத்துறை விரிவுரையாளர் எஸ்.கிருத்திகா தலைமையில் இடம்பெற்றது. பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நூலை வெளியிட்டு வைக்க மங்களா காட்சியறை உரிமையாளர் பெற்றுக்கொள்கிறார். (வ-13)

## நாகை மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்

நாகையில் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடலில் மீன்பிடிக்கச் சென்று நேற்றுக் கரை திரும்பிய மீனவர்கள் இது குறித்து முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகை துறைமுகம் பகுதியைச்சேந்த ஆறுமீனவர்கள் கடந்த 20 ஆம் திகதி கடலுக்கு விசைப்படகில் சென்றனர். இவர்கள் 35 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப் படகை மறித்து, அதில் நடப் பட்டிருந்த இந்திய தேசிய கொடியை கிழித்தனர். பின்னர் மீனவர்கள் கொண்டு சென்ற உணவுப்பொருள்கள் மற்றும் உடைமைகளை பறித்து கடலில் வீசி எறிந்ததுடன், மீன்பிடிவலைகளை அறுத்தனர்.

தமிழக மீனவர்களை பூட்ஸ் காலால் சரமாரியாக மிதித்துத் தாக்கியுள்ளனர். இதில் மூன்று மீனவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது - என்று இந்திய ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (வ)

## நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சை எதிர் வரும் ஜூன் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-130)

***

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை கணக்காளர் சேவை தரம் III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப் பட்டுள்ளது. (வ-130)

## மின் இணைப்பு கற்கைநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 26

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனம், மின்னிணைப்பு கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

ஆர்வமுடையவர்கள் தமது கிராம சேவகர் பிரிவிலும், பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உதவியாளருடன் பிரான்பற்று தொழிற்சாலை பயிற்சி நிலையத்திலும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

தபால் மூலம் விண்ணப்பிப்போர் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன் இல.375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், மாவட்டத் தொழிற் பயிற்சி நிலையம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் .

இந்த கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் பயிற்சியாளருக்கு தொழில் செய்யும் உபகரணங்கள் மற்றும் வங்கி கடன் வசதிகள், தொழிற் அபிவிருத்தி வசதிகள் என்பன பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. (வ-14)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தைரியமான முடிவுகளை எடுத்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பற்றாக்குறை நிலைமை நீங்கி, கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்தது நடப்பதன் மூலம் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். மற்றவர்கள், உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆறுதலான அனுபவம் உண்டு.

**இடபம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் கோபம், பதற்றம் உண்டாகலாம். கணவன், மனைவி இடையே சிறு சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். தூக்கமின்மையால் உடல் சோர்வு, அசதி ஆள்கொள்ளும். நீண்ட நாள்களாக நிறுத்தி வைத்திருந்த வேலை ஒன்றை, திடீரெனச் செய்ய நேரிடலாம்.

**மிதுனம்:** மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். பெற்றோர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள். பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்க நேரிடலாம். உறவினருக்கு தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். சுகமான அனுபவம் பெறலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கச் செல்லும் சிலருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம்.

**கடகம்:** எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பிள்ளைகளின் தவறுகளை சுட்டிக் காட்டி, அவர்களை நல்வழிப்படுத்துவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கவுரவம் அதிகரிக்கும். நாளை செய்ய வேண்டிய வேலைகளுக்காக, இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். கைமாத்தாக கொடுத்த பணம் திருப்பி வரலாம்.

**சிங்கம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்துச் செயற்படுவீர்கள். மாறுபட்ட அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உங்களின் திறமைக்கு சவால் விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பிரியமான ஒருவரின் சந்திப்பு நிகழும். சிறிய செலவுக்காக யோசித்த நீங்கள், ஒரு காரியத்துக்காகப் பெரிய அளவில் செலவு செய்யலாம்.

**கன்னி:** என்னதான் பொறுப்பாக வேலை செய்தாலும், சிலர் உங்களை குறை சொல்லலாம். பேராசைகளால் அவதிகளுக்கு ஆட்படலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். குடும்ப பெரியவர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். பயணத் தடை, காரியத் தடைகளைச் சந்திக்கலாம்.

**நாளை**

பங்குனி 14 செவ்வாய்க்கிழமை 27.03.2012
திதி: பஞ்சமி பி.ப 06.06 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ. 10.39 வரை
சுபநேரம்: 10.44-12.14 வரை,
ராகு காலம்: 03.14-04.44வரை

**துலாம்:** சிலரிடம் சமயோசிதமாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள், சிலரின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பிரபலங்கள் சந்திப்பு நிகழும். தந்தை வழியில் எதிர்பாராத உதவிகளைப் பெறலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.

**விருச்சிகம்:** எண்ணிய எண்ணங்கள், எண்ணம்போல நிறைவேறும். நல்லவர், கெட்டவர் என்று பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு, உதவி செய்வீர்கள். உடன் பிறப்புக்கள் வழியில் உருவான மன உளைச்சல் குறையும். குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். பல நாள்களாக வாங்க நினைத்த பொருள் ஒன்றை, இன்று திடீரென வாங்க நேரிடலாம்.

**தனுசு:** பழைய அனுபவம் ஒன்றை அசை போட்டுப் பார்த்து, புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். குடும்ப உறுப்பினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள்முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். உறவினர்கள் சிலருடன் முக்கியமான வேலையாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களுக்காகச் செலவு செய்வீர்கள்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர்கள், உங்களின் கருத்துக்களுக்கு, மாற்று கருத்துக்கள் சொல்லி எரிச்சல் உண்டாக்கலாம். சில விடயங்களில் அவசரப்பட்டு முடிவு எடுத்து விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். சிலர் உங்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி காரியம் சாதிக்கலாம்.

**கும்பம்:** செல்வாக்கும், அதிகரிக்கும் நாள். அயலார் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சில விடயங்களில் நன்றியுடன் நடந்து கொள்வீர்கள்.

**மீனம்:** திட்டமிட்ட சில வேலைகளை சரியான நேரத்துக்கு, முடிக்க முடியாமல் இழுபறிகளைச் சந்திக்கலாம். உறவினர்கள், சிலர் உங்களின் எதிரே நன்றாகப் பேசி விட்டு, மற்றவர்களின் [illegible] குடும்ப உறுப்பினர்களை சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பீர்கள். பெண்கள், பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 4 | | | | 7 | |
| | | 9 | 5 | 7 | 8 | 6 | | 4 |
| | | 7 | | | | 8 | 5 | 2 |
| | | 5 | 8 | 2 | | | | |
| 9 | | | 7 | | 1 | | | 6 |
| | | | | 5 | 9 | 2 | | |
| 5 | 9 | 2 | | | | 4 | | |
| 7 | | 6 | 9 | 8 | 5 | 1 | | |
| | 3 | | | | 6 | 7 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 9 | 3 | 4 | 6 | 7 | 8 | 2 |
| 2 | 4 | 6 | 7 | 5 | 8 | 9 | 1 | 3 |
| 3 | 7 | 8 | 9 | 2 | 1 | 4 | 5 | 6 |
| 9 | 8 | 2 | 5 | 3 | 7 | 1 | 6 | 4 |
| 6 | 3 | 1 | 2 | 8 | 4 | 5 | 7 | 9 |
| 7 | 5 | 4 | 6 | 1 | 9 | 2 | 3 | 8 |
| 1 | 6 | 3 | 4 | 9 | 5 | 8 | 2 | 7 |
| 8 | 9 | 7 | 1 | 6 | 2 | 3 | 4 | 5 |
| 4 | 2 | 5 | 8 | 7 | 3 | 6 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் மீண்டும் சீநோர்



காரைநகர்,மார்ச் 26

காரைநகர் சீநோர் நிறுவனத்தை மீள இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிறுவனத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த வாரம் கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சின் அதிகாரிகள் சீநோர் நிறுவன முகாமையாளர், நிதி வழங்க உள்ள இத்தாலி நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய குழு நேரில் பார்வையிட்டு சென்றுள்ளது.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் இயங்கி நூற்றுக்கு மேற்பட்ட வட பகுதி இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்த இந்த நிறுவனம் கடந்த கால யுத்தத்தால் முற்றாகச் சேதமடைந்து இயங்காது இருந்தது.

இந்தக் கட்டடத் தொகுதி பல மில்லியன் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டு கண்ணாடி இழைப் படகுகள் உற்பத்தி, கடலுணவு பதனிடல் போன்ற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம-250)

## மேர்வினின் கருத்து அர்த்தமற்றது

### இலங்கையின் கொள்கையாக அதை விளங்கக்கூடாது: பீரிஸ்

கொழும்பு, மார்ச் 26

மேர்வின் சில்வா வெளியிட்ட கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அதை சரி என்று வாதிட அந்தக் கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது. இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வா இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்களுக்கு கை, கால்கள் உடைக்கப்படும் என தெரிவித்த கருத்துக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:-

இவ்வாறான அறிக்கையை யாரும் வெளியிடுவதாலும் குறிப்பாக வன்முறையைத் தூண்டிவிடக்கூடிய வகையில் வரும் அறிக்கைகளை நான் சகித்துக்கொள்வதில்லை. ஒழுக்கமான நற்பண்புடைய மனிதர்கள் இவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டு நியாயப்படுத்தமாட்டார்கள்.

ஒரு சிலரின் தனிப்பட்ட கருத்தை வைத்துக்கொண்டு மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்பில் இலங்கையின் கொள்கை இதுதான் என்று சர்வதேசம் விளங்கிக் கொள்ளக்கூடாது. எமது அரசியல் கொள்கைகள் அப்படியானவை அல்ல எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்குச் சென்று எமது நாட்டுக்கு எதிராகக் கருத்துகளைக் கூறும் ஊடகவியலாளர்கள் நாட்டுக்குள் கால்வைத்தால் அவர்களின் கை, கால்களை உடைப்பேன் என்று பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

கிரிபத்கொடையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியிருந்தார்.

(உ-10)

## தமிழ் கொலை




மன்னார்,மார்ச் 26

முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகை தமிழ் எழுத்துப் பிழையுடன் காணப்படுகின்றது.

இதில் முக்கியமான முழங்காவில் என்னும் பெயர் 'முலங்காவில்' என எழுதப் பட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் பலர் கடமையாற்றுகின்ற போதிலும் இந்தத் தவறு இதுவரை திருத்திக் கொள்ளப்படவில்லை.

வன்னியில் தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயருக்கு மாற்றப்படுவதுடன், அங்கு நடைபெறும் நிகழ்வுகளுக்காகத் தயாரிக்கப்படும் பதாதைகள், விளம்பரப் பலகைகளில் தமிழ்ப்பெயர்கள் கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. தமிழ் நன்கறிந்த அரச உத்தியோகத்தர்கள் இருக்கும் நிறுவனங்களில் கூட இவ்வாறான தவறுகள் காணப்படுகின்றன.

விளம்பரப் பலகைகள், காட்சிப் பதாதைகளில் ஊர்களின் பெயர்களைக் காட்சிப்படுத்தமுன் உரிய அதிகாரிகள் அவற்றை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் ஏன மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (க-12)


## Jaffna Sivagamy.Com

### இணையத்தளம் ஆரம்பநிலையிலுள்ளது

*. நாட்டின் 9 மாகாண தமிழ்பேசும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப்பார்வையிடலாம்

*. மங்கல, பொது நிகழ்வுகள், மரண அறிவித்தல், நினைவஞ்சலிகள் இலவசமாக இணைக்கப்படும்.

*. இணைய, மின்னஞ்சல் அறிவுடன் கலைத்துவ ஆற்றலுள்ளோர் பிரதேச ஊடகவியலாளராகச் சேர்க்கப்படுவார்கள்.

*. தமிழ், ஆங்கிலம் மொழி பெயர்ப்பாளர்கள் இணைக்கப்படுவார்கள்.

*. சுயவிவரம், தகைமைகள், கைத்தொலைபேசி இலக்கத்துடன் sivagamy26vt@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்


## பிரேரணை எதிரொலி: பொருள் விலை உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை மேலும் கிடுகிடுவென அதிகரித்துள்ளது.

ஜெனிவாவில் அமெரிக்கா நிறைவேற்றிய இலங்கைக்கு எதிரான திர்மானத்தை அடுத்தே பொருள்களின் விலைகள் திடீரென எகிறியுள்ளன.

குறிப்பாக கடந்த புதன்கிழமை ஒரு கிலோ சீனியின் விலை 93 ரூபாவாக விற்று மறுநாள் வியாழக்கிழமை 98 ரூபாவாக உயர்ந்துள்ளது. அதனைவிட மைசூர் பருப்பு, சமையல் எண்ணை, செத்தல் மிளகாய், மல்லி, கடலை போன்ற பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

சீனியின் விலை அடுத்த சில நாள்களில் கிலோ நூறு ரூபாவையும் தாண்டலாம் என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். கொழும்பில் சீனியின் விலை திடீரென அதிகரித்தமையே இங்கும் அதன் விலை அதிகரிப்புக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைவிட கோதுமை மா மற்றும் ஏனைய பொருள்களின் விலையும் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(10-17)


### மாபிள் பதித்தல்

அனுபவம் உடையவரால் மாபிள் பதித்தல் வேலைகள் தரமாக தங்கள் விருப்பங்களுக்கு ஏற்றவாறு குறித்த காலத்துக்குள் நியாயமான கட்டணத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:- 0775521745


## மரண அறிவித்தல்கள்

### பொன்னன் நடராசா

*(சாரதி, வலி.கிழக்கு தென் பகுதி- நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்)*



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் நடராசா நேற்று (25.03.2012) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் இராசமலர் (முகாமைத்துவ உதவியாளர் - வலி.கிழக்கு தென்பகுதி- நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் பாசமிகு கணவனும் தனுசியா (விபுலானந்தா நுண்கலைப் பீடம் - கிழக்கு பல்கலைக்கழகம்), அனுசியா (க.பொ.த - உயர்தரம், வர்த்தகப் பிரிவு-யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), கௌசிகா (மாணவி- யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகம்மா, இராசம்மா, தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.03.2012) ஞாயிற்றுக் கிழமை நீர்வேலியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி.

தகவல்
ந.இராசமலர் (மனைவி)

### சின்னையா பத்மநாதன்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பத்மநாதன் நேற்று (25.03.2012) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் கோபிகா (ஆசிரியை, முல்லைத்தீவு குமிழி முனை மகாவித்தியாலயம்), லவகோபன் (லண்டன்), கௌசிகா, தர்சிகா, சசிக்கா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவப்பிரகாசம் மற்றும் கனகராஜா ஆகியோரின் சகோதரனும் நாகராசா, தர்மசேனா, ராஜேஸ்வரி காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2012) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கலைவாணி மக்கள் வாழ் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

### திருமதி சற்குணேஸ்வரி மகாலிங்கம் (மம்மி)



யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், இல. 261/2 கண்டி வீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணேஸ்வரி மகாலிங்கம் நேற்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

261/2, கண்டிவீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

தகவல்: மகாலிங்கம்
(டடா)- கணவர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நாகராஜா



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகராஜா நேற்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செம்பாத்தை தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) பாசமிகு கணவரும் நாகேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாலன் (லண்டன்), லிங்கேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் அன்பு மாமனும் சுமனா (லண்டன்), சுமிதா (லண்டன்), கஜனன் (லண்டன்), கபிலா (யாழ்.பல்கலைக்கழக மாணவி), நந்தகுமார் (லண்ன்), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜம்ஸி (லண்டன்), ஜனோன்ஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2012) திங்கட்கிழமை பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்
குடும்பத்தினர்
(ஈசன்- மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த அணி ஜொலிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 3ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கிரிக்கெட் கழக அணி தெரிவு நிகழ்வில் ஜொலிஸ்ரார் அணியினர் முதலாமிடத்திலும், யாழ் பல்கலைக்கழக அணியினர் இரண்டாவது இடத்திலும், கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியினர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

ஜொலிஸ்ரார் அணியினர் பங்குபற்றிய 5 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்று 23.2 புள்ளிகளுடன் முதலாம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணியினர் பங்குபற்றிய 5 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்று 23 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்திலும், கே.சி.சி.சி. அணியினர் பங்குபற்றிய 3 போட்டிகளில் 2 போட்டிகளில் வெற்றி பெற்று 12.6 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

யாழ்.ஜொனியன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அந்தப் போட்டியில் வெற்றி பெற்று 7.9 புள்ளிகளைப் பெற்று 4ஆவது இடத்திலும், அரியாலை சென்றல் அணி 3 போட்டிகளில் பங்குபற்றி வெற்றி எதுவும் பெறாத நிலையில் 3.5 புள்ளிகளைப் பெற்று 5ஆவது இடத்திலும், யாழ்.சென்றல் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அந்தப் போட்டியில் வெற்றி பெறாத நிலையில் 2.5 புள்ளிகளைப் பெற்று 6 ஆவது இடத்திலும் உள்ளன.

**முதலாவது இடத்தைப் பெறும் அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணிப்பரிசும் வழங்கப்படும். இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகளுக்கும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தி வரும் முக்கோணப் போட்டிக்கு தகுதியுடையவர்கள்**

2010 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக அணி முதலாம் இடத்தையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2ஆம் இடத்தையும், பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டு யாழ். சென்றல் அணியினர் 3ஆம் இடத்தினையும், 2011 ஆம் ஆண்டு கே.சி.சி.சி அணியினர் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் 1 ஆவது இடத்தைப் பெறும் அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணிப்பரிசும் வழங்கப்படும். இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகளுக்கும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தி வரும் முக்கோணப் போட்டிக்கு தகுதியுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-23)

## பெண்களுக்கான வலைபந்து வெற்றியீட்டிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:-

15 வயதுப் பிரிவு

* முதலாமிடம்-அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
* இரண்டாமிடம்-பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாலயம்
* மூன்றாமிடம்- உடுவில் மகளிர் கல்லூரி

17 வயதுப் பிரிவு

* முதலாமிடம்-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
* இரண்டாமிடம்-அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
* மூன்றாமிடம்- தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

19 வயதுப் பிரிவு

* முதலாமிடம்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
* இரண்டாமிடம்-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
* மூன்றாமிடம்-மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி

(கு-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 4 மணிக்கு, மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டி கருணகரன் விளையாட்டுக் கழகம்.

(ஒ-23)





தாச்சி 1ஆம் இடம் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம்.

தாச்சி 2ஆம் இடம் கைதடி மத்தி உதய சூரியன் விளையாட்டுக்கழகம்.

## தாச்சி சுற்றுப்போட்டியில் கைதடி வளர்மதி சம்பியன்

கைதடி, மார்ச் 26

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றிக் கேடயத்தைக் கைப்பற்றியது.

மேற்படி போட்டிகள் இந்த மாதம் 3ஆம் திகதி இரவு மின்னொளியில் மிகக் கோலாகலமாக ஆரம்பமாகின. இருபது தாச்சிக் கழகங்கள் போட்டியில் பங்கு பற்றிய போதும், இறுதிச் சுற்றில் கைதடி மத்தி உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

கடந்த 23ஆம் திகதி விறுவிறுப்பாக ஆரம்பித்த இந்த இறுதிப் போட்டியின் முதல் 5 நிமிடத்தில் கைதடி மத்தி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் இரண்டு புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் நின்றதுடன் தொடர்ந்தும் ஒரு புள்ளியைப் பெற்று முன்னிலை வகித்தது. ஆனாலும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மிகப் பிரயத்தனத்தின் மத்தியில் தொடர்ந்து புள்ளிகளைப் பெற்று முன்னேறி வந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து இடம் பெற்ற போட்டியில் இரு கழகங்களும் புள்ளி எடுக்கும் நிலை இலகுவாக வந்தும் பல தடவைகள் அதைத்தவறவிட்டன. ஆனாலும் அதைச் சவாலாக எடுத்து இரு கழகங்களும் மோதி போட்டி முடிவில் கைதடி மத்தி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 4 புள்ளிகளையும், கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் 7 புள்ளிகளையும் பெற்று, 3 புள்ளிகள் வித்தியாசத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றிக்கேடயத்தை சுவிகரித்துக் கொண்டது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சு.லபீந்திரன் (சின்னப்பாராளன்) தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி போட்டிக்கு நடுவர்களாக யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தைச் சேர்ந்த கே.ஜினதாஸ், கே.ஆனந்த ஜெஸ்கரன் ஆகியோர் மிகச் சிறப்பாகக் கடமை புரிந்தனர். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் எஸ்.சண்முகலிங்கம் வெற்றியீட்டிய கழகங்களுக்கு பரிசில்களை வழங்கினார். (ஒ-288)

## ஐங்கரன் அணி சம்பியன்

சாவகச்சேரி, மார்ச் 26

தென்மராட்சி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சிங்கர் வெற்றிக் கிண்ண கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் வி.க அணி சம்பியனாகியது.

மட்டுவில் மோகனதாஸ் வி.க மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளின் இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் வி.க அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின.

மூன்று சுற்றுக்கள் கொண்ட போட்டித் தொடரில் முதலாவது சுற்றினை மோகனதாஸ் அணியும், இரண்டாவது, மூன்றாவது சுற்றினை ஐங்கரன் அணியும் வெற்றி பெற்று ஐங்கரன் அணி சம்பியனாகியது.

(ஒ-09)

## திருமலையில் தேசிய விளையாட்டுகள் ஆரம்பம்



விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் தேசிய விளையாட்டு விழாவின் திருகோணமலை மாவட்டத்திற்கான விளையாட்டுப்போட்டிகள் கடந்த சனிக்கிழமை திருகோணமலை மைக்கேசியர் விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளன.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி, வலைபந்தாட்டப்போட்டி மற்றும் மல்யுத்தப்போட்டி என்பன நேற்று முன்தினம் நடைபெற்றன.

நேற்றையதினம் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் மற்றும் வேகநடைப் போட்டி என்பன நடைபெற்றன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் உட்பட்ட பிரதேச செயலக பிரிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த குழுக்கள் இந்த மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளன என்றும் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ச.விஜயநீதன் கூறினார்.

## புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பிரதேச மட்டத்தில் விசேட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு கற்பிட்டி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது என பிரதேச சபைத் தலைவர் எம்.எச்.எம்.மின்ஹாஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- "எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப்போட்டிகளில் கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் மாத்திரமே கலந்துகொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

இந்தப்போட்டிகளில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வடமேல் மாகாண முதலமைச்சர் சட்டத்தரணி அதுல விஜேசிங்க, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொள்வார்களெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அணிக்கு 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளதால், கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட அணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பப்படிவங்களை மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி, பொருளாதார மத்திய நிலையம், நுரைச்சோலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்".

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

இன ஒற்றுமையை ஏற்படுத்தும் முகமாக அமெரிக்க உதவி நிறுவனம் 'யூ.எஸ்.எயிட்'டின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேருவில லிங்கபுரம் கிராமத்தில் இளைஞர், யுவதிகளுக்கு கரப்பந்து விளையாட்டுக்கான உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைத்தது.

அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சுசன்வாற் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இவற்றை வழங்கிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தது என்ன?



ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியின் கடைசி பந்துப் பரிமாற்றத்தில், பாகிஸ்தான் அணி வீரர் ஸீமா நடந்து கொண்ட விதம் குறித்து ஆசிய கிரிக்கெட் சபையில் முறையீடு செய்துள்ளது பங்களாதேஷ் கிரிக்கெட் சபை.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் பங்களாதேஷ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 236 ஓட்டங்களை எடுத்தது. 237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கி இறுதிவரை அருமையாக விளையாடி வெற்றிக்கு அருகே வந்து கோட்டை விட்டது பங்களாதேஷ் அணி. அந்த அணி, கடைசி பந்துப்பரிமாற்றத்தில் 7 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில், அந்த பந்துப்பரிமாற்றத்தில் நிலைகுலைந்தது. இருப்பினும், கடைசி இரு பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பந்தை எதிர்கொண்ட முஹமதுல்லா ரியாத் பந்தை பௌண்டரிக்கு விரட்டினார். ஆனால், அவர்கள் இரண்டு ஓட்டங்கள் ஓடி எடுக்கும் நிலையில், பாகிஸ்தான் பந்துவீச்சாளர் ஸீமா வேண்டுமென்றே ரியாத்துக்கு நடுவே ஓடி அவர் ஓட்டம் எடுக்கும் வேகத்தை மட்டுப் படுத்தினார். மேலும் அவர் இரண்டாவது ஓட்டம் எடுத்து மூன்றாவது ஓட்டத்துக்கு ஓட முயன்றபோது குறுக்கே வந்து மீண்டும் அவர் ஓடுவதைத் தடை செய்தார். அந்த ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டிருக்குமானால் அந்தப் போட்டி சமநிலையில் முடிவுற்றிருக்கும்.

இந்தப் போட்டியின் கடைசி ஓவரின் போதான காணொலியை மீண்டும் மீண்டும் போட்டுப் பார்த்து கடுப்பான பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, பாகிஸ்தான் அணியினரின் இந்தச் செய்கையை குறிப்பாக, ஸீமாவின் இந்தச் செயலை எதிர்த்து ஆசிய கிரிக்கெட் சபையிடம் முறையீடு செய்துள்ளது.

மேலும், பாகிஸ்தான் வீரர்களுக்கு எதிராக எழுத்து பூர்வமான முறைப்பாடு ஒன்றை ஆசிய கிரிக்கெட் சபைக்கும் சர்வதேச கிரிக்கெட் சபைக்கும் தெரிவிக்கப்போகிறார் எனபங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் எனாயத் ஹுசைன் சிராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ரியல் மாட்ரிட் அணியினால் பிரமாண்ட தீவு உருவாக்கம்!

## 100 கோடி டொலர் செலவில் கடலுக்குள் அமைக்கவுள்ளது.

நட்சத்திர கால்பந்து வீரர் ரொனால்டோ இடம்பெற்றுள்ள ரியல் மாட்ரிட் அணி அனைத்து வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான தீவை 100 கோடி டொலர் செலவில் கடலுக்குள் அமைக்கவுள்ளது.



வருகிற 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டி கட்டாரில் நடைபெறவுள்ளது. இதையொட்டி இலட்சக் கணக்கான இரசிகர்கள் கட்டார் வருவார்கள்.

இதனால் மேற்கு ஆசியாவுக்கு வரும் உலக கால்பந்து ரசிகர்களைக் கவரும் விதத்தில் பிரமாண்டமான தீவு ரிசார்ட் ஒன்றை அமைக்க ரியல் மாட்ரிட் முடிவு செய்துள்ளது.

உலகின் செல்வச்செழிப்புமிக்க நகரமான டுபாய் அருகே கடலுக்குள் இந்தத் தீவு ரிசார்ட் அமைக்கப்படவுள்ளது. இதற்காக ரூ.100 கோடி டொலர் செலவிட ரியல்மாட்ரிட் அணி தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரமாண்டமான தீவு ரிசார்ட்டில் 450 அறைகளுடன் கூடிய 25 மாடிகள் கொண்ட ஐந்து நட்சத்திர தங்கும் விடுதி, அதோடு 60 தனித்தனி பங்களாக்களும் கட்டப்பட உள்ளன. மிக பிரமாண்டமான பொழுதுபோக்கு பூங்கா ஒன்றும் இந்தத் தீவு ரிசார்ட்டில் அமைக்கப்படவுள்ளது. மேலும் கடற்கரை அருகில் 5 நட்சத்திர அந்தஸ்துடன் புதிய கால்பந்து மைதானம் மற்றும் அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இந்த தீவு கிட்டத்தட்ட ஒரு குட்டி ஸ்பெயின் போலவே இருக்கும். வரும் 2015ஆம் ஆண்டு இந்தத் தீவு ரிசார்டின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்து விடும் என்று ரியல்மாட்ரிட் அணி அறிவித்துள்ளது.

# பொலார்டின் அதிரடி சதத்துடன் மே.இ.தீவுகளுக்கு 2ஆவது வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்குமிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சென் லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அட்ரியன் பரத்தின் சிறந்த துடுப்பாட்டம் காரணமாக சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 35.4 பந்து பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுக்களைஇழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அன்ட்ரே ரசல், கெய்ரன் பொலார்ட் ஜோடி 94 ஓட்டங்களை 10.4 பந்து பரிமாற்றங்களில் குவித்தது. 32 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த அன்ட்ரே ரசல் ஆட்டமிழந்ததும் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் டெரன் சமி, கெய்ரன் பொலார்ட் ஜோடி மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. 70 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்ற கெய்ரன் பொலார்ட் இறுதி ஓவரின் 3ஆவது பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதி 12 ஓவர்களில் 145 ஓட்டங்களைக் குவித்திருந்தது. அணித்தலைவர் டெரன் சமி இறுதிவரை ஆட்டமிழக்காது 13 பந்து வீச்சுகளில் 31 ஓட்டங்களைக் குவித்தார்.

295 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதலாவது விக்கெட்டாக டேவிட் வோணரை இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே இழந்தது. இறுதிநேரத்தில் பிரட் லீ சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போதிலும், 46.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களை மாத்திரமே பெற்று, 42 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிரட் லீ 48 பந்துகளில் 59 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தொடர்ச்சியாக இத்தொடர் முழுவதும் பிரகாசித்து வரும் சுனில் நரைன் 10 ஓவர்களில் 21 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

றோச், பிராவோ, சமி, ரசல் ஆகியோர் தலா 2விக்கெட்டுகளையும், பொலார்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக வேகமான சதத்தையும், விக்கெட் ஒன்றையும் கைப்பற்றிய கெய்ரன் பொலார்ட் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் நிறைவுபெற்றுள்ள 4 போட்டிகளின் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-1 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கின்றது.

# என் மகளை தள்ளிவிட்டதால் தான் ரசிகரை தாக்கினேன் - சயிட் அப்ரிடி

விமான நிலையத்தில் தன் மகளைத் தள்ளி விட்டதால் தான் ரசிகரைத் தாக்கினேன் என விளக்கமளித்த அப்ரிடி மன்னிப்புக் கேட்டார்.

பங்களாதேஷில் நடைபெற்ற ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்று கிண்ணத்தோடு நாடு திரும்பிய பாகிஸ்தான் அணிக்கு கராச்சி விமான நிலையத்தில் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஏராளமான ரசிகர்கள் விமான நிலையத்தில் திரண்டிருந்தனர். முன்னாள் அணித் தலைவர் அப்ரிடியிடம் முண்டியடித்துக் கொண்டு ரசிகர்கள் கையெழுத்து கேட்டனர். இதில் ஆத்திரம் அடைந்த அப்ரிடி இரசிகர் ஒருவரை அடித்து- உதைத்து தாக்கினார்.அப்போது அப்ரிடியின் சகோதரர் முஷ்டாக் குறுக்கிட்டு அவரைத் தடுத்தார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. ரசிகரை அவர் கோபத்தில் நாக்கை கடித்துக் கொண்டு தாக்குவது ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக அப்ரிடி கூறும் போது:- ''காரின் அருகே நின்று கொண்டிருந்த எனது மகளை கீழே தள்ளி விட்டு இரசிகர்கள் என்னை நோக்கி நெருங்கியதால் ஆத்திரம் அடைந்து தாக்கினேன். ஆனால் எனது கோபத்தைக் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும், நான் தவறாக நடந்து கொண்டது எனக்கு புரிந்தது'' என்று அவர் கூறினார்.






# 26ஆவது லீக் போட்டி சமநிலை ஆனது



ஆஸ்திரேலியன் 'ஏ' லீக் கால்பந்து தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. இதன் 26ஆவது லீக் போட்டியில் மெல்போர்ன் ஹார்ட்- அடிலெய்டு யுனைடெட் அணிகள் மோதின.

போட்டியின் 35ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில், அடிலெய்டு அணியின் செர்கினோ ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதியில் மெல்போர்ன் வீரர் பபாலி (68ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, 1-1 என்ற கணக்கில் போட்டி சமநிலை ஆனது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் முடிவில், செண்ட்டிரல் கோஸ்ட் (47 புள்ளி), பிரிஸ்பேன் ரோர் (46), பெர்த் குளோரி (40) அணிகள் முதல் மூன்று இடத்தில் உள்ளன.

# சிறந்த டென்னிஸ் வீரர் - பெடரர்

அமெரிக்க டென்னிஸ் சனல் ஒன்று நடத்திய போட்டியில், சிறந்த டென்னிஸ் வீரராக சுவிட்சர்லாந்தின் பெடரர் தேர்வு செய்யப்பட்டார். 'ஓல் ரைம் கிரேட்டஸ்ட் 100' என்ற பெயரில், அமெரிக்காவின் டென்னிஸ் சனல் ஒன்று கடந்த ஐந்து நாள் தொடரொன்றை நடத்தியது. இதில் ஆஸ்திரேலியாவின் ராட் லெவரை முந்தி, பெடரர் முதலிடம் பெற்றார். ஜேர்மனியின் ஸ்டெபி கிராப், மூன்றாவது இடம் பிடித்தார். நவ்ரத்திலோவா, சாம்பராஸ் (அமெரிக்கா), நடால் (ஸ்பெயின்), பிஜோர்ன் போர்க் (சுவீடன்), மார்கரெட் கோர்ட் (ஆஸி) மற்றும் அமெரிக்காவின் கிறிஸ் எவர்ட், பில்லி ஜீன் கிங் ஆகியோர் 'டொப்-10' வரிசையில் இடம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vivekananda Academy

திருமணம் முடித்து மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான தூதரக பரீட்சைகளுக்கு தயார்படுத்தும்

ஜேர்மன் - Deutsch (டொச்)
நெதர்லாந்து - Dutch (டச்)

புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. மற்றும் French, Italian புதிய வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

**Vivekananda Academy**

No - 221/1 Power House Road, Jaffna. Tel - 021-2220393, 021- 321 - 6928

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா நடராசா



காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் தற்பொழுது 178, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா நடராசா நேற்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (நடராசா & SONS, கம்பளை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராமநாதன் மற்றும் நடராசா, தியாகராசா, தருமகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சறோஜினிதேவி, விவேகானந்தன், சாரதாதேவி, சிவதேவி, சாந்தினிதேவி, லோகேஸ்வரி (ஆசிரியை- யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), காலஞ்சென்ற தருமதேவன் (முன்னாள் வர்த்தகர்-கம்பளை), இந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் கமலாகரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்-தீவகம்), ஏகாம்பரம் (பொது முகாமையாளர்- கைத்தொழில் அமைச்சு, கொழும்பு), கனகலிங்கம் (பிரபல வர்த்தகர், வவுனியா), கணேசன் (முன்னாள் ஆசிரியர்-சென். பற்றிக்ஸ் கல்லூரி), சிவகுமாரன் (ஆசிரியர்-சைவப்பிரகாச வித்தியாலயம் கந்தர்மடம்), உமாதேவி, முருகானந்தன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பாலகாந்தன் (முகாமையாளர்-செலான் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (26.03.2012) பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

178, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# அலுவலர் தேவை

யாழ்ப்பாணம், நெல்லியடி, அச்சுவேலி கிளை களில் பணிபுரிய A/L சித்தியுடையவர்கள் சுயவிவரக்கோவையுடன் இன்று அல்லது நாளை காலை 9 மணி முதல் 10 மணி வரை நேரில் வரவும். (பட்டதாரிகள் வேண்டாம்)

**MY WAY**

182, Stanley Rd, Jaffna.T.P-0773363456

# வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள கூல்பார் ஒன்றிற்கு சப்பிளேயர், ரீமேக்கர் உடன் தேவை. சம்பளம் நாள் ஒன்றுக்கு 600/=. (மதிய உணவுடன்)
தொடர்புகளுக்கு:- 0778304922

# இங்கிலாந்தின் விசா

A/L சித்தி மட்டும் போதுமானது.
ஆங்கிலப் பரீட்சை தேவையில்லை.

**திசைகாட்டி (பிறைவேட்) லிமிட்டெட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்



37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

115 A, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544

23 1/3, மகேஸ்வரி லேன்,
கொழும்பு - 6.
0112366925

மெல்பேர்ண்
ஆஸ்திரேலியா
0061390437100

# SAAMSON ENGLISH - 3

மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி

**ஆங்கிலத்தைப் படிக்காதீர்கள்! பழகுங்கள்**

உலகில் எந்தவொரு மனிதனும் தான் சிறுகுழந்தையாக இருக்கும் போது CD, புத்தகத்தின் மூலமாக கற்றுவிட்டு தன் தாய்மொழியைப் பேசத் தொடங்குவதில்லை. தன் சூழலில் உள்ளவர்கள் பேசுவதைப் பார்த்தே அதுபோல தானும் பேசப் பழகுகிறான்.

ஒரு மொழியைப் பேசப் பழகுவதற்கான சரியான வழி புத்தகம், CD பயன்படுத்துவதல்ல. மாறாக மற்றவர்களுடன் சிறிது சிறிதாக பேசிப் பழகுவதே ஆகும்.

இலங்கையிலேயே முதன்முறையாக புத்தகம், CD எதுவுமின்றி மாணவர்களை நேரடியான ஆங்கில உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்தி சரளமாக எவரையும் (15 வயதிற்கு மேல்) ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கும் **SAAMSON** நிறுவனத்தில் நீங்களும் இணைந்து பயிற்சிபெற விரும்புகிறீர்களா?

**புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம் - 31.03.2012**

சனி, ஞாயிறு பிரிவுகள் (ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே)
பிரிவு I 08 - 10
பிரிவு II 10 - 12
பிரிவு III 01 - 03
பிரிவு IV 03 - 05

**SAAMSON ENGLISH**
279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்.
தொ.பே. 077 621 4567

# மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)


தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499




விற்பனையாகின்றது
இலங்கையின் சகல பிரபல புத்தகசாலைகளிலும்
உயிரோட்டமான பொது அறிவு நூல் இணையத்தள சேவையுடன்

# G.K for All 2012 + www.gkuma.com

பொது அறிவு என்பது பரந்தளவிலான அடிப்படைத் தகவல்களுடன் (G.K for All 2012 நூல் மூலம்) செக்கன் இடைவெளிகளில் மாற்றமடையும் நடைமுறைத் தகவல்களை ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியும் (www.gkuma.com இணையம் மூலம்) இலவசமாக பிரவேசித்து நூலின் குறித்த பக்கங்களில் சுயமாக update செய்து மேற்கொள்ளப்படும் உயிரோட்ட முறையிலான கற்றலே வெற்றிக்கான திறவுகோல் ஆகும்




இணையத்தில் உட்பிரவேசிக்க தயாராகுங்கள்
2012 - மார்ச் 30 இல்
முதலாவது நடைமுறை தகவல்களுக்கு

நெறியாள்கை
திரு.P.உமாசங்கர்
மருதானை தொழில்நுட்பக் கல்லூரி
கொழும்பு - 10

ஊடக அனுசரணை :
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



O/L தகைமையுடன் பட்டதாரி ஆகும் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தகைமைகள் O/L ஐந்து (5) பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்



1. முதல் இரண்டு வருடங்களுக்கு அடிப்படை நிலை (Foundation Course) கல்வியைத் தொடர வேண்டும்.

பிரிவு 1: கணிதம் உளவியல் வணிகவியல் சூழ்நிலைக்கல்வி
பிரிவு 2: கணிதம் அரசியல் புவியியல், சிறப்புத் தமிழ்
பிரிவு 3: வணிகவியல், வங்கியியல், கணக்கியல், பொருளியல்
பிரிவு 4: வரலாறு, பொருளியல், அரசியல், சூழ்நிலைக்கல்வி
பிரிவு 5: வரலாறு, புவியியல், உளவியல், சிறப்பு தமிழ்

3. இப்பிரிவுகளுக்குள் ஏதாவது ஒரு பிரிவினை நீங்கள் தெரிவு செய்யலாம்.
4. கிழமை நாள்களுக்குரிய வகுப்புக்கள் ஆரம்பம் 02.04.2012 காலை 8 மணி
வார இறுதி நாள்கள் (சனி, ஞாயிறு) வகுப்புக்கள் ஆரம்பம் 07.04.2012 காலை 8 மணி
5. இவ் இரண்டு வருட கற்கை நெறியினை நிறைவு செய்த பின்னர் மூன்று வருட கற்கை நெறியாக ஆ.அ, ஆஞிணிட், ஆண்ஞி ஆகிய பட்ட நெறியினை நிறைவு செய்ய முடியும்.
6. இப் பட்டநெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

**முக்கிய குறிப்பு:**

A இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்கள் மூன்று வருட கற்கை நெறியாக B.A, Bcom, Bsc ஆகிய நெறியினை நிறைவு செய்து கொள்ளலாம். இவர்களுக்கு அடிப்படை நிலைக்கல்வி (ஊணிதணஞீச்ஞிடிணிண இணிதஞூண்ஞ) தேவை இல்லை.

1. பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
2. பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரிப் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
தொலைபேசி இல: 2228148

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.